PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

நாலு அத்தியாயம்

5543

ரவீந்திரநாத் டாகுர்

நாலு அத்தியாயம்

ரவீந்திரநாத் டாகூர்

PRESENTED BY:
V. PR. PL. W.
VISWANATHAN CHETTIAR

த. நா. சேனாபதி, எம். ஏ.

மொழிபெயர்ப்பு

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை-4

பதிப்புரிமை] [விலை ரூ. 1-12-0

நாலு அத்தியாயம்

ஒரு குறிப்பு

பிரம்ம பாந்தவ உபாத்தியாயர் 'ட்வெண்டியெத் செஞ்சுரி' (Twentieth Century) என்ற மாதப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த சமயம், புதிதாக வெளியான என்னுடைய 'நைவேத்திய' என்ற புத்தகத்தைப்பற்றி அதில் ஒரு விமரிசனம் எழுதியிருந்தார். அதற்குமுன் கவிதையை ஒரு முகமாக அப்படி எவரும் புகழ்ந்ததில்லை. அது முதல் அவரோடு நெருங்கிப் பழக நேர்ந்தது.

அவர் ரோமன் கத்தோலிக் சந்நியாசி; பெரிய வேதாந்தியுங்கூட. தேஜஸ்வி; அஞ்சா நெஞ்சம் படைத்தவர்; தியாகி; விசேஷமான கல்வி கேள்வி உடையவர். அபார குணங்கள் பொருந்தியவர். தத்துவ விசாரணையில் ஆழ்ந்த அறிவு உண்டு அவருக்கு. இதனால் அவரிடத்தில் எனக்கு மிகுந்த சிரத்தை ஏற்பட்டது.

சாந்திநிகேதன ஆசிரமத்தில் வித்தியாலயம் ஸ்தாபித்தபோது அவர்தாம் ஆரம்பத்தில் எனக்கு உதவியாக இருந்தார். எத்தனையோ நாள், என்னோடு ஆசிரமத்தை அடுத்திருக்கும் கிராமப் பாட்டையில் உலாவிக்கொண்டே தத்துவ சம்பந்தமான பல சிக்கல்களைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். அதை இப்போது நினைத்துப் பார்த்தால்கூடப் பெரிய ஆச்சரியமாய் இருக்கிறது.

இந்தச் சமயத்தில்தான் கர்ஸன் பிரபு வங்கப்பிரிவினை விஷயத்தில் துளியும் அசைந்து கொடுக்காமல் இருந்தார். நாட்டில் ஹிந்து-முஸ்லிம் சச்சரவு தலையெடுத்ததற்கு

இதுவே மூல காரணம். அது நாளடைவில் தாய்மொழி, இலக்கியம், கலாசாரம் எல்லாவற்றையும் கண்ட துண்டமாக்கி வங்காளிகளையே கோழைகளாக்கிவிடப் போகிறது என்று தேசத்தில் பெருங்கலக்கம் மூண்டது. சட்ட வரம்புக்கு உட்பட்ட கிளர்ச்சியினால் ஒரு பலனும் ஏற்பட வில்லை. அப்போது இந்தியா மந்திரியாக இருந்த மார்லி பிரபு, "செய்தது செய்ததுதான். அதை மாற்ற முடியாது" என்று சொல்லிவிட்டார். தேசமெங்கும் ஒரே குழப்பம். திடீரென்று ஒரு நாள் இந்தச் சந்நியாசியும் அந்தச் சுழலில் இறங்கிவிட்டார். 'சந்தியா' என்னும் பத்திரிகை ஒன்றைச் சொந்தமாகவே ஆரம்பித்தார். அதில், தீவிரமான பாஷையில் தம் ஆத்திரத்தையெல்லாம் கொட்டித் தீர்த்தார். நாட்டில் எல்லாருடைய ரத்தமும் கொதித்தெழுந்தது. வங்காளத்தில் பயங்கரப் புரட்சி இயக்கம் ஏற்படப் போவதன் சூசனை இதில்தான் முதல் முதல் வெளியாயிற்று. துறவியும் வேதாந்தியுமாகிய என் நண்பர் இப்படி ஒரேயடியாக மாறிவிடுவார் என்று நான் எண்ணவே இல்லை.

அப்புறம் வெகுநாள்வரை அவரைக் காணவில்லை. ஒரு வேளை, ராஜீய சம்பந்தமான அபிப்பிராய பேதம் காரணமாக நம்மோடு பேசப் பிடிக்கவில்லை போலும் என்று எண்ணினேன்.

பல இடங்களில் பல கோரச் சம்பவங்கள் நிகழ்ந்தன. நாட்டில் கண்மூடித்தனமும் வெறியும் தலை விரித்தாடின. அப்போது, ஒரு நாள் எங்கள் ஜோடா ஸாங்கோ வீட்டின் மூன்றும் மாடி அறையில் தனியாக உட்கார்ந்திருந்தேன். திடீரென்று உபாத்தியாயர் உள்ளே வந்தார். சம்பாஷணைக்கிடையே முன் அவர் எழுதிய விமரிசனத்தைப் பற்றிய பேச்சும் வந்தது. கடைசியில் அவர் விடை

பெற்றுக்கொண்டு எழுந்து சென்றார். வாயிற்படி வரையில் போனவர் சட்டென்று திரும்பி, "ரவி பாபு, பழைய நிலையிலிருந்து எவ்வளவோ தாழ்ந்துவிட்டேன்" என்றார். இதைக் கூறிவிட்டுப் பதிலுக்காகக் காத்திராமல் வெளியே போய்விட்டார். இந்த உருக்கமான வார்த்தைகளைச் சொல்லவே அவர் இங்கே வந்தார் என்று அப்போதுதான் எனக்குத் தெரிந்தது. அவருடைய வினையே அவரைச் சூழ்ந்துகொண்டுவிட்டது; அதிலிருந்து மீள வழி இல்லை அவருக்கு.

கடைசித் தடவையாக அவரைப் பார்த்ததும் அவரோடு பேசியதும் அன்றுதான். அப்புறம் அவரைக் காணவில்லை.

நவீனத்தின் ஆரம்பத்தில் இந்த விஷயத்தைக் கூற வேண்டியது அவசியம்.

பீடிகை

பிறந்தது முதல் எதற்கும் எதிராக இருப்பதே ஏலாவின் சுபாவ மாகிவிட்டது; அது அவளுக்கே தெரியும். அவள் தாய் மாயாமயிக்கு வாத ரோகம். ஆற அமர யோசித்து அதன்படி நடக்க மாட்டாள்; நிலையான புத்தி இராததால் எரிச்சல் தாங்காது. குடும்பத்தைக் குட்டையாகக் கலக்கி வந்தாள். அடிக்கடி சரியா, தப்பா என்று விசாரிக்காமல் எல்லாரையும் அடக்கி ஆளுவாள். வீணாக எல்லாரிடமும் சந்தேகப்படுவாள். பெண், "நான் ஒன்றும் செய்யவில்லையே!" என்றாலும் விடமாட்டாள். "ஏனடி புளுகுகிறாய்?" என்று சீறுவாள். நாளடைவில், 'கலப்பற்ற உண்மையே பேசக்கூடாது; அப்படிப் பேசினால், ஆபத்து' என்று பட்டுவிட்டது பெண்ணுக்கு. இதனால் முன்னைவிட உதையும் வசையும் அதிகமே கிடைத்தன. இந்தக் கொடுமை தாங்காமல் எதிராடும் சுபாவம் வந்து விட்டது ஏலாவுக்கு. 'பெண்பிள்ளையாக இருந்து இப்படி எதிராடவே கூடாது' என்பது அவள் தாயின் அபிப்பிராயம்.

சிறுவயசிலேயே ஏலாவுக்கு ஒன்று நன்றாக விளங்கி விட்டது: 'பலவீனமே அக்கிரமத்திற்கு மூல காரணம்' என்பதுதான். 'ஆதரவற்றுத் தங்களை அண்டிப் பிழைக்க வந்து எதற்கும் அடங்கி ஒடுங்கி நடக்கிற பந்துக்களால் தான் குடும்பமே பாழாய்ப் போகிறது. அவர்கள் இருக்கிறதால்தானே அம்மா இப்படிக் கண்ணை மூடிக் கொண்டு யாரும் தடைசெய்ய முடியாதபடி அதிகாரம் பண்ணுகிறாள்?' என்று எண்ணுவாள். குடும்பநிலை இவ்விதம் இருந்ததன் பயனாக அவளுக்கு இள வயது

முதல் பதேச்சையாக இருக்கவேண்டும் என்ற ஆவல் அதிகமாயிற்று.

ஏலாவின் தந்தை **நரேச தாசகுப்தர்** சீமையிலுள்ள சர்வகலாசாலை ஒன்றிலே மனத்தத்துவ சாஸ்திரத்தில் பட்டம் பெற்றவர். விஞ்ஞான ஆராய்ச்சியில் வல்லவர். சிறந்த போதகாசிரியர் என்று பெயரெடுத்தவர். தாம் பிறந்த ஊரிலேயே, தனிப்பட்டவர்கள் நடத்திவரும் ஒரு கலாசாலையில் ஆசிரியராக வேலை பார்த்து வந்தார். குடும்பம் முன்னுக்கு வரவேண்டுமே என்று அவ்வளவாக அக்கறை இல்லை அவருக்கு; அந்தச் சாமர்த்தியமும் போதாது. கண்டபேரையும் நம்பி மோசம் போயும் அவருக்கு ஏனோ புத்தி வரவில்லை? ஏமாற்றியோ அல்லது சகஜமாகவோ அவரை அண்டிக் கடன் உடன் வாங்கிச் சென்றவர்கள் அநேகம் பேர். இருந்தும், அந்த நன்றியை அவர்கள் நினைப்பதே இல்லை; இதைவிட அநியாயம் வேறு உண்டா? அது ஒரு வேளை அவருக்குத் தெரிந்தாலும், 'இதுவும் மனத் தத்துவத்தில் நாம் கண்ட ஓர் உண்மை' என்று சும்மா இருந்துவிடுவார். கொஞ்சங்கூடக் கவலைப்பட மாட்டார். அதைப்பற்றி யாரிடமும் புகார் சொல்லவும் மாட்டார். லோக விவகாரமே தெரியாதென்று அவர் மனைவி அவரைச் சும்மா விட்டுவிடவில்லை. தினந்தோறும் அதைச் சுட்டிக் காட்டிக்கொண்டேதான் இருப்பாள். அவரைக் குறை கூறும்படியான விஷயம் நடந்து பல நாளானாலும் அவர் மனைவி அதை மறக்கவே மாட்டாள். அவ்வப்போது நன்றாக உறைக்கும்படி குத்திக் கிளறிக் கொண்டே இருப்பாள்; புண்ணை ஆற விடமாட்டாள். இப்படிப் பிறரை நம்பும் உதார குணம் படைத்திருப்ப தாலேயே அப்பா ஏமாந்து போய் அவதிப்படுகிறார் என்று

அறிந்துகொண்டாள் ஏலா. அபுஜன் மேல் அம்மாவுக்கு எப்படி வாஞ்சையோ அதே மாதிரி தந்தையிடம் 'ஐயோ பாவம்' என்று ஏலாவுக்கு உள்ளூற ஆசை. தன் புருஷன் எதையும் தீர யோசித்துச் செய்வதில்லை; அந்த விஷயத்தில் தானே மேல் என்று படும்படி தாய் காரமாகப் பேசும்போதுதான் ஏலாவுக்குச் சுறுக்கென்று தைக்கும். இப்படிப் பல தடவை அம்மா அப்பாவை அவமதிப்பதைக் கண்டு வீணாக ஆத்திரங் கொள்வாள்; இராவேளையில் அவள் கண்களிலிருந்து நீர் பெருகித் தலையணைகூட நனைந்துவிடும். 'ஆனாலும், இவ்வளவு பொறுமை கூடாது!' என்று தனக்குள்ளேயே அப்பாவைத் திட்டிக்கொள்வாள்.

ஒரு நாள் ஏலாவுக்கு அதிக வேதனையாயிருந்தது; தாங்க முடியவில்லை. அப்பாவிடம் வந்து, "நீ இப்படி வாயைப் பொத்திக்கொண்டிருக்கிறதைப் பார்த்தால் எனக்குச் சகிக்கவில்லை!" என்றாள்.

நரேசர், "பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கையால் தடவித் தடவி ஆற்ற முடியுமா? அதைப்போலத் தான் ஒருவர் சுபாவத்தை எதிர்த்து நிற்பதும்! அது கெட்டிக்காரத்தனமே; உண்மைதான். ஆனால், அதில் ஏதாவது சுகம் உண்டோ?" என்றார்.

"சும்மா உட்கார்ந்துகொண்டிருந்தால் மட்டும் ரொம்பச் சுகமாக்கும்!" என்று சொல்லிவிட்டு ஏலா விர்ரென்று அவ்விடத்தை விட்டுப் போய்விட்டாள்.

இது இப்படி இருக்க, குடும்பத்தில் சிலர் அம்மாவின் மனசுக்குப் பிடித்தாற்போல் நடந்து அவளை வசப்படுத்திக்கொண்டு ஒரு பாவமும் செய்யாத மற்றவர்களைக் கண்டபடி ஆட்டி வைத்தார்கள். ஏலாவினால் இதைச் சகிக்க முடியவில்லை. அவளுக்கு ஆத்திரம்

ஆத்திரமாக வரும்; உண்மையைத் தாயிடம் சொல்லி முறையிட வருவாள். ஆனால் அதிகார மமதையின் முன் உண்மை ஒக்குமா? 'என்ன திமிர் பார்' என்றுதான் தோன்றும். புயற்காற்று அநுகூலமாயிருந்தால்தான் என்ன? படகைக் கவிழ்த்துத்தானே தீரும்!

இந்தக் குடும்பத்தில் இன்னுமொரு சங்கடம் இருந்தது. அதுவும் ஏலாவை உறுத்தியெடுத்தது. அது, அவள் அம்மாவின் ஆசாரந்தான். ஒரு நாள் யாரோ ஒரு முகம்மதியர் வந்திருந்தார். அவர் உட்கார ஒரு பாய் கொண்டுவந்து போட்டாள் ஏலா. அந்தப் பாயை அம்மா தூரக் 'கடாசி' விட்டாள்; ஜமக்காளம் போட்டிருந்தால் தேவலையாம்! ஏலாவுக்குத் தான் எப்போதுமே எதிர்த்துக் கேட்கிற சுபாவ மாயிற்றே; அவள் சும்மா இருப்பாளா? அப்பாவை ஒரு நாள், "இந்தக் கர்நாடகங்கள், ஏன் இப்படித் தீண்டக் கூடாது, தொடக்கூடாது, மடி, சேஷம் என்று கத்துகிறார்கள்? இதெல்லாம் உள்ளூறச் செய்கிறதா? ஏதோ யந்திரம்போல் குருட்டு நம்பிக்கையில் செய்கிற காரியந்தானே?" என்று கேட்டாள். மனத்தத்துவ நிபுணரான அவள் தந்தை, "பெண்பிள்ளைகளே அப்படித்தான்; ஆதிமுதல் கட்டுக்காப்தாவுக்கு அடங்கி நடப்பவர்கள். வாய் திறந்து எதையும் கேட்கமாட்டார்கள். அப்படி இருந்தால்தான் பெரியவர்களிடம் நல்ல பெயர் வாங்கலாம். கண் மூடித்தனமாக அவர்கள் சொல்கிறபடி நடக்க நடக்க மதிப்பு அதிகம் பெண்களுக்கு. புருஷர் களிலும் இதைப்போலப் 'பெட்டைச்சி' குணம் உடைய வர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கதியும் இதேதான்" என்றார். அர்த்தமற்ற இந்த ஆசாரத்தைக் குறித்து ஏலா எத்தனையோ தடவை தன் தாயைக் கேட்டிருக்கிறாள்;

அதற்குப் பதில் திட்டும் வசையுந்தான். இதனால், 'இந்த ஆசாரத்துக்கு அடங்கக் கூடாது' என்ற எண்ணமே அவள் மனத்தில் பலத்தது.

குடும்பச் சச்சரவினால் தம் பெண்ணின் உடம்பு இளைத்துத் துரும்பாகி வருவதைக் கண்டு நரேசர் உள்ளூற வருந்தினார். ஒரு நாள் வீட்டில் நடந்த ஓர் அக்கிரமத்தைக் கண்டு மனம் குன்றிப்போய் ஏலா நரேசரிடம் வந்து, "அப்பா, என்னைக் கல்கத்தாவிலிருக்கும் போர்டிங் ஸ்கூல் எதற்காவது அனுப்பி விடு" என்று கேட்டுக்கொண்டாள். இந்தப் பிரஸ்தாபம் என்னவோ இரண்டு பேருக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. ஆனாலும் அவள் தந்தை நிலைமையை அறிந்துகொண்டு, மாயாமயி எவ்வளவு எதிர்த்துச் சொல்லியும் கேளாமல் ஏலாவை அங்கே அனுப்பிவிட்டார். அப்புறம் அந்தப் பாழுங் குடும்பத்தில், 'தாம் உண்டு, தம் படிப்பு உண்டு' என்று இருந்துவிட்டார்.

அம்மா, "பட்டணத்திற்கு அனுப்பி அவளைத் துரைசானியாக்க வேண்டுமென்று அபிப்பிராயமோ? உங்கள் இஷ்டம்; ஆனால் உங்கள் செல்லப் பெண் மாமியாரகத்துக்குப் போய் வாழ்கிறபோதுதானே தெரியப் போகிறது, அவள் பாடு!" என்றாள். கலி காலத்துக்கு ஏற்றாற்போல் மனம் போனபடி திரிய வேண்டுமென்று பெண் விரும்புவதைக் கண்டு அவள் தாய் மிகவும் கவலைப் பட்டாள்; பல தடவை அதைச் சொல்லியும் பார்த்தாள். 'மாமியாராக வரப்போகிறவளுக்கு எரிச்சல்தான் மூட்டு வாள் ஏலா' என்று நிச்சயமாக நம்பினாள் மாயாமயி. இப்போதே அந்தச் சம்பந்தியம்மாள் பேரில் அவளுக்கு அநுதாபம் பொங்கி வழிந்தது, பாவம்! இதைக் கேட்டதிலிருந்து பெண்ணின் மனத்தில், 'ஓகோ!

கல்யாணம் பண்ணிக்கொண்டு குடும்பம் நடத்தவே பெண்களைத் தயார் பண்ணுகிறார்கள்போல் இருக்கிறது! பெண்மை என்ற கௌரவங்கூடப் பாராட்டாமல், நியாய அநியாயம் இரண்டிற்கும் அடங்கிப் போக வேண்டு மாக்கும்!' என்று ஓர் அபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டது.

ஏலா 'மெட்றிகுலேஷ'னில் தேறிக் காலேஜில் சேரும்போது அவள் தாய் காலமானாள். நரேசர் நடு நடுவே பெண்ணுக்குக் கல்யாணப் பிரஸ்தாபத்தைப் பற்றித் தெரிவித்து, அவளை அதற்குச் சம்மதிக் கும்படி செய்துகொண்டிருந்தார். ஏலா நல்ல அழகி; வரனுக்கு என்னவோ குறைச்சல் இல்லை. ஆனால் விவாகம் என்றாலே அவளுடைய கொள்கைக்குத்தான் நேர்மாறாயிற்றே! பெண் எல்லாப் பரீக்ஷைகளிலும் தேறினாள். அவளுக்குக் கல்யாணம் பண்ணாமலே அவள் தந்தையும் இறந்து போய்விட்டார்.

சுரேசன் அவருடைய தம்பி. நரேசர் அவனைத் தாமே வளர்த்துப் பெரியவனாக்கினார்; கடைசி வரையில் தம் செலவிலேயே படிப்புச் சொல்லி வைத்தார். ஆறு வருஷகாலம் அவனைச் சீமைக்கு அனுப்பிவைத்துப் பெண் டாட்டியிடம் திட்டுக் கேட்டுக்கொண்டதோடு, மார்வாடி யிடமும் கடன் பட்டுவிட்டார். சுரேசன் இப்போது தபால் இலாகாவில் பெரிய உத்தியோகஸ்தனாக இருந்தான். வேலை நிமித்தமாகப் பல இடம் சுற்ற வேண்டியிருந்தது. ஏலாவைக் காப்பாற்றும் பொறுப்பு அவன் தலையில் விழுந்தது. அவனும் அதை முழுமனத்தோடு ஏற்றுக் கொண்டான்.

சுரேசன் மனைவி பெயர் **மாதவி**. அவள் பிறந்த வீட்டில் பெண் பிள்ளைகளெல்லாரும் ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்; நடுத்தரப் படிப்பிற்கும் சற்றுக்

குறைவே ஒழிய அதிகம் இல்லை. புருஷன் சீமையிலிருந்து திரும்பிவந்து பெரிய உத்தியோகத்தில் அமர்ந்து எங் கெங்கோ சுற்றும்போது அங்கெல்லாம் வெளி மனிதர் களோடு சகஜமாகப் பழகவேண்டி வரும். கொஞ்ச நாள் இப்படி இருக்கவே வெள்ளைக்காரர் ரீதியில் வரவேற்பதும், அழைப்பதும் அவளுக்குச் சகஜமாகிவிட்டன. இன்னும் கேட்டால், வெள்ளைக்காரர் 'கிளப்'புகளில்கூடக் காரணத் தோடும் காரணமில்லாமலும் நடு நடுவே நகைத்தபடி அரை குறை இங்கிலீஷில் பேசித் தீர்த்துவிடுவாள்; காரியத்தை யும் முடித்துக்கொண்டு வந்து விடுவாள்.

சுரேசன் இப்படிப்பட்ட ஒரு பெரிய ஊரில் இருக்கும்போதுதான் ஏலா அங்கே வந்து சேர்ந்தாள். வடிவத்திலாகட்டும், குணத்திலாகட்டும், கல்வியிலாகட்டும் தமையன் பெண் சாமானியமானவள் அல்ல என்ற பெருமை அண்டுகொள்ள முடியவில்லை சிற்றப்பனுக்கு. தன்னுடைய மேலதிகாரிகளோடும், மற்ற உத்தியோகஸ்தர் களோடும், உள்ளூர் அல்லது சீமை நண்பர்களோடும் பழகும்போது சந்தர்ப்பம் கிடைத்தால் ஏலாவைப்பற்றி உற்சாகமாகப் பேச ஆரம்பித்துவிடுவான். ஏலா என்ன இருந்தாலும் பெண்பிள்ளைதானே? அவளுக்கு இது சரியென்று படவில்லை. மாதவி வெளியே மிகவும் ஓய்ந்து போய்விட்டதுபோல் காட்டிக்கொண்டு, "அப்பாடா! போதும் போதும், இந்த வெள்ளைக்கார ரீதி எல்லாம்! இந்தத் தொல்லையெல்லாம் எனக்கு வேண்டவே வேண்டாம். நான் என்ன அப்படிப் படித்தவளா? புத்திசாலியா?" என்பாள். அங்கே இருக்கிற ஒரு போக்கைப் பார்த்து விட்டு, அது முதல் ஏலா யாரோடும் பழகாமல் தனியே இருந்தாள்; சுரேசன் பெண் சுரமாவுக்கு மிகுந்த ஆர்வத்துடன் படிப்புச் சொல்லிக்கொடுத்து வந்தாள்.

மற்ற வேளைகளில் 'தீஸிஸ்' (கட்டுரை) எழுதிக்கொண் டிருப்பாள். விஷயம்: வங்க 'மங்கள காவிய'*த்திற்கும் சாஸரின் காவியத்திற்கும் உள்ள தாரதம்மியம். இதைப் பார்த்துவிட்டுச் சுரேசன் மிகவும் சந்தோஷப்பட்டான். இதை எல்லாரிடத்திலும் பறை அறைந்துவிட்டான். மாதவி முகத்தைக் கோணிக்கொண்டு, "ரொம்பப் பிரமாதந்தான்!" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

புருஷனிடம் சொன்னாள்:

"திடும் என்று ஏலாவிடம் படிக்க விட்டு விட்டீர்களே பெண்ணை! ஏன், அதர் வாத்தியாருக்கு என்ன கேடாம்? என்னதான் சொல்லுங்கள்; எனக்கு—"

சுரேசன் திடுக்கிட்டவனாய், "என்ன! ஏலாவையும் அதர் வாத்தியாரையும் ஒப்பிடுகிறாயே; அழகுதான்!" என்றான்.

"இரண்டு நோட்டுப் புத்தகத்தை நெட்டுருப் போட்டு விட்டுப் 'பாஸ்' பண்ணிவிட்டால் பிரமாதப் படிப்பு என்று அர்த்தமோ?" என்று சொல்லிவிட்டுக் கழுத்தை ஒரு வளைவு வளைத்து எஜமானி அம்மாள் அறையை விட்டு வெளியே போய்விட்டாள். இந்த ஒரு வார்த்தைமட்டும் சொல்லத் தயங்கினாள்:—

"சுரமாவுக்கோ வயது பதின்மூன்று ஆகிவிட்டது. இன்று இல்லாவிட்டாலும் நாளைக்காவது பிள்ளைக்காக ஊரெல்லாம் வலைபோட்டுத் தேடவேண்டாமா? ஏலா அப்போதுகூட சுரமாவோடு இருக்க முடியுமா? வருகிற பையன்களுடைய கண்களுக்கு என்ன தெரியப்போகிறது? யார் மேல் மவுசு விழுமோ?"

---

* பிரபந்த வகைகளுள் ஒன்று.

அவள் பெருமூச்செறிந்து மீண்டும், 'இதையெல்லாம் அவரிடம் சொல்லிப் பிரயோஜனமில்லை. புருஷர்களுக்கே குடும்ப விஷயத்தில் இந்தக் குருட்டுத்தனந்தான்' என்று எண்ணமிடலானாள்.

சீக்கிரமாகவே ஏலாவை எங்கேயாவது கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட வேண்டுமென்ற முயற்சியில் இறங்கினாள். அவள் அதிகக் கஷ்டம் எடுத்துக்கொள்ள வில்லை. சுரமாவுக்குக் கிடைக்கக் கூடாதா என்று மாதவி ஏங்கிய வரன்கள் - நல்ல இடங்கள் - வலியவந்தன. ஆனால் ஏலாவோ எல்லாரையும் வேண்டாமென்று உதறி விட்டாள்.

தன் தமையன் பெண்ணின் அறியாமையைக் கண்டு சுரேசன் கவலை கொண்டான். சிற்றன்னையோ பொறுமை இழந்தாள். நல்ல வரன் வரும்பொழுது அதை அலக்ஷியம் செய்வது வங்காளிப் பெண்களுக்கு ஏற்ற தன்று என்பதை உணர்ந்தவள் அவள். ஏலா வயது வந்தவளானதால் என்ன விதமான கெடுதல்கள் நேருமோ என்று மாதவிக்குச் சங்கை மூண்டது. ஏலாவை வைத்துப் பாதுகாக்கும் பொறுப்பு அவளை உள்ளூற வருத்தியது. தன் சிற்றப்பனின் அன்பிற்கும் அவன் குடும்பத்திற்கும் இடையே தான் நின்று அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதை அறிந்தாள் ஏலா.

அதே சமயம் இந்திரநாதர் கல்கத்தாவினின்று வந்தார். ஊரிலுள்ள மாணவர்களெல்லாரும் அவரைத் தம் தலைவ ராகவே மதித்துவிட்டனர். அவர் அசாமானியமான தேஜஸ்வி. அவரது பாண்டித்தியமோ அபாரம். ஒரு நாள் சுரேசன் வீட்டில் அவரை அழைத்திருந்தார்கள். அன்று சந்தர்ப்பம் கிடைத்தபோது ஏலா, தனக்கு முன் பின் தெரியாதிருந்தபோதிலும் கூச்சத்தை விட்டு அவரை

அனுகி, "தாங்கள் எனக்கு ஏதாவது ஒரு வேலை இட வேண்டும்" என்றாள்.

இந்தக் காலத்திலே இம்மாதிரி கேட்டுக்கொள்வது ஓர் அதிசயமான விஷயமல்ல. இருந்தும் பெண்ணின் முகப்பொலிவைப் பார்த்ததும் இந்திரநாதர் பிரமித்து விட்டார். அவர், "கல்கத்தாவில் இப்போதுதான் 'நாராயணி ஹைஸ்கூல்' என்ற பெண்கள் பாடசாலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை நடத்தத் தயாரா யிருக்கிறாயா நீ?" என்று கேட்டார்.

"என்னிடத்தில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கும் பக்ஷத்தில் அப்படியே செய்யத் தயாராயிருக்கிறேன்."

இந்திரநாதர் ஒளி வீசும் தம் கண்களால் ஏலாவின் முகத்தை உற்று நோக்கி, "எனக்குச் சரியான ஆள் யார் என்று தெரியும். உன்னிடத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. உன்னைப் பார்த்த மாத்திரம் நீயே புதுமைப் பெண் என்று அறிந்துகொண்டேன். நவயுகத்தின் வாணீ உன்னிடத்தில் அடங்கியிருக்கிறது" என்றார்.

திடீரென இவ்வாறு இந்திரநாதர் பேசுவதைக் கேட்டு ஏலாவின் இருதயம் நடுக்குற்றது.

"நீங்கள் சொல்வது எனக்குத் திகிலை மூட்டுகிறது. தவறாக எண்ணி என்னை உயர்த்தி வைக்கவேண்டாம். நீங்கள் நினைத்தபடி அதற்குத் தகுதி உடையவளாக்கிக் கொள்ள முயல்வேன். ஆனால் அந்தக் காரியம் என்னால் ஆகுமோ என்ற திகில்தான். என்னால் முடிந்தவரையில் தங்கள் லக்ஷியத்தை நிறைவேற்றப் பார்ப்பேன். ஆனால் நடிக்க மட்டும் தெரியாது எனக்கு" என்றாள் ஏலா.

இந்திரநாதர், "சம்சார பந்தத்தில் சிக்கமாட்டேன் என்று நீ சங்கற்பம் செய்துகொள்ளவேண்டும். நீ சமூகத் திற்கு உரியவள் அல்ல. தேசத்திற்கே உரியவள்" என்றார்.

ஏலா தலை நிமிர்ந்து, "அதுவே என் தீர்மானம்" என்றாள்.

இதைச் சொல்லிவிட்டு அவ்விடத்தினின்று அகலும் ஏலாவை நோக்கி, "கல்யாணத்தைப்பற்றி இனிமேல் பேச்சே எடுக்க மாட்டேன். என்னிடமே இரு, அம்மா. இங்கேயே அக்கம் பக்கத்துக் குழந்தைகளை வைத்துக் கொண்டு ஒரு சின்ன ஸ்கூல் நடத்தேன். யார் என்ன சொல்லப் போகிறார்கள்?" என்றான் சுரேசன்.

வாஞ்சையோடு இதைச் சொன்ன தன் புருஷனுடைய மடத்தனத்தைக் கண்டு எரிச்சல் மூண்டவளாய்ச் சீற்றன்னை, "அவளுக்கோ வயசாயிற்று. தன் காலிலேயே நிற்க வேண்டுமென்ற ஆசை அவளுக்கு; அது நல்லது தானே? நீங்கள் அதைத் தடுப்பானேன்? நீங்கள் என்ன வேண்டுமானாலும் எண்ணிக்கொள்ளுங்கள். இதோ சொல்லி விடுகிறேன். அவளைப்பற்றி இனி அக்கறையே எடுத்துக்கொள்ளமாட்டேன் நான்" என்றாள்.

ஏலாவும், "எனக்கு வேலை கிடைத்துவிட்டது. அதைச் செய்ய நான் போகிறேன்" என்றாள் உறுதியுடன்.

ஏலா தன் வேலையைக் கவனிக்கப் புறப்பட்டு விட்டாள்.

இந்தப் பீடிகைக்குப் பிறகு ஐந்து வருஷங்கள் கழிந்தன. இப்போது கதையின் போக்கு வெகுதூரம் சென்றுவிட்டது.

முதல் அத்தியாயம்

காட்சி: ஒரு டீக் கடை. அதன் ஒரு புறம் ஒரு சிறிய அறை. அதில் விற்பனைக்காகச் சில ஸ்கூல் புத்தகங்களும், காலேஜ் புத்தகங்களும் வைக்கப்பட்டிருந்தன - பெரும்பான்மை பழைய புத்தகங்கள்; தற்கால ஐரோப்பியக் கதைகள், நாடகங்கள் இவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புக்களும் கொஞ்சம் இருந்தன அங்கே. சொற்ப வருமானத்தில் ஜீவனம் பண்ணும் ஏழைப் பிள்ளைகள் அவற்றைப் புரட்டிப் பார்த்துவிட்டுப் போவார்கள்; கடைக்காரனும் அதற்கு ஒன்றும் சொல்ல மாட்டான். அக்கடையின் சொந்தக்காரன் காருயி குப்தன்; 'பென்ஷன்' வாங்கிக்கொண்டு காலந்தள்ளும் பழைய போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர்.

எதிரே பாட்டை; இடது பக்கமாக ஒரு சந்து போயிற்று. தனிமையில் டீ குடிக்க விரும்புபவர்களுக்கும் அறையின் ஒரு பாகம் கந்தல் கோணி போட்டு மறைக்கப் பட்டிருந்தது. இன்று அந்தப் பக்கந்தான் ஏதோ தடபுடலாக ஏற்பாடு நடந்துகொண்டிருந்தது. வேண்டிய அளவுக்கு நாற்காலியும் பெஞ்சியும் இல்லாத குறையைப் பூர்த்தி பண்ணத் தார்ஜிலிங் டீக் கம்பெனி முத்திரை குத்திய மரப்பெட்டிகள் போடப்பட்டிருந்தன. டீக்கோப்பை விஷயத்திலும் இந்த வித்தியாசம் காணப் பட்டது. நீல எனாமெல் கோப்பை கொஞ்சம்; வெள்ளைப் பிங்கான் டம்ளர்கள் சில. மேஜைமேல், கைப்பிடி உடைந்த பால் கூஜா ஒன்றில் பூச்செண்டு. மணி சுமார் மூன்று இருக்கும். சரியாக இரண்டரை மணிக்கு ஏலாவை

அங்கே வந்துவிடும்படி சொல்லியிருந்தார்கள், மாணவர்கள். ஒரு நிமிஷம் தாமதமானாலும்கூடச் சரிப் படாது என்று கூறி யிருந்தார்கள். வேளையில்லா வேளையில் அழைத்ததால் கடையில் யாரும் இல்லை. வழக்கமாக டீ குடிக்கிற கும்பல் நாலரை மணிக்கு மேல்தான் வர ஆரம்பிக்கும். எலா என்னவோ குறித்த சமயத்தில் வந்துவிட்டாள். மாணவர் களைத்தான் காணவில்லை. அங்கே தனியாக உட்கார்ந்து கொண்டு, 'ஒருவேளை தேதி தவறியிருக்குமோ?' என்று எண்ணினாள். அதே சமயத்தில் இந்திரநாதர் அறையில் நுழைவதைக் கண்டு திடுக்கிட்டாள். இந்த இடத்தில் அவரை எதிர்பார்ப்பதற்குத் துளிகூடப் பிரமேயமே இல்லை.

இந்திரநாதர் பல காலம் ஐரோப்பாவிலேயே கழித்தவர். விஞ்ஞானத் துறையில் விசேஷ கீர்த்தி வாய்ந்தவர்; எத் தனையோ பெரிய பெரிய உத்தியோகங்களை வகித்திருக்கலாம்; அவ்வளவு யோக்கியதை உண்டு அவருக்கு. ஐரோப்பியப் புலவர்கள் பலர் அவரை வெகுவாகப் புகழ்ந்துகூட இருக்கி றார்கள். அவர் ஐரோப்பாவில் இருந்தபோது நாடு கடத்தப் பட்ட ஓர் இந்திய தேசபக்தரை ஒரு சமயம் சந்திக்க நேர்ந்தது. நாட்டிற்குத் திரும்பி வந்தார். ஆனால் அந்தத் தேசபக்தர் விஷயம் இவர் மனசை உள்ளூற வருத்திக் கொண்டே யிருந்தது. இவருடைய மற்ற வேலைகளுக்கு இதுவே இடையூறாக நின்றது. முடிவில் இங்கிலாந்தி லுள்ள பிரசித்தி பெற்ற விஞ்ஞான ஆசிரியர் ஒருவரின் விசேஷ சிபாரிசின்பேரில் போதாகாசிரியர் வேலை கிடைத் தது; இவருக்கு மேலே இருந்தவனோ அப்பதவிக்கு லாயக் கற்றவன். இந்த மாதிரியான மனுஷ்யர்களுக்குத்தான் பொறாமையும் அதிகம். இந்த மேலதிகாரியால் இந்திர நாதருடைய விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு அடிக்கடி தடை ஏற்பட்டு வந்தது. கடைசியாக, சோதனைக்கூடம் இராத இடமாகப் பார்த்து அங்கே அவரை மாற்றிவிட்டார்கள். இனிமேல் இந்தத் தேசத்தில் வாழ்நாள் முழுவதையும் இதே துறையில் கழித்தால்கூட முன்னுக்கே வரமுடியாது என்று கண்டுகொண்டார். நிதானமாகச் சுற்றி வளைத்து

ஆசிரியர் தொழிலில் முன்னேறிக் கடைசிக் காலத்தில் கொஞ்சம் 'பென்ஷன்' அநுபவித்துக்கொண்டு ஆசையை அதோடு அடக்கிக் காலந் தள்ள அவருக்கு விருப்பமில்லை. அப்படி எண்ணவும் அவர் தயாராயில்லை. இங்கே இல்லா விட்டாலும் வேறு எந்த நாட்டிலாவது பெயரும் புகழும் அடையலாம் என்ற நம்பிக்கை அவருக்கு விசேஷமாக உண்டு.

ஒரு சமயம் இந்திரநாதர் ஜெர்மன், பிரெஞ்சுப் பாஷை கள் கற்றுக் கொடுக்கத் தனியாக ஒரு வகுப்பு ஏற்படுத்தினார். அதோடு தாவர சாஸ்திரம், பூதத்துவம் இவற்றில் காலேஜ் மாணவர்களுக்குச் சகாயமாகவும் இருந்து வந்தார். ஆனால் நாளடைவில் இதன் மறைவில் வேறொரு ரகசியமான விஷயம் நடக்கத் தொடங்கியது. வேர் ஆழமாகப் பூமியில் பதிந்து எங்கும் பரவி விடுவதுபோல், சிறையிலிருந்து ஆரம்பித்து வெகு தூரத்திற்கு வந்துவிட்டது இவர்கள் சமாசாரம்.

இந்திரநாதர், "எலா, நீ எங்கே வந்தாய், இந்த இடத் தில்?" என்று வினவினார்.

எலா, "நீங்கள் என் வீட்டுக்கு அவர்களை வரவேண்டா மென்று தடுத்து விட்டீர்களாமே; அதனால் பிள்ளைகள் என்னை இங்கே வரச் சொல்லி அழைத்திருந்தார்கள்" என்றாள்.

"அந்தச் சங்கதி முன்னாலேயே தெரிந்துதான் நானும் உடனே அவர்களை வேறு வேலையாக அனுப்பிவிட்டேன். அவர்களுக்குப் பதிலாக நானே இங்கே உன்னிடத்தில் மன் னிப்புக் கேட்டுக்கொள்ள வந்தேன். 'பில்'லும் நானே கொடுத்துவிடுகிறேன்."

"ஏன் தடுத்துவிட்டீர்கள்?"

"'அந்தப் பிள்ளைகளிடத்தில் உனக்கு அநுதாபம் உண்டு என்ற விஷயத்தை மறைக்கத்தான். நாளைக்குப் பார், பத்திரிகையிலே; உன் பெயரில் கட்டுரை ஒன்று அதில் பிரசுரிக்கக் கொடுத்திருக்கிறேன்."

"நீங்களா எழுதியிருக்கிறீர்கள்? பொய்ப் பெயர் வைத்துக்கொண்டு உங்களைப் போன்றவர்களெல்லாரும் எழுதலாமா? ஜனங்கள் தாம் அதை நான் சொந்தமாக எழுதினேன் என்று நம்புவார்களா?"

"இடது கையால், அதிகமாக எழுதிப் பழகாததுபோல் வரைந்திருக்கிறேன். அதில் அப்படிப் பிரமாத விஷயம் ஒன்றும் இராது; நல்லுபதேசம் மட்டும் இருக்கும்."

"அது என்ன அப்பேர்ப்பட்ட விஷயம்?"

"'வாலிபர்கள் ரொம்ப அவசரப்பட்டுத் தேசத்தை இப்படிக் குட்டிச் சுவராக்கப் பார்க்கிறார்களே' என்று அதில் எழுதியிருக்கிறேன். 'இந்தத் துரதிருஷ்டம் பிடித்த வாலிபர் மூளை குளிர்ந்து சும்மா இருக்க ஏதாவது செய்யக் கூடாதா?' என்று வங்காளப் பெண்மணிகளுக்கு உருக்கமான ஒரு வேண்டுகோளும் விடுத்திருக்கிறேன். அதோடு, 'தூரத்திலிருந்துகொண்டு கண்டித்தால் பிரயோஜனம் இல்லை; அது அவர்கள் காதில் ஏறவும் ஏறாது. அவர்கள் கூடுகிற இடத்துக்கே போய் அவர்களை வழிக்குக் கொண்டுவர வேண்டும். அதிகாரிகளின் சந்தேகத்திற்கு ஆளாகக்கூடும் நாம்; அதைப்பற்றிக் கவலைப் படாதீர்கள். நீங்கள் எப்போதுமே தாயின் மனம் படைத்தவர்கள். அந்த வாலிபர்களுக்குக் கிடைக்கவேண்டிய தண்டனையை நீங்களே ஏற்று வது அவர்களைக் காப்பாற்றுங்கள். அப்படி உயிர் விட்டாலும் பலன் உண்டு."

"'அன்னைமார் எனச் சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்ளுங்கள்' என்றும் கண்களிலிருந்து நீர் வரும்படி

எழுதியிருக்கிறேன். மாத்ருபக்தி உடைய எந்த வாசகனும் கண்ணீர் சிந்துவான், படித்தானானால். நீ புருஷனாக இருந்தாயானால் இதற்கு அப்புறம் உனக்கு ராய் பகதூர் பட்டம் வராது போனால், கேள்!"

"நீங்கள் எழுதியிருக்கிறது அப்படியே நான் எண்ணினாற்போல இராவிட்டாலும் மொத்தத்தில் அதுதான்; இல்லை என்று ஏன் சொல்லவேண்டும்? இந்தப் பாழும் பிள்ளைகளிடத்தில் எனக்கு உள்ளூற அன்பு; இப்படிப்பட்ட பசங்கள் அகப்படவே மாட்டார்களே! அப்போது இவர்களோடு காலேஜில் படித்துக்கொண் டிருந்தேன். முதலில், போர்டில் என்னைப்பற்றி என்ன என்னவோ எழுதி வைப்பார்கள். பின்னாலே இருந்துகொண்டு 'பிஞ்சு ஏலக்காய்' என்று ஊளையிட்டுவிட்டு ரொம்ப ஸாதுக்கள்போல் மேலே பார்த்துக் கொண்டு இருப்பார்கள். காலேஜில் நாலாவது வருஷம் (பி. ஏ. கடைசிவருஷம்) படித்துக்கொண் டிருந்தாள் என் சிநேகிதி இந்திராணி. அவளை 'முற்றின ஏலக்காய்' என்பார்கள்; பாவம், சற்று ஸ்தூல சரீரம் அவளுக்கு; நிறமும் மங்கல். பிள்ளைகள் பண்ணும் இவ்வித விஷமங்களைக் கண்டு அநேகம் பெண்களுக்குக் கோபம் வந்துவிடும்; ஆனால் நான் மட்டும் எப்போதும் அந்தப் புருஷப் பிள்ளைகள் பக்கந்தான். 'நாங்கள் அவர்களோடு முன் பின் பழகாதவர்கள்; அதனால் தான் இப்படித் தாறுமாறாகவும், சில சமயம் ஆபாஸமாகவும் நடந்துகொள்கிறார்கள். இதையே அவர்கள் சுபாவமாக எண்ணிவிடக் கூடாது' என்று எனக்குத் தெரியும். கொஞ்ச நாள் பழக்கம் ஏற்பட்டதும், ஸ்வரம் இறங்கி வந்தது; சகஜமாக ஆகிவிட்டார்கள். 'பிஞ்சு ஏலக்காய்' வந்து 'ஏலா — அக்கா' ஆகி விட்டது. சிலபேர் தேனொழுகவும் பேச ஆரம்பித்தார்கள்; ஏன் பேசாமல்? நான் இதையெல்லாம் கண்டு அஞ்சுபவளல்ல. தாங்கள் அறிந்தோ அறியாமலோ பெண்கள் எந்த விதத்திலும் அந்தப் பிள்ளைகள் மனசைக் கவரும்படி விடக்கூடாது; அந்த விஷயத்தில் மட்டும் ஜாக்கிரதையாக இருந்தால் என் வரைக்கும் இந்தப் புருஷப் பிள்ளைகளோடு பழகுவது ரொம்பச் சகஜம் என்று

தான் சொல்வேன். அப்புறம் ஒவ்வொருவராக - அவர்களில் நல்லவர்கள் - ஈனபுத்தி இராமல் பெண்களிடத்தில் மரியாதை யாக நடந்துகொள்ளும் பிள்ளைகள்—"

"அதாவது, கல்கத்தாவிலுள்ள ரஸிகர்களைப்போல் பழகிப் பழகிப் புளித்துப் போகாமல் இருப்பவர்கள் என்று சொல்."

"ஆமாம்; அவர்கள்தாம்; அப்படிச் சாவுக்குத் துணிந்து புறப்பட்டு விட்டார்களே! அவர்கள் எல்லோரும் என்னைப்போல் வங்காளிகள்தாமே? அவர்கள் செத்துப் போகும்போது அற்பமான நான்மட்டும் வீட்டிலே ஒரு மூலையில் நிம்மதியாக இருப்பதா? எனக்கு இஷ்டமில்லை. ஆனால், ஒன்று மட்டும் உண்மை. நாளாக ஆக, நம்முடைய உத்தேசம் என்ன என்பதை மறந்துவிடுகிறோம்; வெறிமட்டும் தலைக்கு ஏறிக்கொண் டிருக்கிறது! முன் யோசனையே இல்லாமல் அதன் பாட்டிற்கு என்னவோ தலாப் பெருதன மாக நடந்துகொண் டிருக்கிறது, காரியம்: இது சுத்தமாக நன்றாயில்லை. அவ்வளவு பேரையும் ஏதோ கண்மூடித்தன மாகப் பலி கொடுக்கிறாற் போல்தானே இருக்கிறது! என் நெஞ்சு வெடிக்கிறதே!"

"குழந்தாய்! இதே வெறுப்புத்தான் குருக்ஷேத்திர ஆரம்பத்தில் அர்ஜுனன் மனசிலும் ஏற்பட்டு அவனை வாட்டி யெடுத்தது. டாக்டருக்குப் படிக்கையில், முதல் முதலாகப் பிணத்தை அறுக்கும்போது பிடிக்கத்தான் இல்லை எனக்கு; மூர்ச்சையாய்க்கூட விழுந்துவிட்டிருப்பேன் அப்படியே. இந்த அருசியைத்தான் வெறுக்கவேண்டும். கொடுஞ் செயலாக இருந்தாலும் அதை முதலில் சாதித்தே தீருவதுதான் சாமர்த்தியம். அப்புறம் அதற்காக வருந்துவ தில் தவறில்லை. நீங்களோ, 'பெண்கள் தாய்மார்' என்று உங்கள் பாட்டிற்கு என்னவோ சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள்! இது உங்கள் கௌரவத்துக்கு ஏற்ற

வார்த்தை அல்ல. அன்னை என்பவள் இயற்கையிலேயே உருவானவள். மற்றப் பிராணிகள் விஷயத்திலும் இது பொருந்தும். அதோடு இன்னும் ஒரு பெரிய விஷயம்; நீங்கள் சக்தி ஸ்வரூபமாயிற்றே! அதை இப்போது நிரூபியுங்கள்; தயா தாக்ஷிண்ணியத்தை விட்டொழித்துத் தைரியமாக வந்து நில்லுங்கள். சக்தியைக் கொடுங்கள்! புருஷர்களுக்கு வலிமையை ஊட்டுங்கள்."

"இந்த மாதிரிப் பெரிய பெரிய வார்த்தை எல்லாம் பேசி எங்களுக்கு வீண் பிரமை மூட்டாதீர்கள்; எங்கள் சக்திக்கு மீறினதைச் செய்யச் சொல்கிறீர்களே. அதெப்படிச் சாத்தியம்?"

"உங்களை இப்படி வற்புறுத்திக் கேட்கக் கேட்க எங்கள் வேண்டுகோள் வாஸ்தவமாகிப் பலன் அளிக்கிறது. நாங்கள் விரும்பியபடியே நீங்களும் பலம் பொருந்தியவர்களாகி விடுகிறீர்கள். அதைப்போலவே நீங்களும் எங்களை நம்புங்கள்; எங்கள் காரியம் நிச்சயமாக நிறைவேறிவிடும்."

"நீங்கள் பேசுவதைக் கேட்க என்னவோ எனக்குப் பிரியந்தான். ஆனால் இப்போது அப்படி அல்ல. நானும் சில வார்த்தைகள் சொல்லியாக வேண்டும்."

"சரி. அப்படியானால் இங்கே வேண்டாம். அந்தப் பின்பக்க அறைக்குள் போகலாம் வா."

'படுதா' மூடிப் பாதி இருண்டிருக்கும் அந்த மங்கலான அறைக்குப் போனார்கள், அவ்விருவரும். அங்கே ஒரு பழைய மேஜை. அதன் இருபுறமும் இரண்டு பெஞ்சு. சுவரில் பெரிய இந்தியா தேசப்படம் ஒன்று.

"நீங்கள் செய்வதென்னவோ அநியாயம். இதைச் சொல்லாமலும் இருக்க முடியவில்லை என்றால்."

எனவே ஒருத்திக்குத்தான் இந்திரநாதரை இப்படிச் சொல்லத் தைரியம் உண்டு. ஆனால் அவளுக்குக் கூட அது, அவ்வளவு எளிதாகப் படவில்லை; அதனால்தான் அவள் குரலில் முன் இராத ஒரு தீவிரம் தொனித்தது.

இந்திரநாதர் நன்றாயிருப்பார் என்று சொன்னால் மட்டும் போதாது. அவருடைய வடிவத்தில் கடினமான ஒரு வசீகர சக்தி இருந்தது. அவர் உள்ளத்தில் எங்கோ இடியேறு ஒன்று அடங்கி இருப்பதுபோல் பிரமை உண்டாகும். அவ்விடியின் ஓசை காதில் விழாவிட்டாலும் அதனால் ஏற்படும் மின்னொளி இடை இடையே பளிச் சௌத் தோன்றுவதுபோல் இருக்கும். சாணை தீட்டிய கத்திபோல, பெருந் தன்மை ஒளிரும் முகபாவம். கடுமை யான வார்த்தை சொல்லத் தயங்கமாட்டார்; ஆனால் அதையும் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் சிரித்தவண்ணம் சொல்லுவார். கோபத்தின் வேகத்தில்கூட உரத்த குரலில் பேசமாட்டார்; அவருடைய முறுவலிலேயே அது புலனாகும். பிறர் பார்த்து மரியாதை கொடுக்கக்கூடிய அளவுக்கு ஒழுங் காக இருப்பார்; அந்த விஷயத்தில் கவனம் செலுத்தாமலும் இருக்கமாட்டார்; அளவுக்கு மிஞ்சியும் போகமாட்டார். சுமாராகக் கத்தரித்து விட்டிருக்கும் தலை மயிர். வாராவிட் டாலும் பரட்டை ஆகாது; மூஞ்சி சற்றுச் செம்மை கலந்த 'பாதாம்' நிறம். புருவத்திற்கு மேல் இருபுறமும் பரந்த நெற்றிக்கட்டு. பார்வையில் கடின புத்தியின் தீவிரம், மோவாய்க் கட்டை அசைக்க முடியாத உறுதியையும் மேன் மையையும் வெளிப்படுத்தியது. செயற்கரிய செயல்களைச் செய்யவேண்டும் என்று அவர் எளிதில் விரும்புவார். அதை எவராலும் அவ்வளவு சுலபமாகப் புறக்கணித்து விடவும் முடியாது. அவர் அபாரமான புத்தி தீக்ஷண்ணியமுடைய வர் என்று சிலர் அறிவார்கள். அசாமானியமான சக்தி படைத்தவர் என்று சிலர் உணர்வார்கள். ஆகவே, சிலருக்கு அவரிடத்தில் வரம்பற்ற சிரத்தை. இன்னும் சிலருக்குக் காரணம் இல்லாமல் ஒருவிதப் பயம்.

இந்திரநாதர் சிரித்த முகத்துடன், "என்ன, அநியாயம் பண்ணிவிட்டேனே?" என்று கேட்டார்.

"கல்யாணம் பண்ணிக்கொண்டுதான் தீரவேண்டும் என்று உமாவுக்குக் கட்டளையிட்டிருக்கிறீர்களே! அவளுக்கு விவாகம் செய்துகொள்ள இஷ்டமே இல்லையே!"

"இஷ்டமில்லை என்று உனக்கு யார் சொன்னார்கள்?"

"அவளேதான் சொன்னாள்."

"ஒருவேளை தனக்கே புரியாமல் அப்படிச் சொல்லியிருக்கவேண்டும்; இல்லாவிட்டால் நிஜத்தைச் சொல்லாமல் மறைத்திருக்கவேண்டும்."

"பின்னே அவள் உங்களெதிரில் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்று பிரதிக்ஞை செய்தாளே!"

"அப்போது என்னவோ அது வாஸ்தவந்தான்; இப்போது அப்படி அல்ல. சும்மா வாயால் சொல்லிவிட்டால் மட்டும் அது சத்தியமாகிவிடுமா? உமா பிரதிக்ஞையைத் தானே மீறி இருப்பாள்; அதற்குள் நானே அதைப் பங்கப் படுத்தி, அவளை அந்தக் குற்றத்திலிருந்து மீட்டுவிட்டேன்."

"ஆணையை மீறுவதும் மீறாதிருப்பதும் அவள் பொறுப்பு. ஒருவேளை அவள் மீறாதிருக்கலாம். இந்தக் குற்றமும் நேராதிருக்கலாமோ இல்லையோ?"

"இப்பொழுது இப்படி மீறப் பார்க்கிறாள். நாளைக்கு மீறியே விடுகிறாள். அப்புறம் நம் எல்லார் பாடும் திண்டாட்டந்தான்."

"பின்னே அவள் ரொம்ப அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுகிறாளே?"

"சரி; அப்படி அதிக நாள் அழுது அமர்க்களம் பண்ணவேண்டி இராது. நாளைக்கு மறு நாளைக்குள்ளேயே கல்யாணத்தை முடித்துவிட்டால் தீர்ந்தது."

"அதற்கப்புறமும் அவள் இருக்கத்தானே போகிறாள்; அதோடு விஷயம் முடிந்துவிடப் போவதில்லையே?"

"பெண்கள் விவாகம் பண்ணிக்கொள்வதற்கு முன்னாலே அழுவது, காலையில் மேகம் திரண்டு இடிப்பது போலத்தான்!"

"நீங்கள் மகா கொடியவர்கள்!"

"என் அப்படி என்று கேட்கிறாயா? மனிதனிடத்தில் பிரம்மாவுக்கு அன்பு இருந்தபோதிலும் அவர் கொடியவர் தாம். மிருகத் தன்மைக்கே அவர் இடங் கொடுக்கிறார்."

"உங்களுக்கே தெரியும், உமாவுக்கு ஸுகுமாரன் பேரில் ஆசை என்று."

"அதனால்தான் அவளை அவனை விட்டுப் பிரித்துவிடப் பார்க்கிறேன்."

"காதலித்ததற்காகவா இந்தத் தண்டனை?"

"காதலிப்பதற்கும் தண்டனைக்கும் என்ன சம்பந்தம்? அம்மை பூட்டிவிட்டது என்று யாரையாவது தண்டிப் பார்களா? முத்துக் கண்டவுடனே வீட்டை விட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதுதானே நல்லது!"

"அவளை ஸுகுமாரனுக்கே கல்யாணம் செய்து கொடுத்துவிட்டால் தீர்ந்தது."

"ஸுகுமாரன், பாவம், என்ன தப்புப் பண்ணிவிட்டான்? அவனைப்போல் பிள்ளைகள் கிடைக்க நாம் கொடுத்து வைக்க வேண்டுமே."

"உமாவை விவாகம் பண்ணிக்கொள்ள அவனே சம்மதிக்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்களேன்; அப்போது?"

"அப்படியும் நேரலாம். அதனால்தான் நான் இவ்வளவு அவசரம் அவசரமாகக் காரியத்தை முடிக்கப் பார்க்கிறேன். அவனைப்போல் உத்தம புருஷர்களின் மனசைத்தான் பெண்கள் சுலபமாகக் கலைத்துவிடுவார்கள். பரஸ்பர ஸ்நேகம் என்பது போய்க் காதலாக மாறிவிடும்; 'தங்கள் அடியாள்' என்று சொல்லி இரண்டு துளிக் கண்ணீர் சிந்தினாலே போதும்; ஆசாமி இணங்கி விடுகிறான். இப்படிச் சொல்கிறேன் என்று கோபமா?"

"ஏன் கோபித்துக்கொள்ள வேண்டும்? பெண்கள் மௌனமாகத் தங்கள் சாமர்த்தியத்தால் புருஷனை அண்டி அடைக்கலம் புக வருகிறார்கள். அவர்களை ஏற்கும் பாரம் புருஷனுடையது. என் அநுபவம் சம்பந்தப்பட்ட வரை இந்த மாதிரி விஷயங்களுக்குச் சத்தியத்தின் தூண்டுதலினால் நியாயப்படி நடந்துதானே ஆகவேண்டும்; இதோ அந்த வேளை நெருங்கிவிட்டது. இப்படிச் செய்கிறேன் என்றுதான் மற்றப் பெண்களெல்லாரும் என்னை அணுகமாட்டேனென்கிறார்கள். உமாவைக் கல்யாணம் பண்ணிக்கொள்பவன் போகீலால்தானே? அவனுடைய அபிப்பிராயம் என்ன?"

"ரொம்ப நல்ல ஆசாமி! பாவம், அவன், சொந்த அபிப்பிராயம் கிபிப்பிராயம் என்ற தொல்லையே இல்லை அவனிடத்தில். வங்காளிப் பெண்களே பிரம்ம சிருஷ்டியிலே அபூர்வமானவர்கள் என்று எண்ணுகிறவன் அவன். அந்தமாதிரி மெய்ம்மறந்திருக்கும் பேர்வழிகளைத் தளத்தைவிட்டு விலக்குவதுதான் இப்போது ஆகவேண்டிய காரியம். இந்த மாதிரிக் கந்தலையும் கூளத்தையும் ஒதுக்கி வைப்பதற்கு ஏற்ற குப்பைக் கூடை விவாகந்தான்."

“இப்படியெல்லாம் விபரீதம் நேரும் என்று தெரிந்தும் ஏன் நீங்கள் ஸ்திரீகளையும் புருஷர்களையும் கலந்து பழகும்படி விட்டீர்கள்?”

“சாம்பலைப் பூசித் திரியும் சந்நியாசியையும், சகல இச்சைகளையும் சுட்டுப் பொசுக்கிய பஸ்ம குண்டத்தையும் போன்ற பேடிகளை வைத்துக்கொண்டால் காரியம் நிறைவேறாது என்றுதான் அப்படிச் செய்தேன். நம்முடைய தளத்தில் எவனாவது சற்று அஜாக்கிரதையினால் உள்ளே கனலும் ஆசைத்தீக்கு அடிமையானால் அவனையும் விலக்க வேண்டியதுதான். நாடு முழுவதும் ஒன்றுபடவே இந்தத் தீயை மூட்டுகிறோம் என்று அறிந்துகொள். ஆசை அவிந்த ஜடங்களாலும் அது ஆகாது; அக்கனலை அடக்கத் தெரியாத பேடிகளாலும் அது ஆகாது.”

ஏலா சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாள். கொஞ்ச நேரம் கழித்துக் கண்களைத் தாழ்த்திக்கொண்டு, “அப்படியானால் என்னையும் விலக்கி விடுங்கள்” என்றாள்.

“ஏன் அப்படிச் சொல்கிறாய்?”

“உங்களுக்குத் தெரியாது, விஷயம்.”

“தெரியாதென்று யார் சொன்னார்கள்! உன் தூய மனசில் ஏதோ கறை ஏற்பட்டிருக்கிறது. ஒரு நாள் இதைக் கவனித்தேன். உன் உள்ளத்தில் புதிய ஒளி உதயமாகி இருக்கிறது. யாருடைய காலடிச் சப்தத்தையோ எதிர்பார்த்துக் கூர்ந்து கவனிக்கிறது உன் மனம். போன வெள்ளிக்கிழமை உன் அறைக்குள் நுழைந்தேனே, அப்போது வேறு யாரோ வருகிறார் என்றுதானே எண்ணிக்கொண்டாய்? சமாளித்துக்கொள்ளக் கொஞ்ச நாழிகை ஆயிற்று. இல்லையா? வெட்கப்படாதே! இதில் தவறு ஒன்றும் இல்லை.”

காது நுனி சிவந்துவிட்டது எலாவுக்கு. அவள் கம்மென்று உட்கார்ந்திருந்தாள்.

இந்திரநாதர், "உனக்கு ஓர் ஆசாமிமேல் ஆசை; அது தானே? உன் மனசு கல்லா, ஒரே நிலையாக இருப்பதற்கு? அவன் யாரென்பதும் எனக்குத் தெரியும். இதனால் வருத்தப்படவேண்டிய அவசியமே இல்லை" என்றார்.

"நீங்கள் நிலையான மனசோடு இருந்து காரியத்தைச் சாதிக்கவேண்டும் என்று சொல்லவில்லையா? அப்படியே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இருப்பது சாத்தியமா?"

"எல்லாராலும் ஆகாது. காதல் வசப்பட்டு விரதத்தைக் கைவிடும் ரகத்தைச் சேர்ந்த பெண் அல்ல நீ."

"ஆனால்—"

"இதில் 'ஆனால்' கீனால் ஒன்றுமே பேச வேண்டாம். என்னதான் செய், இதிலிருந்து மீள வழி இல்லை."

"நான் அப்படி உங்களுக்கு எந்தக் காரியத்திலும் ஒத்தாசையாகவும் இல்லை; உங்களுக்கே அது தெரியும்."

"உன்னிடமிருந்து எந்த விதமான வேலையும் வாங்கிக் கொள்ள விரும்பவில்லை நான். காரியத்தைப்பற்றி உன்னிடம் சொல்லவேண்டிய பிரமேயமும் இல்லை. நீ கொடுக்கும் உத்ஸாகம் அவர்கள் மனசில் எந்த விதமான ஜ்வாலையை உண்டாக்குமென்று நீ அறிந்துகொள்வது எப்படி? அதை விட்டுவிட்டு வெறும் மாதச் சம்பளத்திற்கு உழைத்தால்மட்டும் காரியத்தைச் சாதித்தது ஆகுமா? நாங்கள் பெண்ணையும் பொன்னையும் துறந்தவர்களல்ல. பொன் விசேஷமாகக் கிடைக்கும் போலிருந்தால் அதை அலக்ஷியம் செய்யவே மாட்டோம்; பெண்களுக்கு விசேஷ

மதிப்பு இருக்குமிடத்தில் அவர்களைத் தூக்கியே வைப்போம்."

"உங்களிடத்தில் வீணாகப் புளுகுவானேன்? நான் கொண்டுள்ள இந்தக் காதல் வரவர மற்ற விதமான ஆசைகளை மீறி நிற்கிறது."

"அந்த மாதிரிப் பயமே வேண்டாம்; அவனை நேசிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. சும்மா 'தாயே!' என்று தேசத்தைப் போற்றுபவர்கள் என்றும் குழந்தைகளுக்குச் சமானம். வயசானவர்களுக்கோ சிசுக்களுக்கோ தேசம் தாய் அல்ல. ஆணும் பெண்ணும் கலந்த ஓர் உருவம் அது. இவ்விருவர் சேர்க்கையால்தான் ஒரு பயன் ஏற்படும். ஸம்ஸாரம் என்கிற கூட்டில் அடைபட்டு இந்த ஐக்கியத்தைப் பாழ்படுத்தாதே."

"அப்படியானால் நீங்கள் உமா விஷயத்தில்—"

"உமா, காளு இவர்களெல்லாரும் இந்த வறட்சியான காதலைச் சகித்துக்கொண்டு இருப்பார்களா? இல்லறம் என்ற அந்தச் சுடுகாட்டில் தங்கள் முயற்சி அனைத்தையும் எரித்து விட்டுத் தலை முழுகுபவர்கள் அவர்கள். சந்தர்ப்பம் வரும் போது அவர்கள் இரண்டு பேருக்கும் எள்ளும் தண்ணீரும் விட்டுவிட வேண்டியதுதான். அது கிடக்கட்டும். முந்தா நாள் உன் அறையில் திருடன் நுழைந்தான் என்று கேள்விப் பட்டேன்."

"ஆமாம். நுழைந்தது வாஸ்தவந்தான்."

"நீ, கற்றுக்கொண்ட ஜூஜுத்ஸூ வித்தை சமயத்தில் உதவியதா?"

"திருடனின் கை மணிக்கட்டை முறித்துவிட்டேன் என்று நினைக்கிறேன்."

"மனசில் அதனால் ஒரு வருத்தமும் இல்லையே?"

"இருந்தது. ஆனால் அவன் என்னை மானபங்கம் செய்துவிடுவானோ என்ற திகிலுங்கூட இருந்தது. அவன் நோவு தாளாமல், 'ஐயோ!' என்று வீரிட்டு அடங்கிப் போயிருந்தானானால் அப்படிக் கடைசி வரைக்கும் கையைப் பிடித்து முறுக்கி இருக்கமாட்டேன்."

"ஆள் யார் என்று தெரிந்ததா?"

"ஒரே இருட்டாய் இருந்ததால் தெரியவில்லை."

"அடையாளம் மட்டும் தெரிந்திருந்தால் வந்தவன் அநாதி என்று கண்டுகொண்டிருப்பாய்."

"ஆ! என்ன! நம் அநாதியா? பாவம், அறியாத பையனாயிற்றே அவன்!"

"நான்தான் அவனை அனுப்பினேன்."

"நீங்களா? என் அப்படிச் செய்யவேண்டும்?"

"உன்னையும் பரீக்ஷித்தேன். அவனையும் பரீக்ஷித்து விட்டேன்."

"என்ன கடுமை!"

"கீழ் அறையில்தான் இருந்தேன். அப்பொழுதே மணிக்கட்டு எலும்பைச் சரிப்படுத்திவிட்டேன். நீ அனாவசியமாக மனவேதனைப்படுகிறாய்! ஆபத்துக் காலத்தில் இந்தப் பச்சாத்தாபமெல்லாம் பறந்துவிடும் என்று உனக்குக் காட்ட விரும்பினேன். அன்று அந்த ஆட்டுக் குட்டியைத் துப்பாக்கியால் சுடச் சொன்னேன். நீ முடியவே முடியாது என்றாய். உன் அத்தங்காள் ரொம்ப வீறாப்புப் பேசி அதைச் சுட்டாள். ஆட்டுக்குட்டி கால் ஒடிந்து கீழே

விழுந்ததைப் பார்த்துக் கல்நெஞ்சோடு இருப்பதுபோல் காட்டிக்கொண்டு இடி இடியென்று சிரித்தாள். அது பைத்தியக்காரச் சிரிப்பு; வேறொன்றுமில்லை. அன்று ராத்திரி முழுவதும் அவளுக்குத் தூக்கமே வரவில்லை. ஆனால் உன்னைப் புலி தின்ன வருகிறது என்று வைத்துக்கொள். பயம் இல்லாவிட்டால் முதல் காரியம் என்ன பண்ணுவாய்? அதை உடனே சுட்டுக்கொல்லக் கொஞ்சங்கூடத் தயங்க மாட்டாய்; இல்லையா? ஈவு இரக்கம் எல்லாம் விட்டாயிற்று; இல்லாவிட்டால் என்னையே 'ஸெண்டிமெண்டல்' (கோழை நெஞ்சினன்) என்றுதான் வெறுக்கவேண்டி வரும். ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு இதைத்தான் உபதேசித்தார். கருணை கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் கடமையை நிறைவேற்றும்போது உணர்ச்சிக்கு இடம் கொடுக்கக்கூடாது. புரிந்ததா?"

"புரிந்தது."

"அப்படியானால் ஒன்று கேட்கிறேன்: அதின் பேரில் தானே ஆசை உனக்கு?"

பதில் ஒன்றும் கூறாமல் லலா சும்மா இருந்தாள்.

"ஒரு வேளை அவன் நம்மைக் காட்டிக் கொடுத்து விடுகிறான்; அப்போது அவனை உன் கையாலே சுடுவாயா, மாட்டாயா?"

"அவன் வரைக்கும் அப்படி நேராது; ஆனால், சுடுவேன் என்றுமட்டும் தைரியமாகச் சொல்வேன்."

"அப்படி நேர்ந்தால்?"

"வாயால் என்ன சொன்னாலும், கடைசியில் எப்படி இருப்பேனோ, யார் கண்டார்கள்?"

“நீயே அதைத் தெளிந்துதான் தீரவேண்டும். ‘எது எப்படி ஆகுமோ?’ என்று பயங்கரமான விஷயங்களையே எப்போதும் கற்பனை பண்ணிக்கொண்டு அதற்குத் தயாராக இருக்கவேண்டும் நீ.”

“என்னைப் பொறுக்கி எடுத்த விஷயத்தில் நீங்கள் பண்ணினது தப்பு; நிச்சயமாய்ச் சொல்வேன்.”

“எனக்கு நிச்சயமாய்த் தெரியும், நான் பண்ணினது தப்பே இல்லை என்று.”

“உங்கள் காலில் விழுந்து கேட்டுக்கொள்ளுகிறேன்: அதை மட்டும் விட்டுவிடுங்கள், பெரிய மனசு பண்ணி.”

“அவனை விட்டுவிட நான் யார்? தானே வலுவில் பிரதிக்ஞை செய்துகொண்டான்; அதற்குக் கட்டுப்பட்டிருக்கிறான். அவன் மனசில் என்னவோ தயக்கம் துளிகூட ஏற்படாது; ஆனால் அவன் ருசியை இது பாதிக்கலாம், அடிக்கடி. ஆனாலும் அவன் சுயமரியாதை, அவனைக் கடைசிவரைக்கும் காப்பாற்றும்.”

“இப்படி மனுஷ்யர்களைப் பொறுக்கும் விஷயத்தில் எப்போதாவது தவறு நேர்ந்திருக்கிறதோ?”

“நேர்ந்திருக்கிறது. அநேகம் பேரிடத்தில் இரட்டைப் பட்ட சுபாவம் பின்னிக் கிடக்கிறது; இரண்டுக்கும் எப்போதுமே ஒற்றுமை இல்லை. ஆனால் இரண்டும் வாஸ்தவம் தான். அவர்கள் தங்களையேகூடச் சரியாகப் புரிந்து கொள்வதில்லை.”

“என்ன, தம்பி!” என்று கணீரென ஒரு குரல் கேட்டது.

“கானுயிதானே? வா! வா!”

காளுயிருப்தன் உள்ளே வந்தான். ஆள் குள்ளன்; பருமனுன தேகம். நடு வயசு நிரம்பி இருக்கும். சில வாரங்களாக மீசை, தாடியை க்ஷவரம் செய்துகொள்ளச் சந்தர்ப்பம் இல்லேபோல் இருக்கிறது. முகத்தில் முள்ளு முள்ளாகக் குத்திட்டு நின்றது மயிர். முன் தலே வழுக்கை யாக இருந்தது. அரைத் துணிக்குமேல் உடம்பில் கதர் அங்கவஸ்திரம்; வண்ணுனுக்குப் போட்டு எத்தனேயோ நாள் ஆகியிருக்கும். சொக்காயே இல்லே. அந்த உடம்புக்குக் கையிரண்டும் குட்டைதான். சதா வேலேயும் கையுமாக இருப்பதாகத் தோன்றும். அந்தத் தளத்தைச் சேர்ந்தவர் களுக்குத் தன்னுல் இயன்றவரை உணவு விஷயத்தில் உதவியாக இருக்கவே காளுயி அந்த டீக்கடை வைத் திருந்தான்.

காளுயி தனக்கு இயற்கையான கம்மின குரலில், "தம்பி, நீ ரொம்ப வாயை விடமாட்டாய் என்று உனக்குப் பெயர்; பெரிய ரிஷி என்றுகூடச் சொல்லலாம் உன்னே. ஆனுல் இன்று ஏலா அதைப் பொய்யாக்கி விட்டாள் என்று படுகிறது எனக்கு" என்ருன்.

இந்திரநாதர் நகைத்தவண்ணம், "வாயை விடாமல் இருப்பதே நாங்கள் இப்போது சாதிக்க வேண்டிய காரியம்; இருந்தாலும் நியமத்தைச் சரிவர அநுஷ்டிப்பதற்குச் சில சமயம் அதை மீற வேண்டியதும் அவசியமே. இந்தப் பெண் தான் ஒன்றும் பேசுவதில்லே; பிறர் பேசுவதற்கு இடம் கொடுக்கிருள்; இது ஒரு விசேஷ குணந்தானே?" என்ருர்.

"என்ன, அப்பா, நீ சொல்கிறது! - ஏலாவா பேசுகிற தில்லே? உன் எதிரே சும்மா இருக்கிருளே யொழிய, மற்ற இடங்களில் பொழிந்து தள்ளுகிருளே! நான் எல்லாவற்றி லும் குட்டுப் பட்டவனுயிற்றே; அவள் பேசப் போகிருள் என்று தெரிந்ததோ இல்லேயோ வேலேயையெல்லாம் அப்படியே போட்டுவிட்டு அதைக் கேட்க ஓடி வந்து

விடுகிறேனே! நான் சொல்வதைக் கொஞ்சம் கவனமாகக் கேள் : ஏலாவைப் போலக் குரல் இல்லை எனக்கு; ஆனால் சுருக்கமாகச் சொல்வேன், மனத்தில் ஆழப் பதியும்படி.”

ஏலா பரபரவென்று எழுந்தாள். இந்திரநாதர், “போவதற்கு முன்னால் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். நம் தளத்தைச் சேர்ந்தவர்களிடமெல்லாம் உன்னைப்பற்றித் தூஷித்துக்கொண்டே இருக்கிறேன். என்றாவது ஒரு நாள் உன்னை அடியோடு கூட்டத்தை விட்டு விலக்கிவிட வேண்டியதுதான் என்றுகூடச் சொல்லியிருக்கிறேன். அதனை நீ பாழாக்கிவிடுகிறாய் என்றும், இதனால் இன்னும் கெடுதல்தான் நேரும் என்றும் சொல்லியிருக்கிறேன்.”

“இப்படிச் சொல்லிக்கொண்டே இருந்தால் அது வாஸ்தவமாகவே ஆகிவிடவும் கூடும். எனக்கும் இந்த இடத்துக்கும் பொருத்தமில்லையோ என்னவோ யார் கண்டார்கள்?”

“இராவிட்டால்கூட உன்னிடத்தில் சந்தேகமே இல்லை எனக்கு; ஆனாலும் அவர்களிடம் உன்னைப்பற்றித் தூஷித்துக்கொண்டேதான் இருக்கிறேன். உனக்கு யாரோடும் விரோதமில்லை என்றுதான் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனாலும் உன்மேல் அதிகப் பிரீதியாக இருக்கிறவர்கள் சில பேருக்கு அந்த அவதூறெல்லாம் அப்படியே நிஜமாக இருக்கக் கூடாதா என்று மனசு அடித்துக்கொள்கிறதே!—அது அவர்கள் இயற்கை! இந்தமாதிரித் தூஷணைப் பிரியர் தாம் எப்போதும் நேர்மை அற்றவர்கள். இவர்கள் பெயரையெல்லாம் குறித்துத்தான் வைத்திருக்கிறேன்! முக்கால்வாசி பூர்த்தியாகிவிட்டது அதில்.”

“தூஷிக்கிறதே அவர்கள் ஜன்மம்; அதில் அவ்வளவு பிரியம். என்பேரில் மனஸ்தாபத்தால் அப்படிச் செய்யவில்லை அவர்கள்.”

"அஜாத சத்ரு என்று கேள்விப்பட்டிருக்கிருயா? இவர்களெல்லாரும் ஜாத சத்ருக்கள்; பிறவியிலிருந்தே ஒரு காரணமும் இல்லாமல் விரோத பாவம் கொண்டவர்கள். வங்க தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிருேம் நாம். நம் முயற்சிகளையெல்லாம் மண்ணுக்க முனைந்திருக்கிருர்கள் இவர்கள்."

"அப்பா தம்பி, இன்று இதோடு நிறுத்திக்கொள்வோம். மேற்கொண்டு அடுத்த தடவை கவனிக்கலாம். எலா, உன்னை டீ பார்ட்டிக்கு அழைத்திருந்தார்களே; அது நடக்காமல் போனதற்கு நானே காரணம் என்று உனக்குப் பட்டால், மனசில் ஒன்றும் வைத்துக்கொள்ளாதே; இனிமேல் டீக்கடையைக் கட்டவேண்டியதுதான். இருநூறு முந்நூறு மைல் தாண்டி க்ஷவர 'ஸலூன்' திறக்க வேண்டியதுதான். இதற்குள் 'அலகாநந்தா தைலம்' ஐந்து பீப்பாய் தயார் பண்ணி வைத்திருக்கிறேன்—ஸாக்ஷாத் பரமேசுவரனுடைய ஜடையிலிருந்து பிழிந்தெடுத்தது. 'அலகா தைலம் தலையில் பூசிக்கொண்டது முதல் பெரிய சங்கடம் நேர்ந்துவிட்டது; பத்துக் கைகளும் படைத்த தேவியே வந்தால்கூடத் தூக்கி வார முடியாதபடி அவ்வளவு அடர்ந்து நீண்டுவிட்டது கூந்தல்' என்று ஒரு 'ஸர்ட்டிபிகேட்' தா, அம்மா."

புறப்பட்டுப் போகும்போது எலா கதவு வரைக்கும் வந்து திரும்பி, "நீங்கள் சொன்னதை மனசில் வைத்துக்கொண்டு தயாராகவே இருப்பேன். என்னை விலக்கும் நாள் வரலாம். சந்தடி செய்யாமல் போய்விடச் சித்தமாக இருக்கிறேன்" என்றாள்.

எலா போனதும் இந்திரநாதர், "என் என்னவோ போல் இருக்கிருய்? ஏதாவது விசேஷமா, கானுயி?" என்றார்.

"சற்று முன்னே தெருப்பக்கமாக, நம் மேஜையண்டை உட்கார்ந்துகொண்டு இரண்டு மூன்று சோதாப்பயல்கள்

அதிக தீவிரமாகப் பேசிக்கொண் டிருந்தார்கள். பேசுகிற தோரணையிலிருந்தே ஆசாமிகள் ஜான் புல் (ஆங்கிலேயன்) லின் அபிமான புத்திரர்கள் என்று புரிந்துவிட்டது. நான் உடனே, 'அவர்கள் பேசினது ராஜத்துரோகம்' என்று குற்றம் சாட்டிப் போலீஸுக்கும் பிராது கொடுத்து விட்டேன்."

"நீ ஊகித்தது தவறாக இராதே? கானாயி."

"சந்தேகப்படாமல் ஏமாந்து போய் ஆபத்தில் சிக்குவதைவிடத் தவறாக ஒருவன் பேரில் சந்தேகப்படுவது எவ்வளவோ மேல் அல்லவா? ஒரு வேளை வாஸ்தவமாகவே மடையனாக இருந்து உளறி இருந்தானானால் அவனைத் தப்ப வைக்க யாராலும் முடியாது. அப்படி நேர் விரோதியாகவே இருந்துவிட்டால் அவனை யார் என்ன செய்ய முடியும்? நான் பிராது கொடுத்தது நல்லதே; அன்று, 'ரத்தவெள்ளம் புரண்டோட இந்தச் சாத்தான் சர்க்காரை ஒழிக்க வேண்டும்' என்று உரக்கப் பேசிக்கொண் டிருந்தார்கள்; அபயசரண் ரக்ஷித்தும் இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவன் தான். ஒரு நாள் சாயங்காலம் பணப்பெட்டியை எடுத்து வைத்துக்கொண்டு கணக்கைச் சரி பார்க்க உட்கார்ந்தேன். திடீரென்று அழுக்கடைந்த கந்தல் துணி ஒன்றை உடுத்துக் கொண்டு ஒரு பையன் வந்து, 'ஓர் இருபது இருபத்தைந்து ரூபாய் இருந்தால் கொடுங்களேன். தினாஜ்புருக்குப் போக வேண்டும்' என்று ரகசியமாகக் கேட்டான். நம் மதுர் மாமாவைக்கூடத் தெரியும் என்றான். நான், 'என்னடா, அவ்வளவு திமிரா உனக்கு? சோதாப் பையா! போகிறாயா? இப்போதே போலீஸ் கையில் ஒப்பித்துவிடட்டுமா?' என்று எகிறிச் சீறி விழுந்தேன் அவன்மேல். சந்தர்ப்பம் சரியாக இல்லை. இல்லாவிட்டால் அந்த நாடகத்தைக் கடைசி வரைக்கும் நடித்தே இருப்பேன்; தானாவுக்குக்கூட இழுத்துக்கொண்டு போயிருப்பேன். உன் பயல்கள் பக்கத்து அறையில் உட்கார்ந்து டீ குடித்துக்கொண் டிருந்தார்களே,

அவர்களுக்கெல்லாம் என் பேரில் கோபம். அந்தப் பையனுக்குத் தாங்கள் பணம் கொடுக்க முன் வந்தார்கள். ஆனால் ஒவ்வொருவர் ஜேபியிலிருந்தும் சுரண்டி யெடுத்தும் பதின்மூன்று அணுவுக்கு மேல் வசூலாகவில்லை. அந்தப் பையன் இருந்தானே, அவன் என் எறிமூஞ்சியைப் பார்த்ததும் மெல்ல நழுவிவிட்டான்.''

“அப்படியானால், என்னதான் மூடிவைத்தும் தேன் மணக்கிறது; ஈ வந்து மொய்க்க ஆரம்பித்துவிட்டது என்று சொல்!''

“சந்தேகமே வேண்டாம், தம்பி. உன் பயல்களை யெல்லாம் தூரத் தூர அனுப்பிவிடு. ஒருத்தன்கூட வேலை இல்லாமல் சும்மா இருக்கக் கூடாது. பேருக்காவது ஜீவனோபாயம் (Ostensible means of livelihood) ஏதாவது இருந்துதான் தீரவேண்டும் ஒவ்வொருவனுக்கும்.''

“எனக்கும் அதே எண்ணந்தான்; இதற்கு வழி ஏதாவது கண்டுபிடித்தாயா?''

“வெகு நாளாயிற்று, கண்டு பிடித்து. என் கையிலே தாராளமாகப் பணம் இல்லை; அதனால்தான் நடத்திவிட முடியவில்லை. எல்லாம் யோசித்துத்தான் வைத்திருக்கிறேன்; சாமானும் சேர்த்துத்தான் வைத்திருக்கிறேன், மெல்ல மெல்ல. மாதவ கவிராஜ்* 'ஜ்வராசனி' மாத்திரை விற்கிறார்; அதில் முக்கால் பங்கு கொயினாதான். அதை அவரிடமிருந்து வாங்கி 'லேபில்' மாற்றி 'மலேரியாரி' மாத்திரை என்று பெயர் கொடுத்துவிடுகிறேன். கொயினா மாத்திரை என்று தெரியாதபடி பொய்ச் சரக்கு ஏதாவது திரிக்க வேண்டும். கித்தான் பை ஒன்றைக் கையில் கொடுத்து இந்த மாத்திரையைப்பற்றிப் பிரசாரம் செய்ய ப்ரதுல் லேனை அனுப்பவேண்டும். எம். எஸ்ஸி., முதல் வகுப்பிலே படிக்கும் உன்னுடைய நிவாரணனை வெட்கம் மானத்தை

* நாட்டு வைத்தியர்.

விட்டுவிடச் சொல். 'பைரவீ கவச'த்தை எடுத்துக்கொண்டு, 'ஏழு உலோகங்களுக்கு மேல் புதிதாகக் கண்டுபிடித்த இன்னும் சில உலோகங்களும் சேர்த்துத் தயார் பண்ணினது; புராதன ரிஷிகள் ஆசீர்வாதம் பெற்றது; இந்தக் காலத்து விஞ்ஞான ரீதியில் பார்த்தாலும் ஒப்பற்றது' என்று பிரசாரம் பண்ணலாம். ஜகபந்து, ஸம்ஸ்கிருத சுலோகங்களைச் சொல்லித் தன் இலக்கண சாமர்த்தியமெல்லாம் காட்டி உரக்க, 'சாணக்கியர் வங்காள தேசத்திலே நேத்திரகோணம் என்ற இடத்தில் ஜனித்தார். நானும் அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்தவன்தான்' என்று ஆரம்பிக்கட்டும், விவாதத்தை. இதைக் குறித்துப் பிரமாதமாக இலக்கியச் சர்ச்சை நடக்கும். கடைசியில் எங்கள் முப்பாட்டன் இருந்த இடிந்த வீட்டில் 'சாணக்கிய ஜயந்தி' கொண்டாடலாம். உங்கள் கேம்ப்ரிட்ஜ் டாக்டர் தாரிணீ ஸாண்டேல் மகமாரி கோவில் ஒன்று நிர்மாணம் செய்யப் போவதாகச் சொல்லிக்கொண்டு சந்தா வசூலிக்க ஊரெல்லாம் திரியட்டும். இப்போது ஆக வேண்டியது இதுதான். கொஞ்சம் தலையரட்டல்களாக இருக்கிறார்களே உன் 'சிப்பாய்கள்' சில பேர்; அவர்களுக்குக் கொஞ்ச நாள் ஏதாவது வேலை கொடுத்து அடக்கி வைக்க வேண்டும்—பார்க்கிறவர்கள் மடையன் என்று வேண்டுமானால் அவர்களைச் சொல்லிக்கொள்ளட்டும்; அழுத்தக்காரன் என்றாவது சொல்லிக்கொள்ளட்டும்; அதைப்பற்றிக் கவலை இல்லை."

இந்திரநாதர் சிரித்தபடி, "நீ சொல்வதை எல்லாம் கேட்டால் எனக்குக்கூட ஏதாவது வேலையில் இருக்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. வேறெதற்கும் இல்லை; 'திவாலாவதுதான் எப்படி? அதன் மர்மம் என்ன?'-இவற்றையெல்லாம் அறியத்தான்" என்றார்.

கானுயி: அப்பன், நீ இப்போது இறங்கியிருக்கிற வியாபாரங்கூட என்றைக்காவது ஒரு நாள் முழுகத்தான் போகிறது. திவால் ஆகிறவர்களுக்கு இது தெரியாது என்பதில்லை. அவர்கள் எப்போதும் நஷ்டமார்க்கத்தையே

கைப்பிடிக்கிறார்கள். மரண பரியந்தம் இந்தப் பெருஞ் சுழலில் சிக்கித் திரிகிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி இப்போது பேசிப் பிரயோஜனம் இல்லை. ஒன்று மட்டும் உன்னைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். எலாவைப் போல் அழகி உலகத்தில் அபூர்வம்; வாஸ்தவந்தானே?

"ஆமாம்; சந்தேகமே இல்லை."

"அப்படியானால் எந்தத் துணிவைக் கொண்டு அவளை உங்கள் மத்தியில் வைத்துக்கொண் டிருக்கிறீர்கள்?"

"காணாயி! உன்னோடு சில முக்கிய விஷயங்களைச் சொல்லியிருக்கவேண்டும், இத்தனை நாளைக்கு. நெருப்பைக் கண்டு அஞ்சுகிறவனாயிருந்தால் அதோடு பழகமாட்டான். என்னுடைய முயற்சியில் இந்த நெருப்பை விட்டு விலக எனக்கு இஷ்டமில்லை."

"அதாவது, காரியம் கைகூடினாலும் சரி, கைகூடாவிட்டாலும் சரி; உனக்கு அதைப்பற்றி அக்கறை இல்லை என்று சொல்லு."

"சிருஷ்டிகர்த்தா நெருப்போடுதானே விளையாடுகிறார். வெறும் பலனை எதிர்பார்த்துப் படைக்கும் தொழில் நடக்கவில்லை. நிச்சயமற்ற ஒன்றை உத்தேசித்துத்தான் இந்த அகண்ட முயற்சி நடக்கிறது. பச்சை மண்ணைக் கொண்டு விரலால் செய்யும் பொம்மையைக் கடைத்தெருவில் விற்றுக் காசு சேர்க்கும் சுபாவம் இல்லை எனக்கு. எலாவின் மோக வலையில் சிக்கி வந்திருக்கிறானே அந்தப் பையன் அதீன், அவனிடத்தில் பயங்கரமான வேலை நடத்தக்கூடிய பாணம் இருக்கிறது. இதனாலேயே அவன்மேல் எனக்குத் தனிப் பற்றுதல்."

"தம்பி! இந்த ஆபத்தான 'லேபரடரி'யில் நான் என்ன, இடைப்பத்தை எடுத்துப் பெருக்குகிற வேலைக்காரன் மாதி

ரித்தான்! உங்கள் ஆராய்ச்சியின்போது ஏதாவது 'காஸ்' வெளிப்பட்டு யந்திரங்கள் வெடித்தால் என் தலை நூறு சுக்கலாக வேண்டியதுதான். எனக்கு என்னவோ இதில் பெருமை யடித்துக்கொள்ளக் கூடியபடி உற்சாகம் எதுவும் இல்லை."

"அப்படியானால் ஏதாவது சொல்லி எங்களைத் தட்டிக் கழித்துவிடேன்."

"பலனை எதிர்பார்த்துத்தான் நாங்கள் வேலை செய்கிறோம்; நீ அப்படி இராதிருக்கலாம். 'ஜீவரஸங்கூட எங்களிடத்தில் கிடைக்கும்' என்று உன்னுடைய நபர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன், ஒரு சமயம். நீங்கள் செய்யும் நாசமாய்ப் போன அந்த ஆராய்ச்சியின் விளைவினால் ஏதாவது லாபம் கிட்டுமென்றுதான் எங்களைப் போன்ற ஏழைகள் வந்து உங்களை மொய்த்துக்கொள்ளுகிறோம்; என்றைக்கோ வரும் பலனை எதிர்பார்த்து அல்ல. நீயோ இதைச் சூதாடும் பாவனையில் பார்க்கிறாய். ஏதாவது கிடைக்குமா என்று வியாபாரக் கண்ணோடு நாங்கள் பார்க்கிறோம். கடைசியில் என் கடைக்கணக்கில் கொள்ளி வைத்துவிட்டு எங்களையெல்லாம் கேலிக்கு இடமாக்காதே, தம்பி! இதில் சேர்த்த ஒவ்வோர் அணுவும் என் ரத்தத்தைச் சிந்தித் தேடியது."

"காணாய்! எந்தக் குருட்டு நம்பிக்கைக்கும் நான் இடங் கொடுப்பவனல்ல. வெற்றி தோல்வி என்பதைப்பற்றி நான் சிந்திக்கவில்லை. ஒரு பெரு முயற்சியை முன் நின்று நடத்துபவன் நான். என்பேரில் எனக்கு நம்பிக்கை இருப்பதனாலேயே இந்தக் காரியத்தில் இறங்கினேன். இந்த இடத்தில் தோல்வியும் உயர்வானதே; வெற்றியும் உயர்வுதான்! அவர்கள் நாலு பக்கமும் அடைத்து என்னைச் சிறுமைப்படுத்த எண்ணினார்கள். செத்து மடிந்தாலும் நான் சாமானிய மானவன் அல்ல என்பதை நிரூபிப்பேன். என் அழைப்பிற்கு இணங்கி எத்தனையோ உத்தமர்கள் மரணத்தையும் துச்ச

மென்று எண்ணி என்னை வந்து அடைந்தார்கள். அது உனக்கே தெரியும், காளுயி! ஏன் அப்படி, தெரியுமா? என் அழைப்பிற்கு ஒரு தனி மதிப்பு இருப்பதனுலேயே. இந்த உண்மையை உலகம் அறியும்படி செய்வேன். அப்புறம், நடக்கிறபடி நடக்கட்டும். ஒரு சமயம் வெளியி லிருந்து பார்ப்பதற்கு நீ சாதாரண மனிதனுகவே தோற்றி ஞய். ஆனுல் உன்னுள் அடங்கியிருக்கும் ஓர் அதிசய சக்தியை நான் வெளிப்படுத்தவில்லையா? உங்களுக்கெல்லாம் உற்சாகம் ஊட்டினேன். மனுஷ்யர்களுடைய தன்மை யைப் பற்றியதே என்னுடைய இந்த ரஸவாதம். இதைவிட வேறு என்ன வேண்டும்? சரித்திரப் பிரசித்தமான மகா காவியத்தின் முடிவு அபஜயத்தின் மயான காண்டமாகவும் இருக்கலாம். இருந்தாலும் அது மகா காவியந்தானே! அடிமைத்தனத்தில் அழுந்திக் குன்றி மனிதர் வாழும் நாட்டில் துறக்கும் விதத்தில் உயிர் துறப்பது கிடைப்பதற்கு அரிய சந்தர்ப்பம் அல்லவா?"

"தம்பி! என்னைப்போன்ற மூளை இல்லாத 'பிராக்டிகல்' (லோகரீதியாக இருக்கும்) மனுஷ்யனைக்கூட உங்கள் பயங்கர வெறியாட்டத்தில் இழுத்துக்கொண்டு விட்டீர் களே! அதை எண்ணும்போது இதன் மர்மமே எனக்குப் புரிபடவில்லை."

"பிச்சைக்காரனைப் போல் கெஞ்சிக் கேட்காததனுலேயே உங்கள்மேல் என் அதிகாரம் செல்லுகிறது. ஆசை காட்டியோ, மயக்கியோ நான் எவரையும் கூப்பிடவில்லை. சாதிக்க முடியாத ஒன்றை நடத்தவே அழைத்தேன்; பலனை எதிர்பார்த்தல்ல; வீரத்தை வெளிப்படுத்தவே. நான் எதிலும் பற்றற்றவன். தடுக்க முடியாத ஒன்றைச் சற்றும் மனம் சலி யாமல் ஏற்றுக்கொள்ளும் துணிவு எனக்கு உண்டு. உலக சரித்திரத்தில் பெரிய ஸாம்ராஜ்யங்கள் உன்னத நிலையில் இருந்து தரையோடு தரையாக அழிந்துபோனதைப் பார்த் தாயிற்று. உலகத்திற்கு ஆற்றவேண்டிய ஒரு பெருங்கடனை அந்த ஸாம்ராஜ்யங்கள் இன்னும் தீர்க்காமலே மறைந்து ஒழிக்

தன. இந்த நாட்டில்-எப்படி இருந்தாலும் என் நாடுதானே! ஐசுவரியத்தின் மேன்மையில் வீற்றுச் சரித்திர நோக்கோடு இந்தத் தோல்விக்கெல்லாம் காரணங்கள் கற்பித்துக்கொண்டு மழுப்பி முறையிட்டுக்கொள்ளும் அத்தகைய தேசாபிமானி அல்ல நான்-விஞ்ஞானிக்குரிய பற்றற்ற மனத்துடன் மரணத்தை வரிப்பவன் மரித்தே தீருவான்."

"அப்புறம்?"

"அப்புறமா! நாட்டிற்கே இதனால் பெருங்கேடு வருவ தாக இருந்தாலும் நான் சற்றும் தலை குனியமாட்டேன்; நான் அதற்கும் மீறி நிற்பவன். சாவதன் அறிகுறி தோன் றினும் மனத்தில் சற்றுவது சளைக்கமாட்டேன்."

"நாங்களோ?"

"நீங்கள் எல்லாம் குழந்தைகளா என்ன? நடுக்கடலில் எட்டு இடத்தில் பிளவு கண்டு கப்பல் மூழ்கும்போது அழுது புரண்டாலும் - கடவுள்மேல் பாரத்தைப் போட் டாலும் - பிழைக்க முடியுமா?"

"அப்படி முடியாவிட்டால், அப்புறம் என்ன?"

"நீங்கள் சில பேர் ஆபத்தை உணர்ந்தும், மூழ்கும் அந்தக் கப்பலைப் புயலுக்கு எதிராகப் பாய்விரித்துச் செலுத் தும்போது உங்களை என்னவென்று சொல்வேன்? எதற்கும் நடுங்காத பேர்வழிகள் என்றுதான் சொல்வேன். இப்படி மூழ்கத் தயாராக இருக்கும் சிலரினாலேயே நாம் வெற்றியைக் காணமுடியும். 'சர்வ நாசத்தை நோக்கிக் குருட்டுத்தன மாகச் செல்லும் இந்தத் தேசக் கப்பலின் உச்சாணிக் கூம்பின் முடிவு வரை வெற்றிக் கொடியைப் பறக்கவிட்டவர்கள்; விலைசை கொள்ளாதவர்கள்; யாரையும் கெஞ்சிக் கேட்காதவர்கள்; குய்யோ முறையோ என்று நம்பிக்கை இழந்து கதறுபவர்கள் அல்ல' என்றே சொல்வேன். கப்பல்

நீரில் கவிழும்போதும் சுக்கானைக் கைவிடாத தீரர்கள் என்றே வியப்பேன். அந்த வேளையில் சுக்கானைக் கைவிடுவதுதான் பேடித்தனம். போதும்; உங்களில் சில பேரை வைத்துக்கொண்டாலே என் காரியம் முடிந்த மாதிரிதான். அதற்குமேல்? 'கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன' (கருமத்திலேயே கண்ணுயிருப்பான்; எக்காலும் பலனை நோக்கான்.)"

"நீ இவ்வளவு பேசியதில் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லவில்லை என்றே தோன்றுகிறது."

"அது என்ன?"

"உன் மனத்தில் கோபதாபம் என்பதே துளிக்கூட இல்லையா? அவ்வளவு பற்று (impersonal) அற்றவனா நீ?"

"யார்மேல் கோபம்?"

"இங்கிலீஷ்காரர்மேல்."

"குடித்துவிட்டுக் கண் சிவக்கச் சண்டைக்கு இழுக்கும் காட்டுமிராண்டி அல்ல நான். கோபாவேசத்தில் கடமையை மீற வேண்டிய நிலைமை ஏற்படும்."

"அது இருக்கட்டும். ஆனால் கோபம் மூள்வதற்கு ஹேது இருந்தால் சும்மா இருப்பது சரியா?"

"ஐரோப்பா முழுவதும் சுற்றிப் பழக்கம் உண்டு. இங்கிலீஷ் ஜாதியார் எந்தமாதிரி என்பதும் எனக்குத் தெரியும். மேல்நாட்டில் உள்ள மற்ற ஜாதியாரைக் காட்டிலும் இவர்களே உயர்வுடையவர்கள். விரோதி வந்து தாக்கும்போது பதிலுக்கு இவர்களால் அடிக்க முடியாது என்பதில்லை; ஆனால் கடைசி வரைக்கும் அப்படிச் செய்ய இவர்களால் முடிவதில்லை. மானத்துக்குப் பயப்படு

பவர்கள். இவர்களுக்குள்ளேயே சிரேஷ்டமானவர்கள் எதிரே பதில் சொல்லியாகவேண்டும் என்ற அச்சமே. அவர்கள் தாங்கள் ஏமாந்து போவதோடு அவர்களையும் ஏமாறும்படி செய்கிறார்கள். அவர்கள்மேல் அதிக ஆத்திரம் கொண்டால் வெடித்துவிடும் அளவுக்கு வந்துவிடும் அவ்வளவு கோபாக்கினி நம்மிடத்தில் இல்லை."

"அற்புதமான மனுஷ்யன் நீ!"

"அற முறுக்கினால் நம் முதுகெலும்பையே என்றென்றும் அவர்கள் முறித்துவிடலாம். ஆனால் அம்மாதிரி செய்ய முடியாதிருப்பது ஏனோ? அவர்களுடைய மனிதத் தன்மையை நான் போற்றுகிறேன். பிற நாட்டை ஆள்வதனாலேயே அவர்களுக்கு இருந்த அந்தத் தன்மை போய்க்கொண்டு வருகிறது. உள்ளூறப் புரை கண்டுவிட்டது. அந்நிய தேசத்தைச் சம்ரட்சிக்கும் பாரத்தை இப்படி வேறு எந்த ஜாதியுமே ஏற்றுக்கொண்டதில்லை. இதனால் அவர்கள் உயர்ந்த பண்பு அழிந்துகொண்டு வருகிறது."

"அது அவர்களுக்கும் தெரிந்திருக்கலாம்."

"உன்னுடைய இந்த முயற்சி எந்தக் காரணத்தையும் உத்தேசித்து அல்ல என்கிறாயே, இதுதான் எனக்கு விநோதமாக இருக்கிறது!"

"நீ எண்ணுவது தவறு. நான் அநீதம் எதுவும் செய்ய மாட்டேன்; வெறி பிடித்து அலையமாட்டேன். தேசத்தை, 'தாயே' என்று கண்ணுங் கண்ணீருமாக வாயால்மட்டும் புகழ்பவன் அல்ல நான். வேலை செய்வேன். அதிலேயே எனக்கு உற்சாகம்."

"விரோதியை விரோதி என்று எண்ணாத பட்சத்தில் அவனுடன் நீ எப்படிப் போர் தொடுப்பாய்?"

"வழியில் விழுந்து கிடக்கிற பாறாங்கல்லை எப்படி ஒரு கருவியைக் கொண்டு அகற்றப் பார்க்கிறோமோ அப்படிப்பட்ட நிதான புத்தியுடனேதான். அவர்கள் நல்லவர்களோ, கெட்டவர்களோ அதைப்பற்றி இங்கே பேச்சில்லை. அவர்கள் ஆட்சி அந்நியராட்சி. அது நமக்குள்ளே புகுந்து நம் ஆத்மாவை அழிக்கிறது. இயற்கைக்கு விரோதமான இந்த நிலையைக் குலைப்பதற்கு முயற்சி செய்யும் மனித சுபாவத்தையே நான் உயர்வாகக் கருதுபவன்."

"ஆனால் அது கைகூடும் என்பதைப்பற்றி உனக்குத் திட நம்பிக்கை இல்லைபோல் இருக்கிறது?"

"இருக்கலாம். ஆனால் என் சுபாவத்திற்கு இழுக்கு நேரிடும்படி விடமாட்டேன் - எதிரே மறலி வந்து நின்ற போதிலும்! தோல்வி அடைவேன் என்ற ஐயம் இருந்தாலும் எதையும் பொருட் படுத்தாமல் சுயமரியாதையைக் காப்பாற்றவேண்டும். இதுவே நான் செய்யவேண்டிய முடிவான கடமை என்று எனக்குப் படுகிறது."

"அதோ வருகிறான், ரத்தப் பெருக்கை உலகத்தில் கொண்டு வரும் போலிப் பகீரதன்; அவனுக்கு டீ கொடுத்து விட்டு வருகிறேன். போலீஸுக்கு எல்லாச் சமாசாரமும் எட்ட விட்டுவிட்டதாக இதோ அவனிடம் அழுத்தந் திருத்தமாகச் சொல்லப் போகிறேன், பார். உன் கோஷ்டியைச் சேர்ந்த அந்த மூடர்கள் என்னைச் சித்திர வதை செய்யாமல் இருக்கவேண்டும்!"

இரண்டாம் அத்தியாயம்

முதுகுப்புறம் தலையணை வைத்துக்கொண்டு லலா ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தாள்; ஒரே கவனமாக ஏதோ எழுதிக்கொண் டிருந்தாள், கால்மேல் கால் போட்டுக் கொண்டு. தேசபந்துவின் படம் போட்ட கோட்டுப்

புஸ்தகம் ஒன்றை மரப்பலகையோடு மடியில் சாய்த்துப் பிடித்தவண்ணம் இருந்தாள். பொழுது சாய்ந்துகொண்டே வந்தது; இன்னும் கூந்தல் வாராமல் அப்படியே கிடந்தது. உடம்பில் கத்திரிப்பூ நிறக் கதர்ச் சேலை. அதில் அழுக்குப் படிந்தாலும் வெளிக்குத் தெரியாது. ஆகவே, வீட்டுக்குள் வேலை செய்வதற்கு ஏற்றதாக இருந்தது. எலாவின் கையில் சிவப்பு வர்ணந் தீட்டிய ஒரு ஜதை சங்கு வளையல்; கழுத்தில் ஒரு பொன் சங்கிலி. தந்தச் சாயல்; வனப்பு மிகுந்த தேகக்கட்டு. மிகவும் அறியாத வயசு என்றுதான் தோன்றும், பார்ப்பவர்களுக்கு; ஆனால் முகத்தில் ஆழ்ந்த புத்தியின் பிரகாசம். அறையின் ஒரு மூலையில் சுவரோடு சேர்ந்தாற்போல் குறுகலான இரும்புக் கட்டில் ஒன்று. அதன்மேல் பச்சை நிறக் கதர்ச் சால்வை போர்த்திருந்தது. நாராயணீ ஸ்கூலில் நெய்த ஜமக்காளம் ஒன்று தரைமேல் விரித்திருந்தது. ஒரு பக்கம் சின்ன மேஜையொன்றில் 'பிளாட்டிங் பாட்'. அதன் ஒரு மூலையில் பேனா, பென்ஸில் வைக்கும் 'ஸ்டாண்டு'. மறுபுறம் ஒரு பித்தளைக் கலசத்தில் கந்தராஜ புஷ்பக்கொத்து. சுவரில் வெகு நாளைக்கு முன் எடுத்த ஒரு போட்டோ தொங்கியது. அது மஞ்சளேறிப் போய் மங்கி மறைந்து வந்தது. இருட்டிவிட்டது; தீபம் வைக்கும் வேளை ஆகிவிட்டது. 'எழுந்திருக்க வேண்டும்' என்று எண்ணிக்கொண்டே இருக்கையில், குப்பென்று காற்று வீசுவதுபோல், கதர்ப்படுதாவை விலக்கிக்கொண்டு அறையில் நுழைந்துகொண்டே, "எலி" என்று கூப்பிட்டான் அதீன்.

எலாவுக்குக் குதூகலத்தால் தூக்கிப் போட்டது; அவள், "முன்பின் தெரிவிக்காமல் இந்த அறையில் நுழைய உனக்கு அவ்வளவு துணிச்சலா? இது நன்றாயில்லை, சுத்தமாக" என்றாள்.

எலாவின் காலண்டை வந்து தொப்பென்று தரையில் உட்கார்ந்தான் அதீன். "மனிதன் வாழ்வதோ கொஞ்ச

நாள்தான். ஆனால் இந்தச் சட்ட திட்டங்களோ ஏராளம். அந்த நாளில் மாந்தாதா போன்றவர்களுக்கு இதையெல்லாம் கடந்து போவதற்கு நீண்ட ஆயுள் இருந்தது. கலிகாலத்திலே அந்தமாதிரி முடிகிறதில்லையே!" என்றான்.

"இதை அவிழ்த்து வைத்துவிட்டு வேறு புடைவை கட்டிக்கொள்ளக்கூட இல்லையே நான், இன்னும்."

"நல்லதாய்ப் போயிற்று. அப்படியானால் என்னோடேயே சேர்ந்து சாப்பிடலாம். நீ யானைமேலே இருக்க, நான் கீழே நடந்து போவதென்றால் ஒன்றுக்கொன்று ஒத்திராதே. மநுநீதிப் பிரகாரம் இது அதர்மமாயிற்றே! ஒரு காலத்தில் நானும் ரொம்பப் பெரிய மனுஷ்யனாகத்தான் இருந்தேன். நீ வந்துதான் அந்த வேஷத்தை வெளிப் படுத்திவிட்டாய். இப்போது நான் போட்டுக்கொண்டிருக்கிற 'ட்ரெஸ்' (உடுப்பு) எப்படி?"

"இதை ஒரு 'ட்ரெஸ்' (உடுப்பு) என்று கூடவா சொல்லவேண்டும்?"

"பின்னே என்ன என்பதாம்?"

"சரியான வார்த்தை அகப்படவில்லை; இதற்கேற்ற பதங்கூடப் பாஷையிலே இல்லை என்றுதான் தோன்றுகிறது. சொக்காயில் முன் பக்கம் அதோ கிழிசல்மேல் கோணலாக ஒட்டுப்போட்டிருக்கிறதே; உன்னுடைய தையல் வேலை தானே? நன்றாகத் தெரிகிறதே."

"நம்முடைய துரதிருஷ்டம், எதையும் சகித்துக் கொண்டுதானே போகவேண்டும்? இதிலிருந்தே எனக்கு எவ்வளவு பொறுமை என்று தெரியவில்லையா? இந்தச் சொக்காயைத் தையல்காரனிடம் கொடுக்க அவ்வளவு துணிச்சலும் இல்லை; அவனுக்குக்கூடச் சுயமரியாதை என்று ஒன்று இருக்கிறதல்லவா?"

"என்னிடம் கொடுக்கிறதுதானே?"

"புதிய யுகத்தைச் சீர்திருத்தும் பாரம் போதாதென்று பழைய சட்டையைக் கூடவா சீர்திருத்தித் தரவேண்டும்?"

"பின்னே இந்தக் கண்றாவியைப் பார்த்துச் சகித்துக்கொண் டிருக்கவேண்டும் என்கிறாயா?"

"ஆமாம். நல்ல மனுஷ்யனாய் இருந்தால் பெண்டாட்டி பண்ணுகிறதை யெல்லாம் சகித்துக்கொண்டு இருக்க வில்லையா?"

"அப்படி என்றால்?"

"அப்படி என்றால், இந்த ஒரு சொக்காயைத் தவிர வேறு இல்லை என்று அர்த்தம்."

"என்ன, அந்து? நீ சொல்கிறது! இந்தப் பூலோகத்தி லேயே இதை விட்டால் வேறு சொக்காயே கிடைக்காதா என்ன?"

"இன்னும் பேச்சை வளர்த்திக்கொண்டே போனால் அழகாய் இராது; சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். பூர்வாசிரமத்தில் ஸ்ரீயுக்த ஆதீந்த்ர பாபுவுக்குப் பல ரகத்தில் ஏராளமாகச் சொக்காய் இருந்தது வாஸ்தவந்தான். இப்படி இருக்கும்போதுதான் தேசத்தில் வெள்ளம் வந்தது. நீ ஒரு பிரசங்கத்தில், 'நாட்டில் கண்ணீர் பெருக்கெடுத்தோடும் இந்தக் கெட்ட காலத்தில் (கண்ணீர் பெருக்கெடுத்தோடும் என்ற விசேஷணம் இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது) எத்தனையோ ஆடவர்களும் பெண்மணிகளும் மானத்தைக் காப்பாற்றக்கூடத் துணி இராமல் திண்டாடுகின்றனர்; இதனால் யாருக்கு அவமானம்? அவசியமான அளவுக்கு மிஞ்சித் துணிமணிகளை வைத்துக்கொண்டு இருக்கிறார்களே

அவர்களுக்குத்தான்' என்று ரொம்ப அழகாகச் சொல்லி முடித்தாய். அப்போது உன்னைப் பார்த்துப் பகிரங்கமாகச் சிரிக்க அவ்வளவு தைரியம் இல்லை எனக்கு. மனசுக்குள் ளேயே சிரித்துக்கொண்டேன். வேண்டிய அளவுக்குமேல் ரவிக்கை புடைவை யெல்லாம் உன் பெட்டியில் இருக் கின்றன என்று நிச்சயமாகத் தெரியும் எனக்கு. ஐம்பத் தெட்டு வர்ணத்திலே ஐம்பத்தெட்டு ரவிக்கையோ புடை வையோ இருந்தாலும் பொம்மனுட்டிகளுக்குப் போதாது தான். அன்று, 'யார் எவ்வளவு சேர்க்கிருர்கள் பார்க்க லாம்' என்று தேசசேவிகைகளுக்குள்ளே ஒரே போட்டி; உடனே என் துணிப்பெட்டியை உன் காலடியில் வைத்தேன்; நீ குதூகலத்திஞல் கைதட்டிச் சிரித்தாய்!"

"நீ சொல்கிறது நன்ருய் இருக்கிறதா? ஒரேயடியாக எல்லாவற்றையும் இப்படிக் கொடுத்துவிட்டுத் திண்டாடு வாய் என்று யார் கண்டார்கள் அப்போது!"

"இதில் என்ன அதிசயம்? அஸாத்தியமான இந்தப் பயங்கர முயற்சியில் ஈடுபடும்படி எனக்கு உத்ஸாகம் அளித்துச் சக்தியை ஊட்டியது யார்? கணேச மஹாம்தார் தண்டியிருந்தாஞனல் இப்படி எனக்கு கஷ்டம் அதிகமாக ஏற்பட்டிராது."

"சீச்சீ! அந்து! ஏன் இத்தனை நாள் இதை என்னிடம் சொல்லாமல் இருந்தாய்?"

"வருத்தப்படாதே! அப்படி ஒன்றும் பிரமாதமல்ல இது. இரண்டு சொக்காயைச் சாயந்தோய்த்து வைத்திருக்கிறேன், அன்ருடம் போட்டுக்கொள்ள; அவைகளை மாற்றி மாற்றித் துவைத்துப் போட்டுக்கொள்கிறேன். இன்னும் இரண்டு மடித்து வைத்திருக்கிறேன் அவசரத்திற்கு. யாராவது சந்தேகப்பட்டு விட்டால் பெரிய மனுஷ்யர்கள் வீட்டுப் பிள்ளைதான் என்று நிரூபிக்க வேண்டாமா? அதற்காக இந்த இரண்டு சொக்காயையும் வண்ணுனுக்குப் போட்டுத் தயாராக வைத்திருக்கிறேன்."

"நீ அதைச் சொல்ல வேண்டியதில்லை; உன் முகமே சொல்லும்; அத்தாட்சி எதற்கு?"

"இது வீண் முகஸ்துதிதானே? பொம்மனாட்டிகளைப் புருஷர்கள் ஸ்தோத்திரம் பண்ணுவதுதான் ரொம்ப நாளைய ஸம்பிரதாயம்: அவர்களுக்கு அந்த உரிமையும் உண்டு. நீ ஒரேயடியாக அதை மாற்றப் பார்க்கிறாயே!"

"ஆமாம். 'இந்தக் காலத்தில் பெண்களுக்குத்தான் உரிமை அதிகமாகி இருக்கிறது. புருஷர்களைப்பற்றி நிஜத்தைச் சொல்ல அவர்களுக்குத் தடை கூடாது' என்று பிரசாரங்கூடச் செய்யத் தயார் நான். ஏன், மறுமலர்ச்சி இலக்கியத்தில் பாரேன்; வங்காளிப் பெண்கள் தங்களைத் தாங்களே வானளாவப் புகழ்ந்துகொள்ளவில்லையா? தாங்கள் தேவியின் அம்சம் என்று பிறர் சொல்லவேண்டியதைத் தாங்களே சொல்லிக்கொள்ளவில்லையா? இலக்கியம் என்ற பெயரில் தங்கள் இனத்தையே தூக்கி வைத்துப் பேசுகிறார்கள். இந்த அலங்காரமெல்லாம் அவர்கள் சொந்தக் கைச்சரக்கே யொழிய, கடவுள் கொடுத்ததல்ல. எனக்கு மட்டும் லஜ்ஜையாகத்தான் இருக்கிறது. வெளிப்பக்க அறைக்குப் போகலாம்; வா."

"இங்கேயே உட்கார வேண்டிய இடம் இருக்கிறது. பெரிய சபையா என்ன இது? நான் மட்டுந்தானே இருக்கிறேன்."

"சரி; அப்படியானால் இப்போது அவசரமாக ஆகவேண்டிய காரியத்தைச் சொல்லு."

"திடீரென்று ஏதோ ஒரு செய்யுளின் அடி ஞாபகத்துக்கு வந்தது; ஆனால் அதை எதில் படித்திருக்கிறேன் என்று கவனம் வரவில்லை. காலையிலிருந்து மூளையைக் குழப்பிக்கொண்டு யோசித்துத் திரிகிறேன். உன்னைக் கேட்கலாம் என்றுதான் இங்கே வந்தேன்."

"ரொம்ப அவசரமாக்கும்? சரி; சொல்லு."

"கொஞ்சம் யோசித்துப் பார்த்து யாருடையது என்று சொல்:

உன்றனது விழியினிலே
உணர்ந்தேன் நான் என் அழிவை."

"அப்படிப் பிரபலமான கவி எவனும் பாடினதாகத் தெரியவில்லையே இது?"

"முன்னே எப்போதோ கேட்டிருக்கிறாற்போலே தோன்றவில்லையா?"

"எனக்குத் தெரிந்தவர் யாரோ பாடின மாதிரித்தான் படுகிறது. மற்ற அடி எங்கே போயிற்று?"

"இது தெரிந்தால் தானாகவே அந்த அடியும் ஞாபகத்துக்கு வரும் என்று எண்ணினேன்."

"நீ ஒரு தரம் சொல்; கேட்டேனானால் நிச்சயமாகக் கவனம் வரும்."

"அப்படியானால் கேள்:—

அன்றொரு நாள் வேனிலின்கண்
அந்திஒளி படர்ந்திருக்க
உன்றனது விழியினிலே
உணர்ந்தேன் நான் என் அழிவை."

அநீனின் தலைமேல் ஒரு தட்டுத் தட்டி வலா, "என்ன, உனக்கு வரவரப் பைத்தியம் தலைக்கேறி விட்டாற்போல இருக்கிறதே!" என்றான்.

"அந்தச் சித்திரை மாசம் எப்போதோ ஓர் அவவேளையிலிருந்து எனக்குப் பிடித்துவிட்டது பைத்தியம்! என் நோக்கமெல்லாம் ஒரு முடிவுக்கு வராமல் அரைகுறையாக நிற்கும் சமயங்களில் அவற்றின் கவனம் மட்டும் மனசிலேயே நிழல்போல் வட்டமிட்டுக்கொண் டிருக்கும். கானல் நீர்போல் கரையும் அந்த மாதிரி ஒரு தினத்தில்தான் நீயும்

நாளும் சந்தித்தோம். அந்த நினைவுலகத்துக்குத்தான் இப்போது உன்னை அழைத்துச் செல்லப் போகிறேன். இதனால் உன் காரியம் கெட்டாலும் கெட்டும்."

மரப்பலகையையும் நோட்டுப் புஸ்தகத்தையும் தரையில் போட்டுவிட்டு ஏலா, "சரி. என் காரியம் கிடக்கட்டும்; விளக்கை ஏற்றிவிட்டு வருகிறேன்'' என்றாள்.

"வேண்டாம்; வெளிச்சம் இருந்தால் நாம் இருப்பது பட்டவர்த்தனமாகிவிடும்; விளக்கின் துணை இல்லாமலே அந்தப் பழைய ஞாபகங்களை ஒரு முறை திரும்பிப் பார்ப்போம். நாலு வருஷத்துக்கு முன்னே ஸ்டீமரில் போய்க் கொண்டிருந்தேன், மோகாம் காட் வழியாக. அப்போது பிதுரார்ஜிதச் சொத்தெல்லாம் கடனில் மூழ்கி இருந்தது. கொஞ்சம் நஞ்சம் மிகுந்ததை வைத்துக்கொண்டு காலந் தள்ளி வந்தேன். அப்போதும் நாகரிகத்தின் மெருகு என் உள்ளத்திலும் புறத்திலும் இருந்துதான் வந்தது, வர்ணத்தை இறைக்கும் அந்திவேளை மேகம்போல். உடம்பில் பட்டு ஜிப்பாவும் தோளில் மடிப்பு உள்ள பகட்டான அங்க வஸ்திரமுந்தான் நான் அணிவது வழக்கம். தனியாக ஒரு நாற்காலியில் முதல் வகுப்புத் தட்டில் உட்கார்ந்திருந்தேன். படித்துக் கீழே போட்டிருந்த தினசரியின் இதழ்கள் 'பர் பர்' என்று இங்கும் அங்கும் பறந்துகொண்டு இருந்தன; அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன். ஊர்ச் செய்தியெல்லாம் ஓர் உருவாய்த் திரண்டு தலைகால் தெரியாது நடனம் ஆடுவதுபோலவே இருந்தது எனக்கு. நீ சாதாரணப் பிரயாணிகளுள் ஒருத்தியாகக் கீழ்த் தட்டில் இருந்தாய். எனக்கு முன்பின் தெரியாதிருந்தும் திடீரென்று என் எதிரில் வேகமாய் வந்து தோன்றினாய். இன்றுகூட என் கண்ணெதிரே அந்தக் காட்சி வந்து நிற்கிறது; அப்போது ஒரு பழுப்பு நிறச் சேலை உடுத்திருந்தாய். கொண்டைமேல் படிந்தாற்போல் செருகியிருந்த மேலாடை; அது உன் முகத்தின் இருபுறமும் காற்றில் ஊதிப் புடைத்தது. கூச்சமே இராதவள்போல், 'நீங்கள் கதர்

கட்டுவதில்லையா?' என்று கேட்டாய். கவனம் இருக்கிறதா?"

"நன்றாக இருக்கிறது. உன் மனசில் எழும் சித்திரங்களைப் பேச வைக்கும் சாமர்த்தியம் உனக்கு உண்டு; என் மனசிலுள்ள சித்திரங்களோ ஊமைகள்."

"அன்றைக்கு நடந்ததையெல்லாம் மறுபடியும் ஒருதரம் சொல்லுகிறேன். நீ கேட்க வேண்டும்."

"கேட்காமல் என்ன? அன்று என் வாழ்வில் ஏற்பட்ட அந்தப் புது அநுபவத்தைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பாராமல் இருக்க முடியவில்லை."

"உன் குரலைக் கேட்டு என் உடலெல்லாம் சிலிர்த்தது. அந்த இன்னிசை ஒளிக்கிரணம்போல் சட்டென என் உள்ளத்தில் வந்து பாய்ந்தது. வானத்திலிருந்து ஏதோ ஓர் அபூர்வப் பறவை கப் என்று வந்து என் வாழ்நாளையே கொள்ளை கொண்டு சென்றதுபோல் பிரமையுற்றேன். முன்பின் தெரியாத ஒரு பெண் இப்படி வந்து நம்மை அலக்ஷ்யமாய்க் கேட்கிறாளே என்று உன்மேல் கோபித்துக் கொண்டிருக்கலாம். அப்படி எறிந்து விழுந்திருந்தேனானால் நம் வாழ்க்கை இப்படி வேறு துறையில் போய்ச் சிக்கி இராது. சாதாரணமாக எல்லோரும் போகிற வழியில் நானும் போய்க்கொண் டிருப்பேன்; கடைசிவரைக்கும் பெரிய மனுஷ்யனாகவே காலந் தள்ளியிருப்பேன். என் மனசு அப்போது நைந்திருந்தது, ஈர வத்திக் குச்சிபோல்; கோபத்தழல் அதில் ஒளிரவில்லை. சுபாவமாகவே எனக்கு 'நான்' என்ற மமதை உண்டு; இது எனக்குள்ள ஒரு விசேஷ குணம் என்றுதான் சொல்லுவேன்; 'என்னை அவளுக்குப் பிடித்திருக்கவேண்டும்; இல்லாவிட்டால் இந்தப் பெண் நம்மிடம் வலிய வந்திருக்க மாட்டாள்' என்று பட்டது என் மனசில். கதர்ப் பிரசாரம் என்பது வெறும் சாக்கு; வாஸ்தவந்தானே?"

"நிஜந்தான்; எத்தனை தரம் சொல்வது?—ரொம்ப நேரம் கீழ்த்தட்டில் ஒரு மூலையில் உட்கார்ந்து உன்னைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். யாராவது இதைக் கவனிக்கிறார்களா என்றுகூட யோசிக்கவில்லை. என் வாழ்விலேயே அதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமான விஷயம்; க்ஷண நேரத்தில் உன்னை உள்ளூற அறிந்துகொண்டேன். 'எங்கிருந்து வந்து முளைத்தான் இவன்? புதுத் தினுசாகவே இருக்கிறானே. சூழ்நிலைக் கேற்றாற்போல் இல்லையே! சேற்றில் பிறந்த தாமரைபோல் தோன்றுகிறானே! — இப்படிப்பட்ட ஆசாமிகள் அகப்படுவதே துர்லபம். இவனை மெல்ல இழுத்துப் போடவேண்டும் உள்ளே—நமக்காக மட்டுமல்ல, எல்லார் பொருட்டுந்தான்' என்று எண்ணமிட்டேன்."

"உன் ஒருத்திக்காக நான் பல பேரின்கீழ் அமுங்கிக் கிடக்க வேண்டியிருக்கிறதே; இதுவும் என் தலை விதிதான் போல் இருக்கிறது!"

"நான் என்ன பண்ணுவேன், அந்து? வேறு வழி இல்லையே! திரௌபதியைப் பார்ப்பதற்கு முன்னாலே குந்தி, 'நீங்களெல்லாரும் சரிபாகமாகப் பங்கிட்டுக் கொள்ளுங்களடா, அப்பா' என்று பாண்டவர்களிடம் சொல்லவில்லையா? நீ வருவதற்கு ரொம்ப முன்னாலேயே தேசத்தின் ஆக்ஞைக்கு அடங்கி நடப்பதாகச் சபதம் செய்துவிட்டேன்; எனக்கென்று எதையும் வைத்துக்கொள்ள மாட்டேன் என்று உறுதியும் பூண்டேன். தாய் நாட்டுக்கே என்னை அர்ப்பணமும் செய்துவிட்டேன்."

"நீ பண்ணினது சுத்த அநியாயம்! இதை விடாமல் அநுஷ்டிப்பது ஸ்வதர்மத்திற்கே பெருந் துரோகம்! பிரதிக்ஞையை மீறினால்தான் உண்மையைக் கடைப்பிடிக்கிறாய் என்று சொல்வேன். பவித்திரமான அன்பை-உள்ளத்திலிருந்து எழுந்த வாக்கை-சங்கத்துக்கு அடங்கி, மதிக்காமல் இருக்கிறாய்; இதற்கேற்ற தண்டனையையும் அநுபவித்துத் தீருவாய்."

"அந்து, அளவற்ற வேதனை அநுபவித்துத்தான் வரு கிறேன்; அல்லும் பகலும் அது என்னை வாட்டி யெடுக்கிறது. மனிதனுடைய முயற்சிக்கெல்லாம் அப்பாற்பட்ட அற்புத மான அதிருஷ்ட வசத்தால் நான் விரும்பாமலே தெய்வத் தின் அநுக்கிரகம் எனக்குக் கிட்டியது. இருந்தும் அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் திண்டாடுகிறேன். இருதயம் ஒன்றோடொன்று பிணைந்துதான் என்ன? போதும், போதும்! மற்றவர்களுக்காவது இந்தமாதிரி சங்கடம் நேராதிருக் கட்டும். அதிக நாள் ஏதோ மந்திரத்தால் கட்டுண்டது போல் கிடந்தேன். ஆனால் உன்னைப் பார்த்தேனோ இல் லையோ, 'எல்லாப் பந்தத்தையும் உதறித் தள்ளு' என்று உற் சாகங்கொண்டு துள்ளியது என் மனம். இப்படி மாறிவிடு வேன் என்று ஒருபோதும் எண்ணினதில்லை. இதற்கு முன் னால்கூட எப்போதாவது மனசு கொஞ்சம் சஞ்சலப்படும்; ஏன் இல்லை என்று பொய் சொல்ல வேண்டும்? ஆனாலும் அந்தச் சஞ்சலத்தை வெல்லும் சக்தி எனக்கு உண்டு; அதை அடக்கிவிட்டோம் என்ற கர்வத்தில் உற்சாகமாக இருப்பேன். ஆனால் இன்று அந்தச் சக்தி எங்கே போயிற்று? வேண்டுமென்றே அதை இழந்து நிற்கிறேன். வெளிப்போக்கிலிருந்து சொல்லாதே; நன்றாகக் கவனித்துச் சொல். நான் தோற்றுவிட்டேன் என்று ஒப்புக்கொள்கி றேன். நீ வீரன்; நான் உன் அடிமை."

"நான்கூடத்தான் அந்த அடிமையிடம் தோற்றுவிட் டேன். இன்னும் தோற்றுக்கொண்டுதான் வருகிறேன். ஒவ்வொரு முகூர்த்தமும் சண்டையிட்டு க்ஷணந்தோறும் தோற்று வருகிறேன்."

"அந்து, அபூர்வமாகக் காண்பதுபோல், முதல் வகுப்பு 'டெக்'கில் நிற்கும் உன்னைத் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேனே; அப்போது, 'மூன்றாம் வகுப்பு டிக்கட் வாங்குவதுதான் இந்தக் காலத்து நாகரிகத்துக்கு ஏற்றது; அப்படிச் செய்து காட்டுவதுதான் விசேஷம்' என்று எனக்கு அபிப்பிராயம். அப்புறம் நீ ரெயில் வண்டியில் இரண்டாம்

வகுப்பிலே ஏறினாய். என் மனமும், ஏன், என் உடலும் அதை நோக்கிச் செல்லத்தான் அலை பாய்ந்தன. இன்னும் கேட்கப்போனால் ஒரு சாதுரியமான யோசனைகூட என் மனசில் உதித்தது. 'ரெயில் புறப்படும்போது, கடைசி நேரத்தில் நீ இருக்கும் பெட்டியில் ஏறிக்கொள்வது; கேட்டால் அவசரத்தில் ஏறிவிட்டேன் என்பது' என்று எண்ணினேன். காவியத்தில் பெண்கள்தாமே தலைவனைத் தனிமையில் காண வருவார்கள்? அநுபவத்தில் அந்த மாதிரி நடப்பதற்குத் தடங்கல் இருப்பதால்தான் பெண்களிடத்தில் கவிகளுக்கு இவ்வளவு கருணை! மனசில் உள்ள பல ரகசிய எண்ணங்கள் உள்ளத்தின் ஓர் இருண்ட மூலையில் அலைந்தபடி வெளியே செல்ல வழியின்றி முட்டிச் சுழல்கின்றன. இந்த உண்மையைப் பெண்கள் வெளிப்படையாகக் கொஞ்சத்தில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். நீ என்னை ஆட்கொண்டு விட்டாய்!"

"ஏன் அப்படி ஒப்புக்கொள்ள வேண்டும்?"

"பெண்களுக்கு இயற்கையான மமதையை விட்டு விட்டு ஒப்புக்கொள்வது ஒன்றுதான் என்றால் ஆகக்கூடிய காரியம். அதற்குமேல் அளிக்க என்றால் முடிந்தால் தானே?"

சட்டென்று அதீன் ஏலாவின் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "ஏன் முடியாது? என்னை ஏற்றுக் கொள்ள எது தடங்கலாக நிற்கிறது?—சமூகமா? ஜாதி பேதமா?" என்றான்.

"சீ! சீ! அதெல்லாம் ஒன்றும் இல்லை; கவலைப்படாதே! வெளியே இடையூறு இல்லை; உள்ளுக்குள்ளேதான்."

"அப்படி ஒன்றும் அதிகமாக ஆசை ஏற்படவில்லை என்கிறாயா?"

"அதிகம் - கொஞ்சம் இதெல்லாம் அர்த்தமற்ற பேச்சு! அந்து, கையால் மலையை அசைக்க முடியாதிருப்ப

தால் கையில் பலமே இல்லை என்று சொல்லிவிடவாயா! 'விவாகமே செய்துகொள்ள மாட்டேன்' என்று சபதம் செய்து அப்படியே சத்தியமாக நடப்பதாகவும் உறுதி கொண்டுவிட்டேன். அப்படி அது உண்மையாக இராவிட்டாலும், கல்யாணம் என்ற பேச்சே சாத்தியமில்லை."

"ஏன்?"

"என்மேல் கோபத்துக் கொள்ளாதே! அந்து, உன் பேரில் உள்ள ஆசையால்தான் அதைச் சொல்லக்கூட எனக்குக் கூச்சமாக இருக்கிறது. உனக்குக் கொடுக்க என் கையில் என்ன இருக்கிறது?"

"தெளிவாகத்தான் சொல்லேன்."

"எத்தனையோ தடவை சொல்லியாயிற்று."

"மறுபடியும் சொல்லு. எல்லா விஷயத்தையும் பேசித் தீர்த்துவிடலாம் இன்றே; அப்புறம் உன்னை ஒன்றும் தொந்தரவு பண்ணமாட்டேன்."

வெளியிலிருந்து, "அக்கா" என்று ஒரு குரல் கேட்டது

"என்னடா, அகில்? உள்ளே வருகிறதுதானே?"

வந்த பையனுக்கு வயது பதினாறு அல்லது பதினேழு இருக்கும். பிடிவாத குணமும் துஷ்டத்தனமும் முகத்தில் தாண்டவமாடின; கண்ணுக்கு லக்ஷணமாய் இருந்தான் பையன். அடர்ந்து சுருண்ட மயிர். மாநிறம். சஞ்சலம் நிறைந்த விழிகள் பளபளவென்று பிரகாசித்தன. காக்கி நிறச் சட்டை அணிந்திருந்தான். அதே வர்ணத்தில் இடுப்பு வரை தொங்கும், பித்தான் திறந்துவிட்ட கோட்டு; மார்பு வெளியில் தெரிந்தது. சட்டையின் இருபக்க ஜேபியிலும் கண்ட சாமான்கள் நிரம்பியிருந்தன. மார்புப்பக்க ஜேபியில் மான் கொம்புப் பிடிபோட்ட விசித்திரமான கத்தி ஒன்று. எப்போதாவது விளையாடப் பொம்மைப் படகோ வரோப்ளேனோ செய்வான், அதன் உதவியால். மல்லிக் கம்பெனியாரின் ஆயுர்வேதாசிரமத்திலுள்ள ஜலம் தூக்கும் யந்திரத்

தைக் காண அங்கே வந்திருந்தான். பிஸ்கோத்து வைக்கும் பழைய தகரப்பெட்டி போன்ற அநாவசியமான சாமான்களை வைத்துக்கொண்டு அதைப்போல் ஒன்று செய்துகொண் டிருந்தான். விரலில் வெட்டுக் காயத்தின்மேல் கந்தல் துணி ஒன்று சுற்றியிருந்தது. "என்னடா இது?" என்று ஏலா கேட்டாலும் அது அவன் காதில் ஏறினால்தானே? தாய் தந்தையற்ற இந்த அநாதைச் சிறுவன் ஏலாவுக்குத் தூர பந்து; ஆகவே, அவன் பண்ணும் ஆர்ப்பாட்டத்தையெல்லாம் சகித்துக்கொண் டிருப்பாள். யாரிடத்திலிருந்தோ ரொம்ப நயமாக ஒரு குரங்குக் குட்டியை வாங்கி வளர்த்து வந்தான். அது உக்கிராணத்தில் புகுந்து சாமான் திருடுவதில் ரொம்பக் கெட்டி. ஏலாவின் இந்தச் சின்னஞ் சிறு குடும்பத்தில் இது அமர்க்களம் பண்ணிவந்தது.

அறையில் நுழைந்ததுமே அகிலன் வெட்கத்தால் விரைவாக ஏலாவின் காலைத் தொட்டு நமஸ்காரம் செய்தான். இது வழக்கத்தினால் ஏற்பட்ட குண விசேஷமேயொழிய அகிலனுக்குச் சுபாவமாகப் பக்திசிரத்தை கிடையாதென்று ஏலாவுக்கு நன்றாகத் தெரியும்.

ஏலா, "அந்து அண்ணாவை நமஸ்காரம் பண்ண வேண்டாமா?" என்றாள்.

ஒரு பதிலும் சொல்லாமல் அகிலன் அதீன்பக்கம் முது கைத் திருப்பிக்கொண்டு விறைப்பாக நின்றான். அதீன் உரக்கச் சிரித்தான்; அகிலனுடைய முதுகைத் தட்டிக் கொடுத்து, "சபாஷ்! அப்படித் தலை வணங்க வேண்டுமானால் ஒரு தெய்வத்திற்கே வணங்குவதுதான் உசிதம். இணை யில்லாத இந்தத் தேவியைத்தான் நானும் வணங்குகிறேன். இவள் கொடுக்கும் பிரசாதத்திற்காக இப்போது சண்டை போடவேண்டாம்; தம்பி, கொடுத்து மிகுந்தது இருந்தாலே போதும்" என்றான்.

ஏலா அகிலனை நோக்கி, "என்னடா வேண்டும் சொல் லேன்!" என்றாள்.

அகிலன், "நாளைக்கு எங்கள் அம்மா திவசம்" என்றான்.

"ஓகோ! மறந்தே போய்விட்டேனே! சிராத்தத்திற்கு யாரேனும் வரவேண்டுமா?"

"யாரும் வேண்டாம்."

"பின்னே என்ன வேண்டும்?"

"படிக்கிறதற்கு லீவ் வேண்டும் மூன்று நாள்."

"சரி. அந்த மூன்று நாளும் என்ன பண்ணுவாய்?"

"முயல்கூடு தயார் பண்ணுவேன்."

"ஒரு முயல்கூடப் பாக்கி இல்லையே; பின்னே முயல் கூடு எதற்கு?"

அதீன் சிரித்துக்கொண்டே, "அதை மனசிலேயே கற்பனை பண்ணிக்கொண்டால் போகிறது! இப்போது ஆக வேண்டிய காரியம் கூடு கட்டுவதுதான். மனிதன் இருப்பதோ அநித்தியம். உலகத்தில் வருகிறான்; போகிறான். ஆனால் அவனையும் சாசுவதமாக ஒரே கூட்டில் அடைத்து வைக்கும் பொறுப்பு அந்தக் காலத்து மநு பகவானுக்கு மட்டும் அல்ல; அவருடைய இந்தக் கால அவதாரங்களுக்கும் இருந்து வருகிறது. இது அவர்களுக்கு ஒரு பொழுது போக்கு!"

"சரி, அகில்! போ! உனக்கு லீவு கொடுத்தாயிற்று!"

மறு பேச்சு இல்லாமல் அகிலன் ஒரே தாண்டில் வெளியே போய்விட்டான்.

அதீன், "அவனை வழிக்குக் கொண்டுவர முடியவில்லையே! என் பிதுரார்ஜிதத்தில் தப்பித் தவறி மிசுந்தது ஒரு கைக்கடியாரம். அது அகப்பட்டால் இந்தக் காலத்துப் பசங்களுக்குப் புதையல் கிடைத்த மாதிரி! ஒரு நாள் அதை அவனுக்குக் கொடுக்கப் போனேன். அவனோ சட்டை பண்ணாமல் விரைத்துக்கொண்டு போய்விட்டான். விஷயம் 'கம்பூனலாக' (ஜாதிச்சண்டை) முற்றிப் போய்விட்டது

என்று கண்டுகொண்டேன். அந்துவுக்கும் அகிலனுக்கும் நடுவே கலகம் விளையும்போல் இருக்கிறது!" என்றான்.

"அறியாத பசங்களை நல்லதனம் பண்ணிக்கொள்வதில் நீ கெட்டிக்காரன் ஆயிற்றே. இந்தக் குரங்கு கிட்டே மட்டும் என் உன் ஜபம் சாயவில்லை?"

"மூன்றாம் ஆசாமி ஒருவன் இருக்கும்போது நான் என்ன பண்ணுவது? இல்லாவிட்டால் ஹரிஹர ஸ்வரூபம் ஆகிவிட மாட்டோமா? அது இருக்கட்டும்; உன் சமாசாரத்தைச் சொல்லு; என் இப்படி என்னைத் தட்டிக் கழிக்கிறாய்?."

"ஒரு முக்கிய விஷயத்தை மறந்து விடுகிறாயே! உன்னை விட நான் வயசில் பெரியவளாயிற்றே!"

"நான் ஏன் மறக்கிறேன்? உனக்கு இருபத்தெட்டு வயசு ஆகிறது; எனக்கு இருபத்தெட்டு நிறைந்து மேலே கொஞ்சம் மாசம் கூட ஆகிறது! வேண்டுமானால் இதை நிரூபிக்கவும் தயார். அந்தக் காலத்தைப்போல் செப்பேட்டில் பிராஹ்மி லிபியில் எழுதி வைத்திருந்தால்தானே அந்தத் தொல்லை!"

"எனக்கு இருபத்தெட்டு ஆவதற்கும் உனக்கு அதே வயசாவதற்கும் வித்தியாசம் இல்லையா? இந்த வயசில் புகையின்றிச் சுடர்விட்டெரிகிறது, உன் யௌவனம். முன்பின் தெரியாதவர் யாரார் இன்னும் உன் கண்ணெதிரே வர வேண்டியிருக்கிறதோ?"

"எலி, நீ வேணுமென்றே நான் சொல்வதைக் கேட்க மாட்டேன் என்கிறாய்; சங்கத்துக்கு அடங்கி, பகவான் எதிரே சத்தியத்திற்கு மாறாகப் பிரதிக்ஞை செய்துகொண்டிருக்கிறாய்; விதண்டாவாதம் பேசி உன்னையும் ஏமாற்றிக் கொள்கிறாய்!—என்னையுந்தான். நான் தடுக்கவில்லை; ஆனால் என் வாழ்விடையே இன்னும் எத்தனையோ பேர் குறுக்கிடத் தூரத்தில் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்கிறாயே. அந்த வார்த்தைமட்டும் வேண்டாம்! அந்த ஆசாமி இதோ

வந்திருக்கிறான்!—நீதான் அவன்; இருந்தும் அவன் கிட்ட வில்லை! வாழ்நாள் முழுவதும் நான் இப்படியே அவனுக்காகக் காத்திருக்கவேண்டியதுதானா? வெறிச்சென்ற அந்த வெட்டவெளியில், 'எங்கே நீ? எங்கே நீ?' என்று நான் அலறிக்கொண்டிருக்க வேண்டியதுதானா? அப்பாலிருந்து பதில் ஒன்றும் கிடைக்காதா?"

"பதிலே இல்லை என்று எப்படிச் சொல்வாய்? நீ நன்றி கெட்டவன்! நீதான் வேண்டும், வேண்டும், வேண்டும்! உன்னைத் தவிர இந்த உலகத்தில் வேறு எதுவும் வேண்டேன். சரியான சமயத்தில் நாம் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளவில்லை என்றுதான் சொல்லவேண்டும்; இல்லா விட்டால் கோரிக்கை பூர்த்தியாகி இராதா? ஆனாலும் அப்படி நேராதது என் அதிருஷ்டம் என்றுதான் சொல்வேன்."

"ஏன்? அப்படி நேர்ந்திருந்தால் என்ன தவறு?"

"என் வாழ்நாள் பயன் அடைந்திருக்கும், அது மதிப்புக் குறைவாய் இருந்தாலும். நீ மற்றப் பேரைப் போல் அல்ல; உயர்வானவன். விலகி இருப்பதனாலேயே உன்னுடைய மேன்மை பிரகாசமாக எடுத்துக் காட்டுகிறது. சாமானியமானவளான என்னை உன்னுடன் பிணைத்துக் கொள்ளப் பார்ப்பது எனக்கே அச்சமாக இருக்கிறது. என் துச்சமான இல்வாழ்க்கையில் நீ அமுந்தி விடுவாய். உன்னை எவ்வளவு உயர்வாக எண்ணியிருக்கிறேன் தெரியுமா? அதை உனக்கு எப்படி எடுத்துச் சொல்வேன்! பெண்கள் சம்சாரத்தில் அற்ப விஷயங்களில் திருப்தி அடைந்து விடுகிறார்கள். அந்தப் பொறுப்பை உன்னைப்போல் பௌருஷம் நிரம்பியவர்கள்மேல் சற்றும் தயங்காது சுமத்தப் பார்க்கும் பெண்களும் இருக்கிறார்கள். அதனால் எத்தனையோ பேர் வாழ்க்கை அவலமாகி யிருக்கிறது; எனக்குத் தெரியும். கண்ணெதிரேயே பார்க்கிறோமே? கொடி அதிகமாகச் சுற்றிக்கொண்டு படர்ந்தால் மரத்தையே ஓங்கவிடாமல் தடுத்துவிடுகிறதே. புருஷனை இப்படிச்

சுற்றிவளைத்து வைத்திருப்பதே யதேஷ்டம் என்று எண்ணிக் கொள்கிறார்கள், அந்தமாதிரிப் பெண்கள்!"

"அதில் ஈடுபட்டவர்களுக்குத்தானே அதன் உண்மை புரியும்."

"என்னையே நான் ஏமாற்றிக்கொள்ள விரும்பவில்லை; அந்து, பிறந்தது முதல் இயற்கை எங்களை இழிவு படுத்தியே வருகிறது. நாங்கள் ஜீவ உற்பத்திக்காகவே உலகில் தோன்றியிருக்கிறோம். அதோடு எங்களுக்கு இயல்பான சில அஸ்திரங்களும் மந்திரங்களும் எங்களிடம் இருக்கின்றன. அவைகளை உபயோகிக்கும் வழி தெரிந்தால் சுலபமாகவே நாங்கள் ஜயித்து அரசாளுவோமே! காரியத்தை நடத்தும்போது புருஷன் தன் மேன்மையை வெளிப்படுத்துகிறான். அந்தச் சிறப்பான தன்மை எது என்பதை நான் கண்டுகொண்டேன். அது என் பாக்கியமே! புருஷர்களே எங்களைவிட மேலானவர்கள், புத்தி விசாலத்தில்."

"ஆமாம்; புத்தியில் பெரியவர்கள்தாம். இயற்கையையும் மீறி உயர்வை அடையும் வழி அவர்களுக்குத் தெரியும்."

"எனக்குப் போதுமான புத்தி இருக்கிறதோ இல்லையோ, நான் அவர்கள் மேன்மையைக் கண்டு வணங்கி என்னையே அர்ப்பணம் செய்துகொள்கிறேன்."

"இழிவான நிலைக்குப் போவதே இல்லையா புருஷர்கள்?"

"ஏன் இல்லை? எங்கள் வலையில் சிக்கி ஜீவ உற்பத்தி விஷயத்தில் இழிந்த தசைக்கு வருபவர்கள் அடியோடு கெட்டுவிடுகிறார்கள். புருஷர்களை வேணுமென்றே கீழ்த்தரமாக்க எண்ணமோ அவசியமோ இல்லை எங்களுக்கு; ஆனாலும் நாங்கள் சிங்காரித்துக்கொண்டு குலுக்கி மினுக்கி அவர்களை இந்த நிலைக்குக் கொண்டுவந்து விடுகிறோம்."

"இந்த முட்டாள்களை ஏமாற்றத்தானே?"

"ஆமாம், நீங்களெல்லாரும் முட்டாள்கள்தாம். சுலபமாகவே உங்களை மயக்கிவிடுகிறோம், அதனாலேயே எங்களுக்கு இந்தப் பெயர்! இந்த முட்டாள்கள் பேரில் தான் நாங்கள் ஆசை வைக்கிறோம். இவர்கள் மடமையின் உச்ச நிலையில்தான் அபூர்வமான ஒளியைக் காண்கிறோம். அப்போது இவர்களைப் பூஜிக்க வேண்டுமென்று ஆவல் வருகிறது. இவர்களில் லோபிகளும் இருக்கிறார்கள்; குறுகிய புத்தி உள்ளவர்களும் இருக்கிறார்கள்; கோள் சொல்பவர்களும் இருக்கிறார்கள்; அழுகுணிகளும் இருக்கிறார்கள்; இந்த மாதிரி எத்தனையோ பேரைப் பார்த்திருக்கிறேன். இதெல்லாம் கழித்துவிட்டுப் பார்த்தால் விசேஷமான குணம் எவ்வளவோ இருக்கும் அவர்களிடத்தில். அதைத்தான் நான் உயர்வாகக் கருதுகிறேன். பெயர் ஊர் தெரியாதவர்களாகக்கூட இருப்பார்கள்; இருந்தும் அவர்கள் மேலானவர்களாய் இருக்கக்கூடும்."

"எலி! நீ பேசுவதைக் கேட்டால் எனக்கு வெட்கமாக இருக்கிறது. இதற்கு எதிரிடையாக ஏதாவது சொல்லாமற் போனால் சரிப்படாது என்றுதான் தோன்றுகிறது. ஆனாலும் நீ சொல்வது பிடித்துத்தான் இருக்கிறது. ஆனால் உண்மையைச் சொல்வதில் நான் உனக்குத் தோற்றவனல்ல. நம்முடைய தேசத்து ஆண்பிள்ளைகளிடத்திலே பேடித் தன்மை சிறு வயசிலிருந்தே இருக்கிறது! அவர்களைப்பற்றி இப்போது உனக்குச் சொல்லுகிறேன். எனக்குத் தெரிந்த குடும்பங்களிலும், ஏன், என் சொந்தக் குடும்பத்திலேயும் மாமியார் செய்யும் பொறுக்க முடியாத அட்டூழியங்களைப் பார்த்துத்தான் இருக்கிறேன். மாமியாருக்கு உள்ள இந்தக் கெட்ட பெயர் பழமொழியாக வழங்கி வருகிறது இந்தத் தேசத்தில்."

"ஆமாம்; அது எனக்கும் தெரியும்; என் வீட்டிலேயே பார்த்திருக்கிறேன்: கையாலாகாதவர்களுக்குத்தாம்

பிறரைப் படுத்தத் தோன்றும். அவர்களைப்போல் கொடியவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள்."

"ஏலா, மாமியாராக வரப்போகிறவளை இப்படி முன்னையே திட்டுவது நன்றாய் இல்லை. புது மாட்டுப் பெண்ணை இம்சிக்கும் சமாசாரத்தை அடிக்கடி கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். அதற்கு மூலகாரணம் மாமியார்தான். ஆனாலும் அந்த மாமியாருக்கு அந்த அதிகாரம் கொடுத்தது யார்? அவளுடைய பிள்ளைகள் தாமே? தம் சொந்த மனைவியை அவள் கையிலிருந்து காப்பாற்ற யோக்கியதை அற்றவர்கள் கல்யாணம் செய்து கொள்வானேன்? அப்படிச் செய்தால் பெண்டாட்டியின் கைக்கு அடங்கினவர்கள் என்று பெயரெடுத்து விடுகிறார்கள். புருஷர்கள் பலவீனமாக இருக்கும் சமயம் பார்த்துப் பெண்கள் அவர்களைப் பின்னும் கீழ்த்தசைக்குக் கொண்டு வந்து விடுகிறார்கள். அதனால்தான் நம் தேசத்தில் பெரிய காரியங்களை நடத்தச் சங்கற்பம் கொண்டவர்கள் 'பெண்களுடைய மாயையை விட்டொழியுங்கள்' என்கிறார்கள். பெண்களுக்கு எவன் அடங்கிப் போகிறானோ அவன் பேடிதான். இதற்காகத்தான் பேடிகள் நிறைந்த இந்த நாட்டில் நீ கல்யாணமே செய்துகொள்ள மாட்டேன் என்று பிரதிக்ஞை செய்துகொண்டிருக்கிறாய். ஏன் அப்படி? இளம் மனசு எதையாவது பாழாக்கி விடுவோமோ என்ற பயத்தினால்தானே? உண்மையான ஆண்பிள்ளைகள் சரியான பெண்களோடு சேர்ந்தால்தான் வாழ்க்கை பயன் அடையும். பிரம்மாவே எங்களுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். அதை விரும்புபவன் ஆண்பிள்ளை என்பதற்கே தகுதியற்றவன். இதைச் சோதனை செய்து பார்க்கும் சக்தி உன் கையில் இருக்கும்போது நீ ஏன் அப்படிச் செய்யக்கூடாது?"

"தர்க்கம் செய்யத் தெரியாமலில்லை எனக்கும். ஆனால் உன்னோடு செய்யமாட்டேன். ஏதோ ஆத்திரத்தில் நீ

இப்படியெல்லாம் குயுக்தியாகப் பேசுகிறாய். நீ என்னதான் சொல்லு; நான் செய்துகொண்ட பிரதிக்ஞையை ஒருபோதும் மறக்கவே முடியாது."

"மறக்க முடியாமல் இருக்கலாம். 'புருஷர்களெல்லாம் மிகவும் மேன்மையானவர்கள். பெண்கள் அதைக் குலைத்து அவர்களைத் தாழ்ந்தவர்களாக்கி விடுவார்களோ?' என்று பயப்படுவதாக நீயே சொல்லவில்லையா? அதுதான் நானும் சொல்கிறேன்: பெண்கள் மேன்மையாக இருக்கவேண்டும் என்ற அவசியமே இல்லை. அவர்கள் இருக்கிறபடி இருந்தாலே போதும்; அதுவே யதேஷ்டம். ஒரு புருஷன் மேன்மையுறாமற் போனால் அவன் அரைகுறை மனிதன்; அவன் சிருஷ்டி கர்த்தாவுக்கே அது பெரிய தலை யிறக்கம்!"

"அந்து, அந்தக் குறை இருந்தாலும் அவனாலும் பகவத் சங்கற்பம் ஏதாவது நிறைவேற வேண்டி யிருக்கிறது; அதுதான் சிரேஷ்டமானது."

"ஏலி! பகவானுடைய மனோபீஷ்டத்தை மட்டும் உயர்வானதென்று சொல்ல முடியாது; அவர் கற்பனையும் அதற்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல. அந்தக் கற்பனை எனும் சலாகையின் ஸ்பரிசம் பட்டுப் பெண் சுபாவத்திலே ஓர் அற்புதம் விளைகிறது. ஓவியனைப் போல் சகல சாதனங்களும் கொண்டு இந்தப் பெண்கள் சம்சாரத்தில் ஈடுபடுகிறார்கள். உடலிலும் உள்ளத்திலும் வர்ணமும் சந்தமும் இழைய எடுத்துரைக்க முடியாத ஒன்றை வெளியிடுகிறார்கள். இது இயற்கையான சக்தியின் செயல்; இந்தக் காரணத்தாலேயே இது சாமானியமானதல்ல என்று படுகிறது. சங்கு போன்ற உன் வெண்மையான கழுத்தில் பொன் சங்கிலி போட்டுக் கொண்டு அழகு செய்துகொள்ள நீ நெட்டுருப் போட்டுப் படிக்கவில்லையே! அழகென்பதை இன்னதென்று உணராத சில துர்ப்பாக்கியவதிகளும் இருக்கிறார்கள். கெட்டிக் கெட்டியாகத் தங்கக் காப்புப் போட்டுக்கொண்டு வம்பளப்

பதிலும் பெருந்தன்மையாகக் குடித்தனம் நடத்துவதிலும் தான் அவர்களுக்குக் கண். இல்லாவிட்டால் நாலு இடத்தில் வேலை செய்து பிழைப்பார்கள். இந்த மாதிரி உதவாக்கரைகளுக்கு உலகத்தில் கணக்கே இல்லை."

"சிருஷ்டி கர்த்தாவின்மேல்தான் தப்பு; பெண்களுக்கு ஏன் சண்டை போடச் சக்தி கொடுக்கவில்லை அவர்? வஞ்சனையாகவே தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது அவர்கள். உலகத்திலேயே மிகவும் வெட்கக்கேடான விஷயம்! 'வேவு பார்க்கும் தொழிலில் பெண்கள் புருஷர்களை விடச் சாமர்த்தியசாலிகள்' என்று புத்தகங்களில் படித்திருக்கிறேன். அதுமுதல் ஏழேழு ஜன்மத்துக்குப் பெண்ணாகவே பிறக்கவேண்டாம் என்று பகவானை உள்ளூற வேண்டிக் கொள்கிறேன். பெண்களுடைய நோக்கிலிருந்து புருஷர்களைக் கவனிக்கிறேன். அவர்களிடத்தில் குடிகொண்டிருக்கும் நல்ல குணத்தையே பார்க்கிறேன்— அவர்கள் மேலான தன்மையையே! தேசத்தைப்பற்றி எண்ணும்போது இத்தகைய தங்கமான பிள்ளைகளின் கவனமே எனக்கு முன்னால் வருகிறது; அவர்களே நாட்டின் ஜீவனல்லவா? செய்தாலும் பிரமாதமான தவறுகளையே செய்கிறார்கள். இப்படிப்பட்ட பிள்ளைகள் எங்கள் வீட்டில் பிறக்கவில்லையே என்று எண்ணும்போது என் நெஞ்சு விரிந்து போகிறது. 'நான் அவர்களுடைய தாய்; அவர்களுடைய சகோதரி; அவர்கள் பெண்' என்றெல்லாம் நினைத்துக்கொள்ளும்போது எனக்குப் பெருமை தாங்கவில்லை. இங்கிலீஷ் படித்த வாயால் தேசசேவிகை என்று சொல்லிக்கொள்ளச் சற்றுச சங்கோசமாகத்தான் இருக்கும். ஆனாலும் நான் தேசசேவிகைதான்; இதை உள்ளூறச் சொல்கிறேன். உங்களுக்கெல்லாம் தொண்டு புரிவதே நான் கடைத்தேறும் வழி. இந்தப் பக்தியிலேயே எங்கள் ஆசை முழுவதும் மலிந்து கிடக்கிறது."

"நல்லதுதான். உன் பக்தியை ஏற்றுக்கொள்ள எத்தனையோ புருஷர்கள் இருக்கும்போது நான் எதற்கு?

அந்தப் பக்தியை எதிர்பாராமலே உன்னைக் கோருகிறேனே! சற்றுமுன் பெண்களைப்பற்றி எடுத்தாயே; தாய், சகோதரி, பெண் என்று அவர்களை வகைப்படுத்திக் கூறினாய். என்னுடைய துரதிருஷ்டமோ என்னவோ ஒன்றைமட்டும் சொல்லாமல் விட்டுவிட்டாய்."

"உன்னைக் காட்டிலும் நான் உன்னைப்பற்றி நன்றாகத் தெரிந்துகொண் டிருக்கிறேன். நான் காட்டும் ஆதரவெல்லாம் இரண்டே நாளில் உனக்குச் சலித்துப் போய் விடும்; அந்தக் கூட்டிலிருந்து வெளியேறச் சிறகு அடித்துக் கொள்ளும்! உன்னைச் சந்தோஷப்படுத்தும் சாதனங்கள் ஒரு நாள் இராவிட்டால் ஒரு நாள் சுவையற்றுப் போய் விடும். உனக்கு நான் எவ்வளவு எளியவள் என்று அப் போது தெரியும். அதனால்தான் உன் பேரிலுள்ள உரிமை அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். என் மனப்பூர்வமாக உன்னைத் தேசத்திற்கே தத்தம் செய்து விடுகிறேன். உன் சக்தி வீறி வளர்வதற்கு அதுவே தகுந்த இடம்."

இந்த வார்த்தைகள் புண்பட்ட ஓர் இடத்தை வருத்தின; அதீனுடைய இரு கண்களும் ஜ்வலித்தன. அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான், சில கணம். பிறகு ஏலாவின் எதிரில் வந்து, "கடுமையாக இரண்டொரு வார்த்தை சொல்லும் வேளை வந்துவிட்டது - தேசத்திற் காகவோ யாருக்காகவோ என்னை அர்ப்பணம் செய்ய நீ யார்? இனிமையைத் தர உன்னால் முடியும். அது உன்னிடத் தில் இயல்பாக உள்ள ஒரு வஸ்து. அதை நீ தொண்டு என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்; தியாகம் என்றுவது சொல்லிக்கொள். நீ கோப மூட்டினாலும் நான் கோபித்துக் கொண்டு போகத் தயார்; நீ திரும்பிவரச் சொன்னாலும் நான் வணங்கி வரக் காத்திருக்கிறேன். ஆனால் உனக்குள்ள இந்த மகத்தான உரிமையை இன்று வீணாக நீ பாழாக்கிக் கொள்கிறாய்! பெண்களுக்குரிய அந்தரங்கச் செல்வத்தைத் தரத் தயக்கங்கொண்டு, 'தேசத்தை உனக்கு அர்ப்பணம்

பண்ணிவிட்டேன்' என்கிறாயே! அப்படிச் செய்ய உன்னாலும் சரி, வேறு யாராலும் சரி முடியவே முடியாது. ஒருவன் கையிலிருந்து ஒருவன் கைக்கு மாற்றிக் 'காறுபாறு' செய்வதற்குத் தேசம் அப்படி என்ன அற்ப வஸ்துவா?'' என்றான்.

எலாவின் முகத்து நிறம் மாறியது; "நீ என்ன சொல்லுகிறாய்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!'' என்றாள்.

"சொல்லட்டுமா? பெண்களை நடுநாயகமாகக் கொண்டு விளங்குகிறது ஓர் இன்ப உலகம்; பார்வைக்கு அற்பமானதாகத் தோற்றினாலும் உள்ளத்தில் அதன் ஆழம் அளவிடற்கரியது; அது ஒருபோதும் கூட்டினுள் வாழ்வாகாது. தேசம் என்ற பெயரிட்டு நாம் வாழும் இடம் உன்னைச் சேர்ந்தவர்களுக்குத் தேசமாகத் தோன்றலாம். எனக்கு அது வெறும் சிறைக்கூடு என்றே படுகிறது. எனக்குள்ள திறமை அதனுள்ளே பூர்ணமாகச் சோபிக்காமல் போய்விடுகிறது. அந்தச் சக்தி கோணலான வழிக்குத் திரும்பிவிடுகிறது. நமக்குத் தகுதியற்றதைச் செய்யப் போய் ஏதாவது ஒரு பைத்தியக்காரத்தனமான காரியத்தையே செய்துவிடுகிறோம்; அப்புறம் தலையிறக்கந்தான்; மீளும் வழியும் அடைபட்டுவிடுகிறது. என் சிறகிரண்டும் சின்ன பின்னம் ஆகிவிட்டமை உனக்குத் தெரியாதா? தளைகள் என் இரு கால்களையும் இறுக்கிக்கொண்டு விட்டன. தேசத்தில் எனக்கு உரிய ஸ்தானத்தைப் பெறும் ஆற்றல் இருந்தது. என் அதைக் கவனமூட்டாமல் ஏமாற்றி விட்டாய்?''

சளைத்துப் போன குரலில் எலா, "சரி; நீ என் அதை மறக்கவேண்டும்!'' என்றாள்.

"மறக்க அடிக்கும் சாமர்த்தியம் உங்களுக்குத்தான் அதிகம். அப்படி இராவிட்டால் நான் மறந்ததைக் குறித்து வெட்கிச் செத்திருக்க மாட்டேனா? மறந்து போகும்படி செய்ய உன்னால் ஆகும் என்பதை நான் ஆயிரந்தடவை

வேண்டுமானாலும் சொல்லத் தயார்: அப்படி மறதி ஏற்படாத பக்ஷத்தில் என் பௌருஷத்தின் மேலேயே எனக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கும்."

"அப்படியானால் என்னை ஏன் குறை கூறுகிறாய்?"

"ஏன்? சொல்கிறேன், கேள். உங்கள் அதிகாரம் எங்கே செல்லுகிறதோ அந்த உலகத்துக்கு என்னை ஏமாற்றி அழைத்துச் செல்கிறாய். உன்னைச் சேர்ந்தவர்கள் சொன்னதை அப்படியே எதிரொலித்து நீயும், 'உங்களில் சிலர் உலகத்தில் ஒரு கடமை புரிய வேண்டியிருக்கிறது' என்று சொன்னாய். உங்களுடைய அதிகார வர்க்கத்தின் கடமையில் சிக்கிச் சுழன்று என் வாழ்க்கையின் ஓட்டம் குழம்பியே செல்கிறது."

"அதிகார வர்க்கமா?"

"ஆமாம். தேசத்தொண்டு என்னும் உங்கள் மாபெருந் தேரைத்தான் குறிக்கிறேன்: எங்களை ஏவும் மந்திரவாதி என்ன சொல்லுகிறான்! 'எல்லோரும் ஒன்று சேர்ந்து வடத்தைத் தோளில் சுமந்து கண்ணை மூடிக் கொண்டு இழுங்கள், இந்தத் தேரை. இதுவே நீங்கள் செய்யவேண்டிய காரியம்!' என்கிறான். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கச்சை இறுகக் கட்டிக்கொண்டு, வடத்தைத் தூக்குகிறார்கள். தேரின் சக்கரத்தின் கீழ் எத்தனையோ பேர் விழுந்து மாள்கிறார்கள். சிலர் மொண்டி முடமாகி வாழ்நாள் முழுவதும் வருந்துகிறார்கள். அப்புறம் ரதத்தைத் திருப்ப மந்திரவாதி மறுபடியும் ஏவுகிறான். அது இருந்த நிலைக்கே வந்து விடுகிறது. எலும்பு முறிந்தவர்களுக்கு எலும்பு கூடப் போகிறதோ? மொண்டி முடமானவர்களையும் புழுதியோடு புழுதியாக விலக்கி விடுகிறான். தங்களிடத்திலேயே முதலிலிருந்து நம்பிக்கை இழந்தவர்கள், இந்த அதிகார வர்க்கத்தார் உருவாக்கும் வார்ப்படம்போல், உள்ளூற வெறுப்பு இருந்தும் அதற்குக் கீழ்ப்படிகிறார்கள்.

தலைவன் ஆட்டி வைக்கிறபடி எல்லாரும் ஆடினால் அதைப் பார்த்து, 'இது அல்லவோ சக்தியின் கூத்து!' என்று நீ எண்ணி ஆச்சரியப்படுகிறாய்! சூத்திரதாரி மட்டும் கயிற்றைச் சற்றுத் தளர்த்த வேண்டியதுதான்: பொலபொலவென்று மனிதப் பொம்மைகள் யாவும் சாய்ந்துவிடும்."

"அந்து, அவர்களில் பெரும்பாலோர் வெறிகொண்டு காலைத் தூக்கி ஆடுகிறார்களே தவிரத் தாளத்தோடு இசைந்து ஆடவில்லை."

"முதலில் ஒரு விஷயம் உனக்குச் சொல்லவேண்டும்; இந்த மாதிரிப் பொம்மையாட்டம் அதிக நேரம் மனிதனால் ஆட முடியாது. மனிதனுடைய சுபாவம் ஓரளவு ஒழுங்குக்குக் கட்டுப்படும்; மனித இயற்கையை நசுக்கிப் பொம்மை போல் ஆட்டி வைத்தால் காரியம் கைகூடும் என்று எண்ணுவது சுத்தத் தவறு. மனிதனுடைய ஆத்ம சக்தியை ஒரு விசித்திரமான ஜீவன் என்று கருதுவதே உண்மை. அத்தகைய ஒரு ஜீவன் என்று என்னை நீ கருதியிருந்தால் உங்கள் கோஷ்டியில் சேர்த்துக்கொண்டிருப்பதற்குப் பதிலாக மார்போடு அணைத்திருப்பாய்."

"அந்து, ஆரம்பத்திலேயே என்னை உதறியிருக்கக் கூடாதா? என் என்னை இந்தக் குற்றத்திற்கு ஆளாக்கினாய்?"

"இதை முன்னாலேயே அடிக்கடி நான் உனக்குச் சொல்லியிருக்கிறேனே! உன்னோடு சேர விரும்பினேன்; இது சகஜந்தானே? அந்த மோகம் அடக்க முடியாதது; நேர் வழி இல்லை; அது அடைபட்டிருந்தது. மனம் உடைந்துபோய்க் கோணலான வழியில் போக உறுதிகொண்டேன். இதைப் பார்த்து நீ மயங்கிப் போனாய். 'இதில் தான் நான் மடிய வேண்டும்' என்று உணர்கிறேன். 'நான் அவ்வாறு மடிந்த பிறகுதான் என்னை இரு கைகளையும் விரித்துத் திரும்பி வா என்று கூப்பிடுவாய்! ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் இரவும் நிரந்தரமாக உன் சூனிய இருதயத்தினுள்ளே கூவி அழைப்பாய்!"

"உன் காலில் விழுகிறேன், அந்து; அந்த மாதிரியெல்லாம் சொல்லவே கூடாது நீ."

"மடத்தனமாகச் சொல்லிவிட்டேன். நான் சொன்னது 'ரொமாண்டிக்'காக (அற்புதமாக) இல்லையா? ஸ்தூல நிலையைக் கடந்த ஓர் இன்பத்தை அடைந்ததுபோன்ற உணர்வு அது. அன்று நீ எனக்காக ஏங்கிப் பிரிந்திருந்ததும், இன்று நான் உன்னைச் சேர விழையும்போது என்னை உதறித் தள்ளுவதும் ஒன்றுக்கொன்று தோற்கவில்லை!"

"இன்றுதான் உன் வாக்கு வன்மை எனக்குத் தெரிந்தது."

"இன்று புதிதாக வந்ததல்ல அந்தச் சக்தி; நெடு நாளாக இருக்கிறது. நான் மிகவும் சின்னவனாக இருக்கும்போதே, சொற்கள் நன்றாகத் திருந்தாத சமயத்தில், உள்ளத்தின் மறைவிலிருந்து இவை ஒவ்வொன்றாக முளைத்தன-உவமைகள் எத்தனையோ! உருவகங்கள் எவ்வளவோ! சம்பந்தமற்ற வார்த்தைகள் எத்தனையோ!—வயது வந்தது. இலக்கிய உலகில் நுழைந்தேன். சரித்திர மூலமாக, பாழடைந்த பெரிய பெரிய சாம்ராஜ்யங்களைக் கண்டேன். பெரிய வீரர்கள் வீழ்ச்சியுற்றிருப்பதைப் பார்த்தேன். வெற்றிக்கொடி பறந்த இடத்தில் வேர் ஊன்றிய மரங்களைக் கண்டேன். பல நூற்றாண்டுகள் நடந்த பெரு முயற்சிகள் யாவும் மண்ணில் ஓய்வு கொண்டன. கால வெள்ளம் அடித்துக்கொண்டு வந்த அப் பெருங் குப்பை மேட்டில் அழியா வாணி ஒன்று ஓங்கி நின்றது. அதன் காலடியில் யுகாந்தரமான அலைகள் மடிந்து மடிந்து மறைந்தன. அத்தகைய வாணியின் பொருட்டுப் பொன்தூண் நாட்ட வந்தவர்களுள் நானும் ஒருவன் என்று எண்ணினேன். உன்னுடைய அந்து வெகு நாளாகத்தான் இந்த மாதிரி வீர வாசகங்களைச் சொல்லிக்கொண்டு திரிகிறான். அவனைச் சரியாகப் புரிந்துகொள்ள என்றுமே முடியாது. அப்பேர்ப்பட்டவனை அல்லவா இந்தச் சதுரங்க ஆட்டத்தில் இழுத்துப் போட்டு ஒரு காயாக வைத்து ஆடுகிறீர்கள்?"

எலா நாற்காலியை விட்டு எழுந்து அதீனுடைய காலின் தலையை முட்டிக் கொண்டாள். அதீன் அவளைத் தூக்கிப் பக்கத்தில் அமர்த்திக்கொண்டான்; "ஒல்லியான இந்த உடலை வைத்துக்கொண்டு நான் மனசிலே ஓர் அழகிய சித்திரத்தை வரைந்திருக்கிறேன்; என் உள்ளத்துள் படரும் பைங்கொடி நீ; இன்பமும் நீ; துன்பமும் நீ. என்னைச் சுற்றிலும் ஒரு திரை மூடியிருக்கிறது—'வாசாலம்' என்னும் திரை! இலக்கிய நிதியிலிருந்து திரட்டிக்கொண்டு வந்த செல்வம் அது. நான் எதிலும் யதேச்சையை விரும்புபவன் என்பது உன் வாத்தியாருக்கே தெரியும்! இருந்தும் என்னை ஏன் அவர் நம்பியிருக்கிறார்?" என்றான்.

"அதனால்தான் உன்னிடத்தில் அவருக்கு நம்பிக்கை! எல்லாரோடும் சேர்ந்து உழைக்கவேண்டுமானால் நீயும் அடங்கிப் போகவேண்டியதுதான். ஆனால் நீயோ கொஞ்சத்தில் வணங்கிப் போகமாட்டேனென்கிறாய்! உன் மேல் அதனாலேயே ஒரு நம்பிக்கை எனக்கு; எந்தப் பெண்ணும் அப்படி ஒரு புருஷனை நம்பமாட்டாள். நீ சாதாரண மனிதனாக இருந்தால் சாதாரணப் பெண்ணைப் போலவே நானும் உன்னை மருட்டி வழிக்குக் கொண்டு வந்திருப்பேன். பயம் அறியாதவன் நீ."

"இந்தப் பயமறியாதவனைச் சொல்லு! புருஷனை வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் பயமுறுத்தித்தான் தீர வேண்டும். தேசத்தின் பொருட்டு மிகவும் துணிச்சலான காரியத்தில் இறங்கச் சொல்கிறாய். உன்னைப்போல் சிறந்த பெண் ஒருத்தி சொல்லும்போது அப்படிச் செய்யாமல் இருப்பது ஆண்பிள்ளைக்கு அழகல்லதான். இந்த அசமாதானமெல்லாம் தோன்று முன்பே ஏனோ நான் உன்னை அடித்துக்கொண்டு செல்ல முடியாமல் போய்விட்டது! கௌரவத்திற்குப் பயந்தேன்! காட்டுமிராண்டியின் சுபாவம் கொண்டது காதல்! ஒரு வழி பண்ணிக் கொள்வதற்கே, குறுக்கிடும் இடையூறுகளை ஒதுக்கித் தள்ளப் பார்க்கிறது! காட்டாற்று வெள்ளம்போல வருவது அது; நாகரிகம் நிறைந்த பட்டணத்தில் வரும் குழாய் ஜலம் போன்றதல்ல.'

எலா வேகமாக எழுந்திருந்து, "வா அந்து, உள்ளே போகலாம்" என்றாள்.

அந்தனும் கூடவே எழுந்து, "என்ன பயம், இப்பொழுது திடீரென்று! நான் ஜயித்து விட்டேன். யௌவன ஆரம்பத்தில் பெண்களுடைய சுபாவமே எனக்குத் தெரியாது. என் கற்பனைக் கண்ணில் தொலைவாக வைத்தே அவர்களைக் கவனித்தேன். நீ விரும்பக்கூடிய ஆள் நான் என்பதை நிரூபிக்கும் காலமும் கடந்துவிட்டது. என் ஆண்மையை உள்ளூற உணர்ந்தேன். நான் வெறியன்! காட்டுமிராண்டி! இந்தச் சந்தர்ப்பத்தைமட்டும் நான் நழுவ விடாமல் உன்னை இப்போதே என் பிடிக்குள் அழுத்திக் கொள்வேன். உன் எலும்பு நொறுங்கும்படி கட்டியணைப்பேன். யோசனை செய்யவே விடமாட்டேன். உன்னை அழக்கூடத் தோன்றாதபடி செய்துவிடுவேன். என் வழியிலேயே உன்னைப் பலாத்காரமாக இழுத்துச் சென்றிருப்பேன். இன்று நான் செல்லும் வழியோ கத்தியின் முனை போல் அவ்வளவு குறுகியது; இரண்டுபேரும் கூடிச் செல்வதற்கு அங்கே இடமில்லை."

"என் உள்ளங் கவர் கள்வா! பலாத்காரமாக என்னை இழுத்துக்கொள்வானேன்? இதோ நான்! ஏற்றுக் கொள்! என்னை ஏற்றுக்கொள்."

இதைச் சொன்னதும் இரு கைகளையும் நீட்டி எலா அந்தனிடம் சென்றாள். கண்ணை மூடிக்கொண்டு அவன் மார்போடு பொருந்தி அவன முகத்தோடு தன் முகத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டாள்.

எலாவின் பார்வை ஜன்னலுக்கு வெளியே சென்றது. "ஐயோ! வந்துவிட்டதே நாசம்! அதோ திரும்பிப் பார்!" என்றாள்.

"என்ன அங்கே?"

"அதோ தெரு முனையில். நிச்சயமாக வடுதான்; இங்கேதான் வருகிறான்."

"இடம் தெரிந்துகொண்டுதான் வருகிறான்."

"அவனைப் பார்க்கும்போதே என் சரீரமெல்லாம் கூசிக் கொள்கிறது. அவன் ஒரு காமப் பேய்; அசூயை நிரம்பியவன். அவனை விட்டுத் தூர ஒதுங்கிப் போகப் போகக் கிட்டவே வந்து தொலைகிறானே! அந்த மனுஷனைப் பார்த்தாலே அருவருப்பாக இருக்கிறது!"

"எனக்குக் கூடத்தான் அவனைக் கண்டால் பிடிக்கவில்லை."

"அவனைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் நினைத்துக்கொள்கிறேனோ என்று எவ்வளவு அடக்கிக் கொண்டாலும் என்னால் முடியவில்லையே! தூரத்திலிருந்தே அவனுடைய காமக் கண்கள் என மானத்தை வாங்குவன போல் சுழல்கின்றன."

"அவனை ஏறிட்டுக் கூடப் பார்க்கவேண்டாம், ஏலா! அவன் ஒரு பிரகிருதி இருக்கிறான் என்று நீ நினைப்பானேன்?"

"அவனிடத்தில் எனக்குள்ள நடுக்கத்தினாலேயே மனசைவிட்டு அவனை அகற்ற முடியாமல் இருக்கிறேன். விகாரமான 'ஆக்டோபஸ்'*ஸைப் போலவே தோன்றுகிறது, அவன் கள்ள மனம். என்றைக்காவது ஒரு நாள் என்னை அவன் தன் கைக்குள் சிக்க வைத்து மானத்தைப் போக்கி விடுவானோ என்ற பயந்தான் எனக்கு. அதற்காக அவன் சூழ்ச்சியும் செய்கிறான். ஓர் அசட்டுப் பெண் கொள்ளும் வீண் சந்தேகம் இது என்று நீ அலக்ஷியம் செய்யலாம். ஆனால் இந்தக் கிலியே பூதம்போல் என்னைப் பிடித்து வாட்டுகிறது. என்பொருட்டு மட்டும் அல்ல; உனக்காகவும் திகில் படுகிறேன். உன்பேரில் அவனுக்குப் பொறாமை படமெடுத்துச் சீறுகிறது."

---

* சிலந்தியின் உருவம் கொண்டு நீரில் வசிக்கும் பெரிய எட்டுக்கால் பிராணி.

"ஏலா! அந்த மிருகத்துக்கு அவ்வளவு துணிவுகூடவா இருக்கிறது? அவன் கிட்டே நாற்றந்தான் அதிகம்; இதனாலேயே அவனை யாரும் அணுகுவதில்லை. அவனுக்கு மட்டும் என்னைக் கண்டால் உள்ளுக்குள் நடுக்கந்தான். நான் பயங்கரமான பேர்வழி என்பதால் 'அல்ல; நானே ஒரு தனி ரகம் என்பதனாலேயே."

ஏலா, "இதோ பார், அந்து, என்ன என்ன ஆபத்தெல்லாம் நேருமோ என்று எண்ணுவதுண்டு. அதற்கெல்லாம் தயாராகவும் இருக்கிறேன். ஆனால், என் கெட்ட காலம் அவன் கையில் சிக்குவதாயிருந்தால் பிராணனை விடுவதே மேல்" என்றதும் அந்துவின் கையை அழுத்திப் பிடித்துக்கொண்டாள். உடனேயே அந்த விபத்திலிருந்து அவன் தன்னை மீட்கும் பாவனையாகச் சொல்லலானாள்:

"அந்து, துஷ்ட ஜந்துவிடம் அகப்பட்டுத் துர்மரணம் சம்பவிக்குமோ என்று எப்போதாவது நான் எண்ணுவது உண்டு. அப்போது 'புலி வாயிலோ கரடி வாயிலோ அகப்பட்டு இறந்தாலும் இறக்கிறேன். ஆனால் 'பாசி நிரம்பிய ஒரு குளத்தில் முதலை விழுங்கி நான் சாகும்படி மட்டும் என் தலையில் எழுதாதே!' என்று பகவானிடம் வேண்டிக் கொள்வேன்."

"என்னைப் புலி கரடி கோஷ்டியில் சேர்த்துவிட்டாயா என்ன?"

"இல்லை; இல்லை! என்னுடைய நரசிங்கம் நீ! உன் கையில் மடிவதே எனக்கு முக்தி...அதோ காலடிச் சத்தம்! ஏறி வருகிறாற்போல் இருக்கிறது!"

அதீந்திரன் அறையைவிட்டு வெளியே வந்து, சிம்ம கர்ஜனையுடன், "வடு! இங்கே வராதே! கீழேயே இரு" என்றான்.

"ஏலா-அக்கா ?" என்று கேட்டான் வடு.

"ஏலா புடவை மாற்றிக்கொண்டு வரப் போய் இருக்கிறாள். கீழே போ!"

"புடவை கட்டிக்கொள்கிறளா? இவ்வளவு நாழிகை கழித்தா? எட்டரை மணிக்கா?"

"ஆம், ஆம். என்னால்தான் சற்று நேரம் ஆகிவிட்டது."

"அவளோடு ஒரே ஒரு வார்த்தைதான்! ஐந்தே நிமிஷம்!"

"அவள் குளிக்கப் போயிருக்கிறள். தன் அறைக்குள் யாரும் வரவேண்டாமென்று சொல்லி இருக்கிறள்."

"நீங்கள்-?"

"என்னைத் தவிரத்தான்."

வடு வாயைக் கோணிக்கொண்டு குறும்பாகச் சிரித்தான். "நாங்களெல்லாரும் வெகு நாளாக வந்துகொண்டு போய்க்கொண்டு இருக்கிறேமே! ஏதோ இரண்டு நாளாகத்தான் நீங்கள் இங்கே அபூர்வமாகத் தலை காட்டுகிறீர்கள்? இந்த மாதிரி 'எக்ஸெப்ஷன்' (தனிச் சலுகை) சேற்றில்தான் கொண்டு தள்ளப்போகிறது. அதிக நாள் இது நடக்காது. இப்போதே சொல்லி வைக்கிறேன்" என்றதும் வடு சரசர வென்று இறங்கிப் போய்விட்டான்.

இருபுறமும் கூரான ஓர் ஆயுதத்தைக் கையில் சுழற்றிக் கொண்டே அகிலன் அங்கே தோன்றி, "கடிதம்" என்றன். அவன் அரை குறையாய்ச் செய்திருக்கும் ஒரு ஸம்புடத்திலிருந்து அது வெளிக் கிளம்பிற்று.

"உன் அக்காவுக்கா?"

"இல்லை, உங்களுக்குத்தான். உங்கள் கையில்தான் கொடுக்கச் சொன்னன்."

"யார்?"

"எனக்கு என்ன தெரியும்!" என்றதும் அகிலன் சீட்டைக் கொடுத்துவிட்டு அகன்றன்.

அதீன் அதில் சிவப்புக் குறி இருப்பதைக் கண்டு 'டேஞ்ஜர் ஸிக்னல்' (அபாய எச்சரிக்கை) என்று அறிந்து கொண்டான். ரகசிய பாஷையில், ரகசிய மொழியில் எழுதி யிருந்தது, அந்தக் கடிதத்தில்:—

''எலாவின் வீட்டுக்கு இனி வராதே. அவளிடம் சொல்லா மல் உடனே புறப்பட்டு விடு.''

கடமையை மீறிச் செல்வது தன்னுடைய கௌரவத் திற்கு அழகல்ல என்று உணர்ந்து அந்து அந்தத் துண்டுக் கடிதத்தை ரீதிப்படிச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிந்தான். கணநேரம் ஸ்நான அறையின் கதவெதிரே மௌனமாக நின்றான். மறு நிமிஷமே விரைவாக வெளியேறினான். தெருவில் நின்றவண்ணம் ஒரு தடவை மாடியை நோக்கி னான். ஜன்னல் திறந்திருந்தது. ஸோபாவின் ஓர் அம்சம் வெளியிலிருந்து நன்றாகத் தெரிந்தது. அதோடு மஞ்சள் பச்சைக் கோடுகள் போட்ட திண்டின் ஒரு நுனியும் தென் பட்டது. வீதியில் டிராம் ஒன்று போய்க்கொண் டிருந்தது. ஒரே தாவில் அதில் ஏறிக்கொண்டான் அதீன்.

மூன்றும் அத்தியாயம்

ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு வெளுத்த பச்சை, இருண்ட பச்சை, மஞ்சள் கலந்த பச்சை பழுப்பேறிய பச்சை முதலிய வர்ண பேதங்களை உடைய கொடியும் மரமும் அடர்ந்த இடம். மூங்கில் சருகும், அழுகும் பாசி யும் நிரம்பிய குட்டை ஒன்று. அதன் பக்கமாக வளைந்து செல்லும் ஒரு சந்து. வண்டிச் சக்கரங்கள் போழ்ந்த பள்ளங்கள். சப்பாத்தி, அரளி, நாயுருவி, மரல்மட்டை போன்றவை சூழ்ந்த வேலி. நடுநடுவே அவற்றின் இடுக்கு வழியாக, நீர் தேங்கிய வயல்களில் இளம் பயிர்கள் தென் படும். கங்கைத் துறையோடு நின்றது பாதை. அந்தக் காலத்துக் குட்டிச் செங்கல்லால் கட்டிய படித்துறை; பல இடங்களில் கலகலத்துப் போய்ச் சரிந்திருந்தது. ஆற்று

மணல் எக்கர் இட்டதால் கங்கையின் நீரோட்டம் ஒதுங்கியே சென்றது. இன்னும் சற்றுத் தொலைவில் படித்துறைக்கு அப்பாலே, கரையில் காடு முளைத்த ஓர் இடத்தில் ஒரு பாழடைந்த வீடு. அதன் நிழலில் நூற்றைம்பது வருஷங் களுக்குமுன் தாலயைக் கொன்ற ஒருத்தியின் பேய் உலாவுவ தாக வதந்தி. வெகு நாளாக, உயிருள்ள அதனுடைய சொந்தக்காரன் எவனும் அந்த அருவத்திற்கு எதிரிடையாக அதிகாரம் செலுத்த அங்கே வரவில்லை. அந்த வீட்டைச் சேர்ந்த ஒரு பூஜை மண்டபத்தில், பின்வரும் காட்சி அமை கிறது.

அதன் எதிரே உள்ள முற்றத்தில் பாசி பிடித்த உடைந்த செங்கற்கள் குவியலாகக் கொட்டிக் கிடந்தன. இன்னும் தொலைவில் நதியின் கரையில் இடிந்த கோயில் ஒன்று தலை காட்டியது. அதன் வசந்த மண்டபம் சிதில மாகிக் கிடந்தது. மதிலிலே எத்தனையோ இடங்களில் பிளவு கள்! எலும்புக்கூடு போன்ற உடைந்து போன தோணி ஒன்று, விழுது இறங்கிய ஓர் ஆலமரத்தின் கீழ் இருளில் கிடந்தது.

அதீன் தாற்காலிகமாக அந்த இருளடைந்த வீட்டில் தான் வசித்து வந்தான். அங்கேதான் பொழுது சாயும் சமயம் கானுயி குப்தன் தென்பட்டான். அவனைப் பார்த் ததும் அதீனுக்குத் தூக்கி வாரிப் போட்டது; காரணம், இங்கே தான் இருப்பது கானுயிக்குத் தெரிய வேண்டிய அவசியமே இல்லை!

"நீங்களா?"

"வேவு பார்க்கத்தான் வந்தேன்."

"விளையாட்டாகவா? நிஜமாகவா?"

"விளையாட்டல்ல; உண்மையாகத்தான். நானும் உங்க ளவர்களை அண்டிப் பிழைக்கும் ஆசாமிதான். நம் உடக் கடையில் சனீசுவரன் கண் வைத்துவிட்டான். அதுதான்

கிளம்பி வந்தேன். கூடவே அந்தக் கெட்ட கண்ணும் என்னைத் தொடர்ந்து வருகிறது. கடைசியில் அவர்களுடைய துப்பறியும் 'டயரி'யில் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டியதாயிற்று. *'நிம்தலா கட்டத்'துக்குப் போகத் துணிந்தவனுக்கு இந்த வழி 'கிராண்டு டிரங்க் ரோடு' (ராஜபாட்டை) தான். கிழக்கிலிருந்து மேற்குவரை நீளும் இந்தப் பாதை நம் நாட்டின் இருதயத்தை ஊடுருவிச் செல்கிறது."

"டீ தயாரிப்பதை விட்டு இப்பொழுது 'கயிறு திரிக்க' ஆரம்பித்து விட்டீர்களா?"

"கயிறு திரித்தால் இந்த வியாபாரம் ஓங்காதே! அப்பட்டமான சமாசாரத்தைச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. வலையில் சிக்கிய விலங்கின் சுருக்கு என் கையில் தானே இருக்கிறது! உங்கள் ஹுரேனைப்பற்றி முக்கால்வாசி விவரம் அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. எஞ்சியிருந்ததை நான் எட்ட விட்டுவிட்டேன். இப்போது அவன் ஜலபாயி குடியில் சர்க்காரின் விருந்தாளியாக இருக்கிறான்."

"அடுத்தபடி நான்தானே?"

"உனக்கும் காலம் கிட்டிவிட்டது. வடுதான் இதை அரும் பாடுபட்டு இவ்வளவு தூரத்துக்குக் கொண்டுவந்திருக்கிறான். என்னிடத்தில் சிக்கியிருக்கும் விஷயங்கள் வெளியாகக் கொஞ்ச நாள் ஆகும். முன்னே இருந்த விடுதியில் திடீரென்று ஒரு நாள் 'டயரி' தொலைந்துவிட்டதே; கவனம் இருக்கிறதா?"

"நன்றாக ஞாபகம் இருக்கிறது."

"நான் மட்டும் அதைத் திருடிக்கொண்டு வராவிட்டால்? அது போலீஸார் கையில் நிச்சயம் மாட்டிக் கொண்டே இருக்கும்!"

"நீங்களா திருடினீர்கள்?"

---

* கல்கத்தாவிலுள்ள மயானம் (வேப்ப மரத்தடித் துறை).

"ஆமாம். நல்ல எண்ணம் உடையவனுக்குக் கடவுள் துணை புரிகிறார். ஒரு நாள் நீ அதில் ஏதோ குறித்துக் கொண்டிருக்கும் சமயம் நீ சற்று வெளியே போக ஒரு சூழ்ச்சி செய்து அதை அமுக்கிவிட்டேன்."

அதீன் தலையில் கையை வைத்துக்கொண்டு, "ஆனால் அதை நீங்கள் படித்துப் பார்த்தீர்களா?" என்றான்.

"பார்த்தேன். படித்து முடிக்க இரவு மணி ஒன்றரை ஆகிவிட்டது. வங்க பாஷையில் அவ்வளவு வீரியமும் சுவையும் இருப்பதை அதற்கு முன் நான் அறிந்ததில்லை. அதில் எவ்வளவோ அந்தரங்கமான விஷயம் அடங்கி யிருந்தது. ஆனால் எல்லாமே பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் பற்றியதன்று."

"நீங்கள் செய்தது சரியா?"

"சரி என்றுதான் சொல்லுவேன். நீயோ இலக்கியத்தில் பற்றுடையவன். உன் 'டயரி'யில் அற்ப விஷயங்களைப்பற்றி நீ குறித்துக் கொள்ளவில்லை. யாருடைய பெயரும் அதில் வரவில்லை. பாவம் நிறைந்த அந்த எழுத்தில். எவ்வளவு வெறுப்பும் தீவிரமும் தொனிக்கின்றன தெரியுமா? அதுவே, மந்திரிப் பதவிக்குப் பேயாக அலையும் ஒரு 'பென்ஷன்' தாரியின் பேனாவிலிருந்து வெளியாகி இருந்தால் ராஜாவின் தர்பாரில் அவனுக்குச் சம்மானங்களெல்லாம் கிட்டியிருக்கும். வடு மாத்திரம் உன்னோடு சேராமல் இருந்திருக்கும்பட்சத்தில் இந்த 'டயரி' ஒன்றே உன்னை நல்ல தசைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கும்."

"என்ன? - என்ன? ஒன்று விடாமலா படித்தீர்கள்?"

"படிக்காமல் என்ன? என்னவென்று சொல்வேன், அப்பா! எனக்கு ஒரு பெண் இல்லாமற் போய்விட்டாளே! அப்படி இருந்து அவளுடைய காதல் தூண்டி இவ்வளவு ரசமான விஷயங்கள் வெளிப்பட்டால் பெண்ணைப் பெறக் கொடுத்து வைத்தேனே என்றுதான் சந்தோஷப்படுவேன்.

உண்மையைச் சொல்கிறேன். உன்னை இந்திரநாதர் இந்தக் கோஷ்டியில் சிக்கவைத்துத் தேசத்திற்கே பெரிய நஷ்டத்தை உண்டு பண்ணிவிட்டார்."

"நீங்கள் இந்த மாதிரி வேலை செய்வது மற்றப் பேருக் கெல்லாம் தெரியுமா?"

"யாருக்குமே தெரியாது."

"வாத்தியாருக்குக் கூடவா?"

"மகா புத்திமான் ஆயிற்றே அவர்; குறிப்பாகத் தெரியும். ஆனால் அவர் என்னை ஒன்றும் விசாரித்ததும் இல்லை; நானும் சொல்லவில்லை."

"என்னிடம் மட்டும் சொன்னீரே!"

"இது ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது! என்னைப் போன்ற சந்தேகப் பிராணிகளுக்குத்தான் யாராவது ஒருவனிடத்தில் மனசை வெளியிடாமற்போனால் தலை வெடித்து விடுமே! நான் உங்களை யெல்லாம்போல் பாவ லோகத்தில் திரியும் மனிதன் அல்ல; 'டயரி' வைத்திருக்க அப்படி முட்டாளுமல்ல. வைத்துக்கொண் டிருந்தாலும் உன் கையில் கொடுத்தால்தான் எனக்கு நிம்மதி வரும்."

"வாத்தியார்—?"

"வாத்தியாரிடம் சமாசாரம் எட்டவிடலாமே யொழிய மனசை மட்டும் திறந்து காட்டக்கூடாது. இந்திரநாத ருடைய பிரதான மந்திரி நான்; அவரைப்பற்றி எல்லா விஷய மும் எனக்குத் தெரியும் என்று நினைத்துவிடாதே! நான் ஊகித்துச் சொல்ல முடியாத சில விஷயங்களும் இருக்க லாம். நம் கோஷ்டியிலிருந்து தாங்களாகவே நழுவிப் போகிற வர்களை என்னைப்போலவே இந்திரநாதரும் சிரமகத் துடைத் துப் போலீஸுக்குக் காட்டி விடுகிறார். ஈனமான காரிய மாய் இருந்தாலும் அதைப் பாவம் என்று சொல்ல

முடியாது. இதோ பார்: என்றைக்கோ ஒரு நாள் அவராலோ என்னுலோ உன் கையில் இரும்புக் காப்பு விழப் போகிறது. அப்போது இதையெல்லாம் மனசிலே வைத்துக் கொள்ளக் கூடாது. இந்த இடத்தில் வருவது போவதைப் பற்றி வடுவே முதலில் போலீஸ் ரகசிய இலாகாவுக்கு அறிவித்தான். நானும் அவனுக்கு அநுசரணையாக இருக்க வேண்டியதாயிற்று. போட்டோ எடுத்து அவர்களுக்கு அனுப்பினேன். இப்பொழுது நடக்கிற விஷயத்தைச் சொல் கிறேன். உனக்கு இருபத்து நாலு மணி நேர அவகாசம் கொடுக்கிறேன். அதற்கு மேலும் நீ இங்கே தங்கினுயானுல் நானே உன்னைத் தாணவுக்கு இழுத்துச் சென்றுவிடுவேன். நீ போகவேண்டிய இடத்தை எல்லாம் நான் இங்கே குறித்து வைத்திருக்கிறேன்: இந்தா! இந்த எழுத்து உனக்குப்புரியுமோ இல்லையோ? இதைக் கவனம் வைத்துக்கொண்டு கிழித்து விடு. இந்த 'மாப்' (படக்குறிப்பு)லைப் பார். பாட்டைக்கு இந்தப் பக்கம் நீ இருக்கவேண்டிய இடம்: அதாவது ஸ்கூல் கட்டிடத்தின் ஒரு மூலே அறையில். அதற்கு எதிரே போலீஸ் ஸ்டேஷன். அங்கே என் பேரன் ஒருவன், ரைட் டர்-கான்ஸ்டேபிள். அவன் பெயர் ராகவ போயால். மூன்று தலைமுறையாக மேற்குப் பிரதேசத்திலேயே அவர்கள் வசிக் கிறுர்கள். அங்கே நீ வங்காளி 'ட்யூஷன்' சொல்லிக் கொடுத்துத்தான் பிழைக்க வேணும். அங்கே நீ போனதும் ராகவன் உன் பெட்டி, ஜேபி எல்லாவற்றையும் சோதனை செய்து பார்ப்பான். இரண்டு குத்து விட்டாலும் விடுவான்; இதுவும் பகவானுடைய அநுக்கிரகம் என்று எண்ணிக் கொள். முன்பின் உறவு இராதுபோனுலும் உன்னை, 'எண்டா மச்சான்!' என்றுகூட ஹிந்தியில்* அழைப்பான். நீ அவனை எதிர்த்துக்கொள்ளாதே! உயிர் தங்கவேண்டுமானுல் இந்தப் பக்கம் தலை காட்டாதே! ஸைகிள் வெளியே இருக்கிறது. சமிக்ஞை செய்ததும் விடு சவாரி. அப்பா, போய் வா! கடைசியாக உன்னைத் தழுவிக்கொள்கிறேன்."

*சாலா-மச்சான் (மைத்துனன்). ஹிந்தியில் தேவடியாள் மகன் என்றும் பொருள்படும்.

அவனை அணைத்துக்கொண்ட பின் காணுயி போய் விட்டான்.

அதீன் மௌனமாக உட்கார்ந்து தன் சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தான். அகாலத்தில் தன் வாழ்க்கையின் கடைசி அங்கம் வந்துவிட்டது; திரையும் விழுந்துகொண்டே இருக்கிறது. விளக்கும் அணையும் தறுவாயில் இருக்கிறது. நிர்மலமான உதயவேளையில் வாழ்க்கையைத் தொடங்கினுன். வெகுதூரம் வந்து விட்டான். வழிச் செலவுக்குக் கையில் வைத்துக்கொண் டிருந்ததெல்லாம் கரைந்துவிட்டது. ஒரு நாள் திடீரென்று அந்தப் பாதையின் வளைவில் அவனுடைய பாக்கியலக்ஷ்மி எல்லா அழகுடனும் அவனெதிரே தோன்றினுள். அந்த மாதிரி ஓர் ஐசுவரியத்தைத் தன் வாழ்வில் காண நேரும் என்று அவன் இதற்கு முன் எண்ணினதே இல்லை. காவிய லோகத்தில்தான் அதைக் கற்பனை வடிவில் பார்த்திருக்கிறுன். * தாந்தே, பியாத்ரிசே (Dante & Beatrice) இவர்களின் மறு பிறப்பே தாங்கள் என்று அவன் எண்ணியிருந்தான். சரித்திர உண்மைகள் அவன் மனத்துள் கிளர்ச்சியை மூட்டின. தாந்தேயைப் போலவே அரசியல் புரட்சியில் அதீன் கலந்துகொண்டிருந்தான். ஆனுல் அவன் உண்மை லக்ஷ்யம் எங்கே? வீரியம் எங்கே? கௌரவம் எங்கே? பார்த்துக்கொண் டிருக்கையிலேயே ஏதோ ஒன்று அவனைச் சேற்றில் கொண்டு அழுத்தி விட்டது. முகமூடி மறைவில் செய்த பயங்கரச் செயல்கள்-கொலையும் களவும்- தேச சரித்திரத்தில் பிரகாசமாக விளங்குமா? இக்தக் காரியங்களினுல் அவன் தன் ஆத்மாவின் அழிவைத் தவிர வேறு ஒன்றையும் காணவில்லை. எதிரே தோல்விதான் வந்து நின்றது. தோல்விக்கும் ஒரு மதிப்பு உண்டு; இது பெரியதோர் லக்ஷ்யத்தின் தோல்வி அல்ல. கோர பயங்கரங்களில் கொண்டுவிடும் கபட வஞ்சனையினுல் ஏற்பட்ட தோல்வியே! இதற்கு ஓர் அர்த்தமும் இல்லை; முடிவும் இல்லை.

---

* ஒரு பிரபல இத்தாலியக் கவியும் அவன் மானஸிகக் காதலியும்.

பொழுது சாய்ந்து வெளிச்சம் மங்கிவந்தது. வீட்டு முற்றத்தில் சில்வண்டுகள் இரைச்சலிட்டன. எங்கோ ஒரு மாட்டுவண்டி போய்க்கொண் டிருக்கும் சப்தம். திடுமென அந்து இருக்கும் அறையில் வேகமாக எலா வந்து தோன்றினாள். தற்கொலை செய்துகொள்பவன் ஜலத்தில் விழுவது போன்ற தீவிரத்துடன் அவள் கண்மூடித்தனமாக அங்கே வந்தாள். அதீன் குதித்து எழுந்தான். எலா அவன் மார்பில் சாய்ந்தாள். அழுகையினால் நெஞ்சு விரிய, "அதீன்! அதீன்! என்னால் இருக்க முடியாது!" என்றாள் அவள்.

அதீன் நிதானமாக அவளை விலக்கித் தன் எதிரே நிற்க வைத்துக் கண்ணீர் தோய்ந்த அவள் முகத்தையே நோக்கினான்.

"எலி! என்ன காரியம் இது!"

"என்ன செய்துவிட்டேன்?"

"இந்த இடம் உனக்கு எப்படித் தெரிந்தது?"

எலா பிணங்கி, "நீதான் என்னோடு சொல்லாமல் போய்விட்டாயே!" என்றாள்.

"இதை உனக்குத் தெரிவித்தவன் உன் நண்பனல்ல."

"அதுவும் தெரியும் எனக்கு. உன் சங்கதி கொஞ்ச நாள் தெரியாமல் இருந்தால் வெறிச்சென்றாகி என் மனம் அலை பாய்கிறது. விரோதி இவன், நண்பன் இவன் என்று அறியும் நிலையில் இல்லை நான். உன்னைப் பார்த்து எத்தனை நாள் ஆகிறது; நீயே சொல்லேன்."

"நீ பாக்கியவதி."

"நீதான் பாக்கியசாலி, அந்து. என் வீட்டிற்கு இனி மேல் வரவேண்டாம் என்று உனக்கு எச்சரிக்கை செய்த படி நீ அடங்கிப் போனாய்!"

"இயற்கையாக எனக்கு இருந்த அலக்ஷ்யமே அதற்குக் காரணம். ஒரு பெரிய வேட்கை என்னை மலைப் பாம்புபோல் அல்லும் பகலும் வளைத்து நொறுக்கிக்கொண்டிருக்கிறது. அதற்குக்கூட நான் அடங்காமல் இருக்கிறேன். என்னை 'ஸெண்டிமெண்டல்' (இளகிய நெஞ்சு) என்று அவர்கள் சொல்வார்கள். நான் நிலையான மனசோடு தான் இருந்தேன்; நெருக்கடி வரும்போது ஈர மண்ணின் தன்மை வாய்ந்தவன் நான் என்று தெரிந்துவிடும். இந்த 'ஸெண்டிமெண்டே' (இளகிய மனசே) எனக்கு அமோக மான பலத்தைத் தருகிறதென்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?"

"வாத்தியாருக்கு இது தெரியும்."

"எலி! பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தப் பயங்கர இயக்கம் தோன்றியதிலிருந்து இன்று வரை எந்த வங்காளிக் குடும்ப ஸ்திரீயும் இப்படிக் கலந்துகொண்டு வேலை செய்ததே இல்லை."

"அதற்குக் காரணம் நம் தேசத்தில் எந்தக் குடும்பப் பெண்ணுக்கும் இத்தகைய அதிருஷ்டமோ கடினமான சோதனையோ ஏற்படாததுதான்."

"எலி! நீ இப்போது செய்த காரியம் மிகவும் அக்கிரமமானது!"

"அது எனக்குத் தெரியும்; என் பலஹீனத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். இருந்தும் நியமத்தை மீறியே நடப்பேன். எனக்காக மட்டும் அல்ல; உனக்காகவுந்தான். நீ கூப்பிடுவது போலவே பிரதி தினமும் என் மனசில் ஒரு குரல் கேட்கிறது. அதற்குப் பதில் கொடுக்காதிருந்தால் என் பிராணன் போய் விடும்போல் இருக்கிறது. நான் இங்கே வந்தது உனக்குச் சந்தோஷந்தானே? இதைச் சொல்லு."

"சந்தோஷமா! இவ்வளவு அவ்வளவல்ல. அதை நிரூபிக்க, எந்த வித ஆபத்துக்கும் நான் உட்படத் தயார்".

"வேண்டாம்! வேண்டாம்! நீ ஏன் ஆபத்தில் சிக்க வேண்டும்? வருவதெல்லாம் என் மேல் வரட்டும்;—ஆனால் நான் வரட்டுமா, அந்து?"

"உன்னை விட மாட்டேன்; நீ நியமத்தை மீறி வந்திருக்கிறாய். நானும் அப்படியே நியமத்தை மீறி உன்னைப் பிடித்து வைத்துக்கொள்ளப் போகிறேன். நாம் இருவருமே சேர்ந்து குற்றத்தைச் சரி சமானமாக ஏற்றுக் கொள்வோம். அன்றொரு நாள் உன் முகத்திலே புதுப் பொலிவு கண்டு மயங்கினேன். அது மறைந்து எத்தனையோ நாள் ஆயிற்று. இன்று அந்த நாளை மறுபடியும் நினை ஊட்டிக் கொள்வோம், இந்தப் பாழடைந்த வீட்டில். என் அருகே வா! இரு. அறையை நன்றாக ஒழித்து வைக்கிறேன்.—ஐயோ! வழுக்கைத் தலையைச் சீப்பால் வாருவது போல் இருக்கிறதே!"

ஏலா ஒரு தரம் நாலு பக்கமும் சுற்றிப் பார்த்தாள். தரை மீது ஒரு கம்பளி; அதன்மேல் ஒரு பாய். தலையணைக்குப் பதிலாகக் கித்தான் பையில் போட்ட ஒரு தடிமனான புஸ்தகம்; உட்கார்ந்தெழுத ஒரு ஜாதிக்காய்ப் பெட்டி. ஒரு குடத்தில் ஜலம்; அதன்மேல் ஒரு மண்பாண்டம் கவிழ்த்திருந்தது. அறுந்துபோன ஓர் உறியில் வாழைப்பழச் சீப்பு ஒன்று. 'எனமல்' போன்ற ஒரு கிண்ணமும் இருந்தது. சமயம் வாய்த்தபோது டீ போட்டுக்கொள்ள அது உபயோகப்பட்டது. அறையின் மற்றொரு மூலையில் ஒரு பெரிய மரப்பெட்டி. அதன்மேல் ஒரு மண் பிள்ளையார் உட்கார்ந்திருந்தார். அதிலிருந்து, யாரோ ஒரு நண்பன் அதினோடு இருக்கிறான் என்று தெரிய வந்தது. கம்பத்திலிருந்து கம்பத்திற்குக் கட்டியிருந்த கயிற்றிலே அழுக்கேறிய பல வர்ணச் சவுக்கங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அறையின் தரை எங்கும் சதசதவென்று இருந்தது. உள்ளே ஒரே புழுக்கம்.

இந்த மாதிரியான காட்சிகளைப் பல இடங்களில் ஏலா பார்த்திருக்கிறாள். எப்போதுமே இதைக் குறித்து

வருத்தப்பட்டதில்லை அவள். அந்தத் தியாக வீரர்களின் பொறுமையைக் கண்டு வியப்பாள். ஒரு சமயம் ஏதோ புதாண்டை, பழக்கமிராதவர்கள் சிலர் சமைத்து விட்டுப் போன அடையாளத்தைப் பார்த்திருக்கிறாள். வைக்கோல் கூளத்தையும் தழையையும் போட்டு எரித்த சாம்பல் கிடைக்கும் அங்கே! புரட்சியின் சரித்திரத்திலேயே நெருப்பைக்கொண்டு எழுதிய சித்திரம்போல் இருந்தது, இந்தக் காட்சி. ஆனால் இன்று அந்துவின் அறையைப் பார்த்ததும் அவளுக்கு நெஞ்சு அடைத்துக்கொண்டு வந்தது. ஸோபாவில் படுத்துக் காலம் கழிக்கும் தனவந்தர்களை எப்போதும் இழிவாகக் கருதுபவள் எலா. ஆனாலும் இப்போது அதீனைப் போன்றவன் இந்த மாதிரிச் சுற்றத்தில் இருப்பது அவள் மனசுக்கு ஒப்பவே இல்லை.

எலாவின் முகத்தில் கவலை படர்வதை நோக்கி அதீன் சிரித்து, "என்ன! என் ஐசுவரியத்தைப் பார்த்துப் பிரமித்து விட்டாயா? அதன் அழகு உன் கண்ணுக்குத் தெரியவில்லை; அதனால்தான் அப்படி ஸ்தம்பித்து நிற்கிறாய். எப்போதுமே நான் வெறுங்காலுடன் இருக்கவேண்டி இருக்கிறது. ஓட்டம் பிடிக்கவேண்டிய சமயத்தில் சாமானைப் போட்டுவிட்டுப் போகிறோமே என்ற வருத்தம் இல்லை; பின்னே அழைப்பாரும் இல்லை. இங்கேயிருந்து சற்றுத் தொலைவில்தான் சணல் ஆலைக் கூலிகள் வசிக்கும் இடம். அவர்களெல்லாரும் என்னை, 'வாத்தியார்' என்று அழைக்கிறார்கள். ஏதாவது கடுதாசு வந்தால் என்னைப் படித்துக் காட்டச் சொல்கிறார்கள். விலாசம் எழுதிக் கொடுக்கச் சொல்லி வருவார்கள். அவர்கள் கடன் அடைத்த இடத்திலிருந்து சரியான ரசீது வந்ததா என்று தெரிந்துகொள்வார்கள். அவர்களில் இரண்டொருவர் பிள்ளை குட்டிக்காரர்கள். தம் பிள்ளைகளாவது கூலி வேலை செய்து பிழைக்காமல் படித்து உயர்வான உத்தியோகம் வகிக்கவேண்டும் என்ற ஆசையுடன் எனக்கு நிறையப் பக்ஷணமும் பசும்பாலும் கொண்டு தருவார்கள்" என்றான்.

"அந்து! மூலையில் இருக்கும் அந்தப் பெட்டி யாருடையது?"

"அது மட்டும் தனியாக இங்கே இருப்பதனால்தானே உன் கண்களில் உறுத்துகிறது. மூதேவியின் துடைப்ப அடிபட்டு நடுத்தெருவிலிருந்து வந்து இங்கே அடைக்கலம் புகுந்திருக்கிறான், ஒரு மார்வாடி; அவனுடையது. மூன்று தடவை திவாலானவன். திவாலாவதே அவனுடைய வியாபார தந்திரமோ என்று எனக்குச் சந்தேகங்கூட. இந்த இடிந்த வீட்டில்தான் அவனுடைய இரண்டு தம்பி பிள்ளைகள் வியாபாரம் கற்றுக்கொள்கிறார்கள். பொரி மாவு தின்று விட்டு இங்கே வேலை செய்ய வருகிறார்கள். கூலிப் பெண்களுக்காக விலை மலிவான சேலைகளை வாங்கிச் சாயந் தோய்த்து விற்றுத் தங்கள் கடனைக் கொஞ்சங் கொஞ்சமாக அடைத்து வருகிறார்கள். அதோ அந்த மண் சால் இருக்கிறதே; அதை நான் என் சமையலுக்கு உபயோகப் படுத்தவில்லை—அதில்தான் அவர்கள் சாயம் தோய்க்கிறார்கள். அந்தச் சேலைகளையெல்லாம் இந்தப் பெட்டியில்தான் வைக்கிறார்கள். ஏழைக் கூலிப் பெண்களுக்கு ஏற்ற அலங்காரச் சாமான்களும் இதில் இருக்கின்றன: கண்ணாடி வளையல்கள், தந்தச் சீப்பு, சின்னக் கண்ணாடி, பித்தளைக் கடகம் இன்னும் என்ன என்னவோ; இதையெல்லாம் பூதம்போல் காக்கவேண்டியது என் பொறுப்பு. மத்தியான்னம் மூன்று மணிக்கெல்லாம் கிளம்பி விடுகிறார்கள். அப்புறம் திரும்பி வருவதில்லை. மார்வாடிகளுக்குக் கல்கத்தாவிலா வேலை இல்லை? எத்தனையோ தரகு வியாபாரம்! எனக்கு இங்கிலீஷ் தெரிந்திருப்பதால் என்னையும் தம் தொழிலில் பங்கு தாரனாகச் சேர்த்துக்கொள்ள விரும்பினார்கள். ஜீவகாருண்யத்தால் நான் அதற்கு உடன்படவில்லை. எனக்குச் சொத்து ஏதாவது இருக்கிறதா என்று விசாரித்தார்கள். பிதுரார்ஜிதமாக இருந்த சொத்தில் முக்கால்வாசியை இவர்களைப் போன்றவர்களுக்குத்தான் தத்தம் செய்து விட்டதாகச் சொன்னேன்."

"இந்த இடத்தில் எத்தனை நாள் நீ தங்கப் போகிறாய்?"

"சுமாராக இருபத்து நாலு மணி நேரம். இந்த இடத்தில் பல ரகமான வாண வேடிக்கைகள் அவைபாட்டிற்கு நடந்துகொண்டேதான் இருக்கும்! அதீந்திரன் மட்டும் மெல்ல இலைப் பழுப்புப்போல் மங்கி மறைந்துவிடுவான், அடிவானத்தில். என்னோடு கூட இத்தனை நாள் சகவாசம் பண்ணின தோஷத்தால், பாவம், அந்த மார்வாடி கையில் 'காப்பு' ஏறுதிருக்க வேண்டுமே! மூலதனம் போடாமலே என்னைப் பங்குதாரன் ஆகும்படி யோசனை கூறுவதையெல்லாம் அவன் காற்றில் பறக்க விட வேண்டியதுதான்?"

"நீ போகிற இடந்தான் எங்கே?"

"சொல்வதற்கு உத்தரவு இல்லை."

"ஆனால் அந்த இடத்தைக் கற்பனை செய்துகொள்ளத் தெரியாதா எனக்கு?"

"கற்பனை பண்ணிக்கொள்வதில் ஒரு தவறும் இல்லை. மானஸ ஸரோவரம் என்றுதான் எண்ணிக்கொள்ளேன்."

இதற்குள் அங்கே இருந்த ஒரு பையிலிருந்து புஸ்தகங்களை வெளியே எடுத்துப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான் எலா. அவற்றுள் பெரும்பான்மை இங்கிலீஷ் புஸ்தகங்கள்—காவியங்கள்; வங்காளிப் புஸ்தகங்கள் இரண்டொன்று.

"என்னுடைய கொள்கைகளை மறந்துவிடுவேனோ என்று பயந்து இத்தனை நாள் இவைகளை எல்லாம் கட்டிக்கொண்டு அலைந்தேன். இவைதாமே ஆதிமுதல் எனக்கு அறிவு ஊட்டி வந்தன. பக்கத்தைத் திருப்பியதுமே பென்சில் அடையாளங்கள் தெரியும். இவையே அந்தக் கொள்கையின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் காட்டும். ஆனால் இன்று! இதோ என்னைப் பார்" என்றான் அந்து.

ஏலா சட்டென்று தரையில் படிந்து அதீனுடைய காலைத் தொட்டு, "என்னை மன்னித்துவிடு, அந்து, என்னை மன்னிப்பாயா?" என்றாள்.

"உன்னை எதற்காக மன்னிக்கவேண்டும்? ஏலி! பகவான் என்று ஒருவர் இருந்து அளவற்ற கருணை அவருக்கு இருக்கும்பக்ஷத்தில் அவர் என்னை மன்னிக்கட்டும்!"

"உன்னைச் சரிவர அறிந்துகொள்ளாமலேயே இந்த நடுச் சந்தியில் நிற்க வைத்துவிட்டேன்!"

அதீன் சிரித்துக்கொண்டே, "என்னுடைய பைத்தியக்காரத்தனமே 'புல்ஸ்டீமு'டன் (முழுவேகத்துடன்) என்னை இக்கதிக்குக் கொண்டு விட்டது என்று நான் பெருமை கொள்ளக்கூடாதா? நான் என்னவோ அறியாதவன் போலவும், நீ என்னைக் கட்டிக் காப்பது போலவும் பெருந்தன்மையாகப் பேச வந்தால் நான் சகிக்கமாட்டேன். அந்த உயர்ந்த பீடத்திலிருந்து இறங்கி வந்துவிடு. என் முகத்தைப் பார்த்து,

'இன்னுயிர்க் கேள்வ! என்னிடம் வருவாய்!
என்னுள் பாதி ஆவாய் நீயே'

என்று சொல்" என்றான்.

"சொல்லாமல் என்ன? ஆனால் திடீரென்று ஏன் உனக்கு இந்தப் பைத்தியம்?"

"பைத்தியமல்ல; தாமரை போன்ற உன் கரத்தைக் காட்டி என்னைத்தான் வெளியே போகச் சொல்லி விட்டாயே!"

"உண்மையைச் சொன்னால் உனக்கு ஏன் இப்படிக் கோபம் வருகிறது?"

"உண்மையா? எது உண்மை? என் உள்ளத்தில் மூண்ட வேகம் தூண்டியே நான் இந்தத் திக்கற்ற வழியில் கிடக்கிறேன். நீ அதற்கு ஒரு கருவியாக இருந்தாய். வேறு வகையான வங்க ரமணிகளை நாடி இருந்தேனானால் இத்தனை நாளைக்கு வெள்ளைக்காரரும் கறுப்பு மனிதரும் கூடும் 'கிளப்'பில் 'பிரிட்ஜ்' ஆட்டம் அல்லவோ ஆடிக் கொண்டிருப்பேன்! குதிரைப் பந்தய மைதானத்தில் கவர்னர் ஆசனத்துக்குப் பக்கத்தில் 'சுவர்க்க பதவிக்கு அல்லவோ அடி போட்டுக்கொண்டு இருப்பேன்! என்னை ஒரு மூடம் என்று சொல்லும் பக்ஷத்தில் நான் அதைத் தாராளமாக ஒப்புக்கொள்ளுகிறேன். மடத்தனமானாலும் அது என்னுடைய சொந்த மடத்தனந்தானே? அதுவும் பகவான் கொடுத்ததுதான்."

"அந்து, உன்மேல் ஆணை! அந்தமாதிரி அசட்டுப் பிசட்டென்று பேசாதே! உன் வாழ்வை நட்டாற்றில் தள்ளினவள் நான்தான். அந்தத் துக்கத்தை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. உனக்கு நான் வேர்ப் புழுவாகிவிட்டேன்!"

"இப்பொழுதுதான் உன்னிடத்தில் உண்மையான பெண் சுபாவத்தைக் காண்கிறேன். தேச முன்னேற்றம் என்னும் ஆடரங்கில் நீ ஒருத்தியே 'ரொமாண்டிக்'காக (அற்புதமாக)த் தோன்றுகிறாய். சுற்றிலும் பித்தளைத் தாளங்களில் பால், சாதம், வியஞ்ஜனங்கள் பரிமாறியிருக்கும் ஒரு சம்சாரத்தின் நடுவே இருந்து கையில் விசிறியுடன் அவைகளை ஈ மொய்க்காமல் பார்த்துக்கொள்கிறாய்! அரசியல் கிளர்ச்சியில் உதையும் குத்தும் விழும் சமயம் நீ தலை விரி கோலமாய், கண்கள் சிவக்க நடுவே வந்து நுழைகிறாய். உன் சுய புத்தியினால் இப்படிச் செய்ய வில்லை; தேகம் தெரியாமல் செய்திருக்கிறாய்."

"இவ்வளவு விஷயமும் உனக்குத்தான் சொல்லத் தெரியும்! அந்து, பெண்களான நாங்கள் உன்னிடம் தோற்றுவிட்டோம்."

"பெண்களுக்கு மட்டும் இந்த மாதிரி பேசத் தெரியாதா; வம்பளக்க மட்டுந்தானு தெரியும்? பேச்சைக் கொண்டே பழைய மூட நம்பிக்கைகளை அடியோடு பெயர்த்துச் சூறையாட வேண்டும் என்று என்னுள் ஒரு புயல் குமுறிக்கொண்டு இருந்தது. வெறும் உடல் வன்மையைக் கொண்டு அந்த மூட நம்பிக்கைமீது உங்கள் கீர்த்தி ஸ்தம்பத்தை நாட்ட முயன்றீர்கள்."

"உன் காலில் விழுகிறேன். எனக்குத் தெளிவாக எடுத்துச் சொல். நான் தவறு செய்கிறேன் என்று நீயும் செய்ய வேண்டுமா? பிழைக்கும் வழியைத துறந்து பெருந் துன்பத்தை நீ ஏனே ஏற்றுக்கொண்டாய்?"

"அது என்னுடைய மனப்போக்கில் ஒன்று— 'ஜெஸ்ச்சர்' (Gesture) என்று இங்கிலீஷில் சொல்வார்களே, அதுதான். அதுதான் கடைசிக் காலத்தில் நான் சொல்லும் வார்த்தை. துயரைமட்டும் பொருட்படுத்தா திருக்கும்பக்ஷத்தில் நான் முகம் திரும்பிப் பாராமலே போயிருப்பேன். எனக்கு உன்மேல் எவ்வளவு ஆசை என்பதையும் காட்டிக்கொள்ளாமலே இருந்திருப்பேன். தேசாபிமானம் என்று எண்ணி அதை மறைத்துக் கூறுதே!"

"இதில் தேசம் எங்கே வந்தது நடுவிலே?"

"தேசிய முயற்சியும் நீ செய்யும் முயற்சிகளும் ஒன்றெனக் கொள்வதாலேயே இந்தத் தேசம் என்பது குறுக்கே வருகிறது! வீரியத்தைக் காட்டி ஒரு பெண்ணை அடையக் கூடிய யோக்கியதை ஒரு சமயம் எனக்கு இருந்தது. இன்றோ, மானத்தை வரிக்கும் சுபயோகம் வந்திருக்கிறது. அதை மறந்துவிட்டுக் கேவலம் என் பிழைப்புக்கு வழி இல்லையே என்று நீ வாடிப்போகிறாயே; என் அன்னபூரணி!"

"பெண்களாகிய நாங்கள் சம்சாரத்திலே பித்துக் கொண்டவர்கள். நான் ஒன்று! சொல்லுகிறேன்; அதன்

படி நீ நடக்கவேண்டும். எனக்குப் பிதுரார்ஜிதமான ஒரு வீடும் கொஞ்சம் ரொக்கமும் இருக்கின்றன. உன் பேரில் ஆணை!—அடிக்கடி உன் பேரில் ஆணையிட்டுச் சொல்கிறேன்—நான் சொல்கிறபடி கேள்: சங்கோசப்படாமல் என் பணத்தையெல்லாம் நீ உபயோகித்துக்கொள். உனக்கு எவ்வளவோ பயன்படும் அது."

"அப்படி முடையாக இருந்தால் 'மெட்ரிகுலேஷன்' பரீக்ஷைக்கு 'நோட்ஸ்' எழுதுவதிலிருந்து கூலிவேலை வரை செய்து சம்பாதிக்க வழி இருக்கிறது."

"சரிதான், அந்து. தேசத்திற்காக இந்தப் பணத்தையெல்லாம் செலவழிக்க ஒரு சமயம் எண்ணியிருந்தேன். ஆனால், சம்பாதிக்க எங்களவர்களுக்குச் சந்தர்ப்பம் குறைவாக இருப்பதால் அந்தப் பணத்தைக் கண்ணும் கருத்துமாகச் சேர்த்து வைத்திருந்தேன், பிற்காலத்துக்காக. நாங்கள் பயங்காளிகள் அல்லவா?"

"இது உன் இயற்கைப் புத்தியைக் கொண்டு சொல்லும் யோசனை. வெறுங் கையுடன் இருப்பதால் பெண்களுக்குரிய அழகு குன்றிவிடுகிறது."

"சிறிதாகக் கூடு கட்டி வாழ்கிறோம் நாங்கள். கிடைத்ததை நாங்கள் சேமித்து வைக்கிறோம். அது நாங்கள் பிழைத்திருப்பதற்கு மட்டும் அல்ல; யார்மேல் ஆசை கொள்கிறோமோ அவர்களுக்காகவுந்தான். என் உடைமை முழுவதும் உன்னுடையதே! இதைச் சொன்னால்தான் எனக்கு நிம்மதி ஏற்படும்."

"அதெல்லாம் எனக்கு ஒன்றும் புரியாது. இதுவரையில் ஸேவை புரிவதே பெண்களுடைய கடமையாக இருக்கிறது. புருஷர்களுடைய பொறுப்பு, சம்பாதிப்பது; இது மாறுபடுமானால் நாங்களெல்லாம் தலை இறங்க வேண்டியதுதான். கை நீட்டி உன்னிடம் கூச்சப்படாமல் பிச்சைக்குக் காத்திருந்தவனை ஏமாற்றி ஒரு பெரும் பணயத்தில் சிக்க

வைத்துவிட்டாய். நாராயணீ ஸ்கூலில் நீ கணக்கு வழக்கு களைப் பார்த்துக்கொண்டு இருந்தாயே; அப்போது உன் அருகிலேயே புயலில் அடிபட்ட பறவைபோல் புழுதியில் அழுந்தி விழுந்து கிடப்பேன் நான். மனம் வெம்பி உன் னிடம் வந்திருந்தேன். அப்போது உன்னை எத்தனையோ விதமாக ஸ்துதி பண்ணியும் நீ அசையாமல் இருந்தாய்; என்னை நிமிர்ந்துகூட நோக்கவில்லை. உன்னுடைய தியான மாகவே இருந்தேன். உன் மெல்லிய விரல்களின் அமிர்த ஸ்பரிசம் என் தேகத்திலும் மனத்தினுள்ளும் படாதா என்று ஏங்கியிருந்தேன். உனக்கு அப்போதெல்லாம் பிடிக்க வில்லை. லோபியாக இருந்தாய்; அந்தத் துளி இன்பத்தை யும் தர மறுத்தாயே! உன் மனம் குளிர இன்னும் உயர்ந்த காணிக்கை எதுவோ தெரியவில்லையே என்று என் உள்ளம் அலைந்து தேடி அலைந்தது. கடைசியில், ஒரு நாள் மண்டை கிழிந்து ரத்த வெள்ளத்தில் என் உடல் கீழே சாயும்போது தான் நீ என்னை மடியில் ஏற்றுக்கொள்ளப் போகிறாய்!''

ஏலா கண் கலங்கினாள்; "ஆ! உன்னோடு பேசி ஜயிக்க முடியாது, அந்து. துளியளவாவது கேட்காமலேயே அது உனக்குக் கிட்டவில்லையா? என்னுடைய கணக்குப் புஸ்தகத்தை அப்போதே நீ பிடுங்கி எறிந்திருக்கிறதுதானே! உன் தயக்கத்தைப் பார்த்தே நானும் தயங்கினேன். இது உனக்குத் தெரியுமா? அந்து, உனக்கும் ஒரு விஷயத்தில் பெண்களின் சுபாவமே. ஆசை என்னவோ அதிகமாகத் தான் இருக்கும். ஆனால் அதை வெளிக்குக் காட்டுவது ரஸஹீனம் என்று எண்ணி அடக்கிக்கொள்கிறாய்'' என்றாள்.

"பரம்பரையான குணம் சிறுவயசு முதற்கொண்டே எலும்பிலும் ரத்தத்திலும் ஊறிக் கிடக்கிறது. பெண்களுக்கு மரியாதை கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தினால் அப் படி இருந்தேன். அவர்களுக்குரிய அந்த மரியாதையை எந்த விதத்திலும் சீர்குலையாமல் பாதுகாப்பதே எங்கள் குலத்தவர் வழக்கம். நீ மட்டும் சற்று இளகி எனக்கு இடம் கொடுத்திருக்கும்பக்ஷத்தில் நான் இந்த மாதிரி

பிச்சை கேட்கும் நிலையே ஏற்பட்டிராது. அப்படிக் கேட்கவும் எனக்குத் தெரியாது. பசிக்கோ அளவில்லை. இருந்தாலும் வயிறு வெடிக்க உட்கொள்பவனல்ல நான்; அது என் சுபாவத்திலேயே இல்லை. என்னுடைய மேலான விருப்பத்தை இழக்க என்னுல் ஆகாது."

எலா அதீனருகில் வந்து அவனோடு இழைந்து உட்கார்ந்தாள். அவன் முகத்தைத் தன் மார்போடு அணைத்து அதன்மேல் தன் தலையைச் சாய்த்துக்கொண்டாள். அடிக்கடி அவன் தலைமயிரை விரல்களால் கோதிக் கொடுத்தாள். இவ்வாறு சில கணம் சென்றதும் அதீன் நிமிர்ந்து உட்கார்ந்து, எலாவின் கைகளைப் பற்றி, "அன்று 'மோகாம் காட்' வழியாக நாம் ஸ்டீமரில் போகும்போது பாக்கியலக்ஷ்மி தன் மாயக் கரத்தால் ஆதரவுடன் என்னைத் தடவிக் கொடுத்தது எனக்கு எப்படித் தெரியும்? அதற்கு அப்புறமே என் மனம் நினைவுகளைப் பின்னி விசித்திரமான கோட்டை கட்டிக்கொண்டிருந்தது. அந்த ஸமாசாரமெல்லாம் உனக்குப் பழையதாகப் போய்விட்டதா என்ன?" என்றுன்!

"இல்லவே இல்லை."

"அப்படியானால், கேள்: கனமான பெட்டிகளை எல்லாம் கப்பலின் கீழ்த் தட்டிலிருந்து இறக்கி வண்டியில் கொண்டு வைத்தான் என் வேலையாள் விஹாரி. பக்கத்திலேயே என் சிறிய தோல்பெட்டி இருந்தது. கூலி எவனுவது வருவானு என்று நான் பார்த்துக்கொண்டு இருந்தேன். மிகவும் நல்லவள்போல் நீ அங்கே வந்து, 'கூலியாள் எதற்கு? என்னிடம் கொடுங்கள். ஊ ஹூம், நீங்கள் வேண்டாம்னு' என்று சொல்லிப் பெட்டியைத் தூக்கிக் கொண்டாய். நான் தடுப்பதைப் பார்த்து மறுபடியும், 'அப்படி உங்களுக்குச் சங்கோசமாக இருந்தால் ஒரு காரியம் செய்யுங்கள். அதோ என் பெட்டி இருக்கிறதே, அதை எடுத்துக்கொள்ளுங்கள். சரியாக இருக்கும்' என்றாய்.

நான் அதைத் தூக்கிக்கொள்ள வேண்டியதாயிற்று. அது என் 'ஸூட் கேஸை'விட எட்டு மடங்கு பளுவாக இருந்தது. வலது கைக்கும் இடது கைக்கும் மாற்றிக்கொண்டே தள்ளாடி எப்படியோ ரெயில் வண்டி மூன்றும் வகுப்புவரை எடுத்து வந்துவிட்டேன். வேர்வையினால் என் பட்டுச் சொக்காயெல்லாம் நனைந்துவிட்டது. எனக்கு இரைப்பு வாங்கியது. உன் முகத்தில் குமிழ்ச் சிரிப்பு விளையாடியது. என்மேல் உனக்குப் பரிதாபம் தோன்றி இருக்கலாம்; ஆனால் அதை நீ வேணுமென்றே வெளிக்காட்டவில்லை. அன்று உன் கையாலேயே என்னை ஒரு மனிதனுக்கும் சக்தி படைத்திருந்தாய்."

"சீசீ! அந்த மாதிரி சொல்லாதே! அதைப்பற்றி நினைக்கும்போதே எனக்கு வெட்கமாக இருக்கிறது! அப்போது எந்த மாதிரியோ இருந்தேன். என்ன மடத்தனமெல்லாம் பண்ணினேன்! எல்லாம் விசித்திரமாகவே இருந்தது! நீ அப்போது சிரிப்பை அடக்கிக்கொண் டிருந்ததாலேயே என் அலக்ஷியம் அதிகமாகிவிட்டது! இதையெல்லாம் எப்படி நீ பொறுத்துக்கொண் டிருந்தாயோ? பெண்ணாகப் பிறந்தவள் கொஞ்சம் புத்திசாலித்தனமாக நடந்துகொண் டிருக்கக் கூடாதா?"

"புத்தி இருக்கிறதோ இல்லையோ, அதனால் என்ன வந்தது? அன்று நீ என் எதிரில் அபூர்வமாகத் தோன்றிய ஒரு நிலையைத்தான் 'மயல்' என்கிறார்கள்; அது உயர்தரக் கணிதத்தினாலோ அல்லது நியாய மீமாம்ஸையினாலோ ஏற்படும் ஓர் அநுபவமல்ல. சங்கராசாரியரைப் போன்ற திட விரதர்கள் அத்தகைய மோகத்தை விலக்க 'முத்கர'* (சம்மட்டி)ப் பிரயோகம் செய்தும் அது தளர்ந்து கொடுக்கிற விஷயமா? பொழுது இறங்கிக்கொண்டு வந்தது. ஆகாயத்தில் மாப்பிள்ளைபோல் குஷாலாக இரண்டொரு மேகம் படர்ந்து வந்தது; கங்கை ஜலம் செந்நிறச் சாயல்கொண்டு

---

* சங்கரர் எழுதிய 'மோகமுத்கரம்' என்ற நூல்.

துளும்பியது. உன்னுடைய ஒல்லியான உருவம் அந்தச் செவ்வொளிமுன் வேகமாகச் செல்லும் சித்திரம் என் மனத்தில் நிலைத்துவிட்டது. அதற்கு அப்புறம் நடந்ததென்ன? உன் குரலை என் அந்தரங்கத்துள் கேட்டேன். ஆனால் இன்று எந்த நிலைக்கு வந்திருக்கிறேன்!—உன்னை விட்டு வெகு தூரம்! உனக்கு எல்லாம் தெரியுமோ இல்லையோ?"

"எனக்கு விவரமாகத்தான் சொல்லேலன், அந்து."

"நான் சொல்லக்கூடாதே;—அதுமட்டும் அல்ல. சொல்லித்தான் என்ன ஆகப்போகிறது? — வெளிச்சம் குறைந்துகொண்டு வருகிறது! இன்னும் கிட்ட வா! என் கண் இரண்டும் சற்று நேரம் உன்னிடத்திலேயே பதிந்து நிற்க விரும்புகின்றன. அமைதியை உன்னிடத்தில்தான் நான் பெற முடியும். என் கண்ணே அளவில் சிறியது; அதன் வரம்பினுள் உன் அழகிய உருவத்தை என்றென்றும் நிறுத்திக்கொள்ள என்னால் முடியவில்லையே?—உன் குழற் கற்றை இரண்டொன்று என் கண்ணின்மேல் வந்து படிந்திருக்கிறது! அதை நீ விரைவாக ஒதுக்கிக்கொள்ளுகிறாய். கறுப்புக் கரை போட்ட 'தஸ்லர்'ச் சேலை உடுத்திருக்கிறாய். தோளில் 'புரூச்' போட்டுச் செருகிக்கொள்ளாமல் இருக்கிறாய். தலைப்பை ஊசி போட்டு மாட்டியிருக்கிறாய்! கண்களில் ஓர் அலுப்புத்'தோன்றுகிறது. உன் செவ்விதழ்களின் விளிம்பில் பனிலைக் காண்கிறேன். நாலு பக்கமும் பகல் ஒளி கடைசி மங்குவில் ஆவ்கிறது. நான் காண்பது ஓர் அற்புதமான உண்மை! இது எதைக் குறிக்கிறது? பிறருக்கு இதை எடுத்து வர்ணிக்க என்னால் ஆகாது. இணையற்ற ஒரு புலவனது கற்பனையிலும் சிக்காத ஓர் அதிசயம் இது. சொல்லுக்கு அடங்காத இந்த இனிமையில் ஒரு பெருஞ் சோர்வும் அடங்கி யிருக்கிறது. அற்பமாக இருந்தாலும், நிறைவான இந்த அநுபவத்தைக் காணப் பெறுமல் பல விகாரங்கள் நிழல்போல் வந்து கவிந்துகொள்கின்றன."

"நீ சொல்வது என்ன? அந்து!"

"உலகத்திலேயே எல்லாம் பொய்யாகவே தெரிகிறது! 'கூலிகள் இருக்கும் இடத்தில் போய் இரு' என்று நீ எனக்குச் சொன்னது கவனம் வருகிறது. என் குலச்செருக்கை அழிக்கும் எண்ணம் உன் மனசில் இருந்தது. அந்தப் பெரிய முயற்சியில் எனக்கும் உத்ஸாகம் பிறந்தது. ஏழை மக்களோடு கலந்து சாப்பிடலானேன். வண்டிக்காரர் வசிக்கும் இடங்களில் சுற்றுவேன்; 'அண்ணாத்தே, மாமா!' என்று முறை கொண்டாடி எருமை மேய்க்கும் இடையர்கள் வீட்டில் பழகிவந்தேன். நான் கொண்டாடும் இந்த உறவெல்லாம் அதிக நாள் நீடிக்காது என்று அவர்கள் தெரிந்து கொள்ளாமல் இல்லை. எதைத் தொட்டாலும் இசையை எழுப்பக் கூடிய மகான்கள் உலகில் இராமற் போகவில்லை. பஞ்சடிக்கும் வில்லில்கூட இசையை எழுப்பும் சக்தி படைத்தவர்கள் அவர்கள்! நாம் அவர்களைப்போல் நடிக்தால்கூட அந்தச் சுருதி கூடி வருவதில்லை. உங்களுடைய பேட்டையில் கிறிஸ்துவ பக்தர்களை நீ பார்த்ததில்லையா? யாரைப் பார்த்தாலும் கட்டி யணைத்துக்கொண்டு 'பிரதர்' (சகோதரா) என்று அழைப்பது அவர்கள் அநுஷ்டானங்களில் ஒன்று. கிறிஸ்துவை ஏளனம் செய்வதுபோலவே இருக்கிறது இது."

"உனக்கு என்ன, அந்து? ஏதாவது கோபத்தால் இப்படி எல்லாம் பேசுகிறாயா? பிடிக்காதிருந்தாலும் கடமையைக் கடமையென்று ஒப்புக்கொள்ள முடியாது என்கிறாயா என்ன?"

"பிடிக்கவில்லை என்று நான் சொல்லவில்லை, எலி! சுபாவத்தைத்தான் நான் இங்கே குறிக்கிறேன். அர்ஜுனனுக்குப் பிடிக்காதிருந்தாலும் ஸ்ரீ கிருஷ்ணர் அந்த விறல் வேந்தனுக்குரிய கடமையைத்தான் செய்யச் சொன்னார். விவசாய அபிவிருத்தியைப் (Agricultural economics) பரீக்ஷை செய்வதற்தாகக் குருக்ஷேத்திரத்தை உழுது பயிராக்கச் சொல்லவில்லையே!"

"கிருஷ்ணர் உன் ஸ்தானத்தில் இருந்தால் என்ன சொல்லியிருப்பார், அந்து?"

"வெகு நாளுக்கு முன்னாலேயே என் காதோடு சொல்லியிருக்கிறார். என் காதில் ஓதிய அந்த விஷயங்களை வாயால் சொல்லும் பொறுப்பை என்னிடம் விட்டுவிட்டார். 'எல்லாருக்கும் ஒரே விதக் கடமைதான்' என்று நம் வாத்தியார் 'காதைத் திருகி'ச் சொன்னதே இவ்வளவு விஷமத்துக்குக் கொண்டுவந்துவிட்டது. இதோ உன் முகத்துக்கு நேரே சொல்லுகிறேன்: சற்றும் வணங்காதவர்களிடத்தில் விளைந்து போவது உங்களைப் போன்றவர்களாலும் முடியாது; தேவி! — நீங்களெல்லாரும் தேவ்கள்! — தெய்வம்போல வேஷம் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள்!—அதுவும் புருஷன் சிருஷ்டித்த உடையில் காட்சியளிக்கிறீர்கள்!—"

"இதோ பார்; அந்து! உனக்கு அந்த வழி பிடிக்காமற் போனால் நீ தைரியமாக அதை விட்டு விலகிப் போய்விடுவது தானே? எனக்குப் புரியவே இல்லை, உன் போக்கு!"

"ஆனால் சொல்கிறேன், கேள்: இந்த மார்க்கத்தில் நான் இறங்குவதற்கு முன் எவ்வளவோ விஷயங்கள் எனக்குத் தெரியாமல் இருந்தன. யோசனை எதுவுமே செய்து பார்க்கவில்லை. எத்தனையோ அபூர்வமான பிள்ளைகளோடு பழகியிருக்கிறேன். அவர்கள் வயசில் சின்னவர்களாக இராதிருந்தால் அவர்கள் பாததூளியைக்கூடக் கண்ணில் ஒற்றிக்கொண் டிருப்பேன். அப்பேர்ப்பட்ட மணியான பையன்கள்! அவர்கள் என்ன என்ன பார்த்தார்களோ, தம் கண்களால்! என்ன என்ன கொடூரங்களைச் சகித்துக்கொண் டிருந்தார்களோ? எந்த மாதிரி அவமானங்களுக்கு உள்ளானார்களோ? அந்த அநியாயம் எல்லாம் வெளியே வராது. அந்த வேதனையே என்னை வெறியன் ஆக்கிவிட்டது. 'எதற்கும் பயப்படக்கூடாது. எந்தமாதிரி ஹிம்ஸைக்கும் சளைக்கக் கூடாது. கற்சுவரில் மண்டையை மோதிக்கொண்டு இறந்தாலும் இறப்பேன். ஈவு இரக்கமற்ற அந்தச்

சுவருக்கு எதிரிடையாக நின்று வீர முழக்கம் செய்வேன்!' என்று பிரதிக்ஞை செய்து கொண்டேன்."

"அப்புறம் உன் கொள்கை மாறியிருக்கும் என்று எண்ணுகிறேன்."

"நான் சொல்கிறேன், கேள்: பலசாலியின் எதிரே நின்று போர் தொடுப்பவனுக்கு வேறு எந்த விதத் துணையும் இராமற் போனாலும் அவனுக்குச் சரி சமமாக நிற்பதே அரிய செயல் அல்லவா? அதனால் அவன் கௌரவம் ஓங்குகிறது! அத்தகைய கௌரவத்தை நான் அடைய எண்ணியிருந்தேன்; நாட்கள் செல்லச் செல்ல, அசாதாரணமான புத்தி தீக்ஷண்யம் உடைய பிள்ளைகள் கொஞ்சம் கொஞ்சமாக ஆண்மையை இழந்து போனதை என் கண்முன் கண்டேன். இதைவிடப் பெரிய நஷ்டம் ஒன்று உண்டா? 'என் பேச்சை அவர்கள் காற்றில் ஊதிவிடுவார்கள். கோபங்கொண்டு என்னை ஏளனம் செய்வார்கள், என்பதை அறிவேன். ஆனாலும் நான் அவர்களுக்குச் சொல்லாமல் விடவில்லை. நாம் செய்யும் அநியாயங்கள், அட்டூழியம் செய்பவனுக்குச் சமமாக ஆகிவிடுவதாலேயே தோல்வி ஏற்படுகிறது. தோல்வியுறுவதற்குமுன் - நாம் சாவதற்குமுன் - அவர்களைவிட மனிதத் தன்மையில் உயர்ந்தவர்கள் என்பதைக் காட்டவேண்டாமா? - பின் தோல்வியுறும் இந்த விளையாட்டை அவ்வளவு பலவானுடன் ஏன் ஆடப் போகிறோம்? — மடத்தனமாக ஆத்மஹத்தி செய்து கொள்வதற்காகவா?—என் வார்த்தை அவர்களுக்குப் புரியாமல் இல்லை. ஆனால் அவர்கள் எத்தனை பேர்! —வெகு சிலரே!"

"ஆனால் அவர்களை ஏன் இன்னும் விடாமல் இருக்கிறாய்?"

"இனிமேல் எப்படி விடுவது, அதுவும் அவர்கள் செய்த வினையின் கொடிய பாசம் அவர்களை நாலு பக்கமும் சூழ்ந்திருக்கும்போது? ஒவ்வொருவருடைய வாழ்க்கையை

யும் கவனித்தேன். எவ்வளவோ வேதனைக்கு உள்ளாகி யிருக்கிறார்கள். அவர்கள் என்னைக் கோபித்துக்கொண் டாலும் சரிதான்; வெறுத்தாலும் சரிதான்; ஆபத்தில் சிக்கியவர்களை என்னால் விடமுடியாது. ஆனால், இதிலிருந்து ஒரு பெரிய உண்மையைக் கண்டுகொண்டேன். தேக வலிமையில் எவர்களுக்கு நாம் குறைந்து நிற்கிறோமோ அவர்களிடத்தில் நம் கை வரிசைகளைக் காட்டினால் நாம் வீழ்ச்சி அடைவது திண்ணம்; வியாதி என்னவோ எந்தச் சரீரத்தையும் துன்புறுத்தும்; ஆனால் அது பலஹீனமான உடலை அடியோடு மாய்த்தே தீரும். தோள்வலிமை உள்ள வர்கள் மனிதத் தன்மைக்கு ஹானி விளைவித்துக் கொஞ்ச நாள்வரைதான் ஜயபேரிகை கொட்ட முடியும்; ஆனால் அது நம்மால் முடியாது. தலை முதல் கால்வரையில் களங்கத்திற்கு ஆளாகி அபகீர்த்தியால் நிர்மூலமாகிவிடு வோம்.''

"கொஞ்ச நாளாக இந்தக் கோரச் செயலின் ஓர் உருவம் என் கண்முன் வந்து தெளிவாக நிற்கிறது, அந்து. கௌரவம் தூண்ட, இந்தக் காரியத்தில் தலை கொடுத்தேன். இந்த லஜ்ஜையே நாளுக்கு நாள் அதிகமாகிறது. இப்போது நாம் என்ன செய்யலாம், சொல்லேன்?''

"ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவனுக்குரிய சொந்த தர்மம் என்று ஒன்று இருக்கிறது. அவனுக் கேற்ற சொந்த தர்மயுத்தமும் இருக்கிறது. அங்கே, 'மிருதோ வாபி தேன லோகத்ரயம் ஜிதம்' (மரிப்பினும் மூவுலகையும் வென்றவன் ஆவான்.) ஆனால் நம்முள் எத்தனையோ பேருக்கு இந்த வழி அடைத்திருக்கிறது. இங்கே செய்த வினையின் பயனை இங்கேயே அநுபவித்துவிட்டுப் போக வேண்டியிருக்கிறது.''

"எல்லாம் எனக்குப் புரிகிறது, இருந்தாலும், அந்து, கொஞ்ச காலமாக நம் தேசத்திற்குச் செய்யும் காரியத்தைக்

குறித்து நீ இவ்வாறு இகழ்ந்து கூறுவதுதான் என்னை மிக வும் வருத்துகிறது."

"அதற்குக் காரணம் என்னவென்று சொல்லாமலே இருந்துவிடுவேன்; நாழிகை ஆகிறதே என்று பார்க்கிறேன்."

"பரவாயில்லை; நீ சொல்லித்தான் ஆகவேண்டும்."

"இனி உன்னிடத்தில் இதை ஒப்புக்கொள்வதற்கு என்ன? 'பேட்ரியாட்' (தேசாபிமானி) என்று யாரை நீங்கள் குறிக்கிறீர்களோ, அத்தகைய தேசாபிமானி அல்ல நான். 'பேட்ரியாடிஸ' (தேசாபிமான)த்தைக் காட்டிலும் எது உயர்வானதோ அதை அவ்விதம் கருதாதவர்கள் கொண் டாடும் 'பேட்ரியாடிஸம்' (தேசாபிமானம்) 'முதலை முதுகில் ஏறி நதியைக் கடப்பதுபோன்ற கதைதான்! பொய்யான நடவடிக்கை, நீச மனப்பான்மை, பரஸ்பர அவநம்பிக்கை, அதிகாரத்தைப் பெறச் சூழ்ச்சி, காட்டிக்கொடுக்கும் ஈனத் தன்மை, இவையெல்லாம் என்றைக்கோ ஒரு நாள் அவர்களை உளையில் கொண்டுதான் தள்ளும். இது எனக்கு நன்ருக விளங்குகிறது உள்ளே ஓர் ஊழலான உலகம் தென்படு கிறது. அங்கே இரவும் பகலும் பொய் என்னும் விஷவாயு மனிதனுடைய உயர்ந்த சுபாவத்தையே கெடுத்து விடுகிறது. இந்த உலகத்துக்கு நன்மை செய்ய எவ்வளவு பெரிய இயக் கத்தில் ஈடுபட்டாலும் அந்தச் சுற்றத்தில் பௌருஷத்தைக் காப்பது மிகவும் கடினம்."

"சரி, அந்து. இந்த ஊழல் நம் தேசத்தில் மட்டுந் தானு?"

"அப்படிச் சொல்லவில்லை நான். தேசத்தின் அந்தராத் மாவைக் கொன்று தேசத்தை உயிர்ப்பிக்க முடியும் என்று ஒரு பொய்ப் பிரசாரத்தை உலகத்தில் எல்லா 'நேஷனலிஸ்டு' (தேசீயவாதி)களும் இப்போது மிருகத்தனமாகக் கோஷம் செய்கிருர்களே! அதை எதிர்க்கவேண்டும் என்று ஓர் உணர்ச்சி என்னுள் குமுறி எழுகிறது. இதை நான்

உடைத்துக் கூறவும் முடியும். சுரங்கத்தினுள் புகுந்து தன்னை மறைந்து கொண்டு தேச உத்தாரணத்திற்கு முயல்வதைவிட நான் சொல்லும் மார்க்கமே என்றென்றும் உன்னதமாக விளங்கும். ஆனால் அது இந்த ஜன்மத்தில் அல்ல; அதனால்தான் இந்த வேதனை இவ்வளவு தீவிரமாகிவிட்டது."

எலா பெருமூச்செறிந்து, "திரும்பி வந்து விட்டேன், அந்து!" என்றாள்.

"இனிமேல் திரும்புவதற்கு வழி இல்லை."

"ஏன் இல்லை?"

"தவறான இடத்தில் வந்து சிக்கிக்கொண்டால் அதன் பொறுப்பு நம்மைக் கடைசிவரையில் விடாது."

எலா அதீனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு, "திரும்பி வந்து விட்டேன், அந்து! இத்தனை வருஷகாலம் எதை நம்பி ஒரு கூடு கட்டினேனோ அதை நீ சிதைத்துவிட்டிருாய். கழுவிப்போகும் ஓர் ஓட்டைப் படகைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன்; என்னையும் மீட்டுக்கொண்டு போ!—இந்த மாதிரி நீ ஏன் மௌனமாக இருக்கிறாய்?—அந்து, ஏதாவது சொல்லேன்! இப்போதே உத்தரவிடு. நான என் விரதத்தைப் பங்கம் செய்கிறேன்—நான் தவறு செய்துவிட்டேன். மன்னித்துவிடு!" என்றாள்.

"வழி இல்லையே!"

"வழி இல்லாமல் போவானேன்? நிச்சயமாக இருக்கிறது."

"இலக்குத் தவறிய அம்பு, திரும்பி எங்காவது தூணியை வந்து அடையுமா?"

"நானே வலுவில் வந்து உன்னை வரிக்கிறேன். என்னை விவாகம் பண்ணிக்கொள், அந்து. இனிமேல் கால தாமதம்

கூடாது. காந்தர்வ விவாகம் செய்துகொள். துணையாக என்னை உன் வழியே அழைத்துச் செல்."

"ஆபத்தான இடமாய் இருந்தால் கூடவே அழைத்துச் சென்றிருப்பேன். ஆனால் தர்மம் குலைந்த இடத்தில் உன்னை ஸஹதர்மிணியாகக் கொள்வது எப்படி? அதெல்லாம் இருக்கட்டும். இந்த வாழ்க்கை அடியோடு கவிழ்ந்து மறையுமுன் கடைசியாக ஓர் உண்மையை அறிய வேண்டியிருக்கிறது; அதை உன் வாயாலேயே சொல்லி ஆகவேண்டும்."

"என்ன சொல்வது?"

"என்மேல் உனக்குக் காதல்தானே?"

"ஆமாம். உன்மேல் காதல்தான் கொண்டிருக்கிறேன்."

"நான் மறைந்த பிறகுகூட இந்த உறுதி இருக்குமா, சொல்லு?"

ஏலா இதற்கு என்ன பதில் சொல்வதென்று தோன்றாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். இரண்டு கண்களிலிருந்தும் நீர் வடிந்துகொண் டிருந்தது. வெகுநேரம் கழித்து அடைபட்ட குரலில், "இதோ மறுபடியும் சொல்கிறேன், அந்து. என் கையிலிருந்து நீ ஏதாவது வாங்கிக் கொள்ள வேண்டும். என் கழுத்துச் சங்கிலியை எடுத்துக் கொள்ளேன்" என்றதும் அவன் காலின்மேல் சங்கிலியை வைத்தாள்.

"எனக்கு வேண்டாம்."

"என்மேல் ஏன் இவ்வளவு கோபம்?"

"ஆமாம்; கோபந்தான். அதை நீ கொடுத்து நான் கழுத்தில் அணிந்துகொண் டிருக்கும் நாள் என்றோ போய் விட்டது. இப்பொழுது என் 'பாக்கெட்' (சில்லறைச்) செலவுக்குத்தான் அதைத் தருகிறாய். என் வயிற்றுப்

பசியை ஆற்றிக்கொள்ளத்தான் அது உதவும். உன்னிடத்தில் நான் பிச்சை வாங்கமாட்டேன்!"

எலா அதீனுடைய காலடியில் குப்புற விழுந்து, "என்னை ஏற்றுக்கொள்" என்ருள்.

"சபலம் மூட்டாதே எனக்கு, எலா! நான் செல்லும் வழி உன் வழி அல்ல."

"எப்போது என் வழி அல்ல என்கிருயோ அது உன் வழியும் அல்ல—திரும்பிவிடு! திரும்பி வந்து விடு?"

"எனக்காக வழி இல்லை. வழிக்காகத்தான் நான் இருக்கிறேன். கழுத்து உரிலைக் கழுத்துக்கு அணி என்று யாராவது சொல்வார்களா?"

"அந்து, நிஜமாகச் சொல்கிறேன்; தெரிந்துகொள். நீ போனதும் நான் ஒரு கணமும் உயிர் தரித்திருக்கமாட்டேன். உன்னைத் தவிர வேறு யாருமே எனக்கு இல்லை. இந்த வார்த்தையில் உனக்குச் சந்தேகம் இருக்குமானல் நான் இறந்த பிறகாவது அந்தச் சந்தேகம் தெளிய ஏதாவது மார்க்கம் ஏற்படாமற் போகாது."

அதீன் திடீரெனக் குதித்தெழுந்தான். அம்புபோல் ஒய்யென விளையின் ஒலி தொலைவில் கேட்டது. அதீன் திடுக்கிட்டு, "போகிறேன்" என்ருன்.

எலா அவனை இறுக அணைத்து, "இன்னும் சற்று இரேன்" என்ருள்.

"முடியாது."

"எங்கே போகிருய்?"

"எனக்கு என்ன தெரியும்?"

எலா அதீனுடைய கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "நான் உன் அடியாள். உனக்குத் தொண்டு செய்யும் அடிமை! என்னைத் தள்ளிவிட்டுப் போகாதே" என்றாள்.

கணநேரம் மலைத்து நின்றான் அதீன், இரண்டாவது தரம் வீணையின் ஒலி கேட்டது. அதீன் உறுமி, "என்னை விடு!" என்றதும் தன்னை விடுவித்துக்கொண்டு வெளியே போய்விட்டான்.

அப்போது இருள் மெல்லக் கவிந்துகொண்டு வந்தது.

எலா தரைமீது குப்புற விழுந்து கிடந்தாள். அவள் உள்ளம் சூன்யமாக இருந்தது. கண்ணில் நீர் வற்றி விட்டது.

அப்போது ஒரு கம்பீரமான குரல் எழுந்தது:

"எலா!"

எலா விதிர்த்து எழுந்தாள். 'எலெக்ட்ரிக் டார்ச்'சுடன் இந்திரநாதர் நிற்பதைக் கண்டாள். சரேலென எழுந்து, "என் அந்துவைத் திரும்பி வரச் சொல்லுங்கள்!" என்றாள்.

"அது கிடக்கட்டும்; இங்கே ஏன் நீ வந்தாய்?"

"இங்கே ஆபத்து இருக்கிறது என்று அறிந்தே வந்தேன்."

கடுமையான குரலில் இந்திரநாதர், "உன் ஆபத்தைப் பற்றி யாரும் சிந்திக்கவில்லை. இந்த இடம் உனக்கு எப்படித் தெரிந்தது? எவன் சொன்னான் உனக்கு?" என்றார்.

"வடு."

"அவன் எண்ணம் என்ன என்று உனக்குத் தெரியாதா?"

"அவ்வளவு புத்தி எனக்கு ஏது? என் மனம் அலை பாய்ந்தது. அதனால்தான் வந்தேன்."

"உன்னைக் கொல்ல முடிந்தால் இப்போதே கொன்று விடுவேன்! திரும்பிப்போ, உன் இடத்துக்கு! வெளியே 'டாக்ஸி' வந்திருக்கிறது."

நாலாம் அத்தியாயம்

"அகிலனுடா! போர்டிங் ஸ்கூலிலிருந்து ஓடி வந்து விட்டாயா என்ன? உன்னோடு என்னால் பாடு பட முடியாதடா. அப்பா! இந்த வீட்டுப் பக்கமே வரவேண் டாம் என்று எத்தனை தரம் சொன்னேன்! செத்துப் போக வேண்டும் என்று ஆசையா?"

அகிலன் இதற்குப் பதில் சொல்லாமல் குரலைத் தாழ்த்திக்கொண்டு, "யாரோ ஒருவன் தாடி வைத்துக் கொண்டிருக்கிறான்; அவன் மெல்லப் பின்னால் வேலியைத் தாண்டித் தோட்டத்திலே நுழைந்தான். அதனால்தான் நான் உள்ளே வந்து கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டு விட்டேன். அதோ கேட்கிறது பார், அவன் வருகிற ஓசை" என்றதும் தன் பேனாக் கத்தியைப் பிரித்துக் கொண்டு நின்றான்.

"எலா, "அடே, என் வீரசிகாமணி! கத்தியை எதற்காகடா பிரிக்கிறாய்? இப்படிக் கொடு" என்றான்.

அவன் கையிலிருந்து கத்தியை மெல்ல வாங்கி விட்டான்.

படிக்கட்டிலிருந்து ஒரு குரல் கேட்டது:

"பயமில்லை. நான்தான் - அந்து."

நொடிப்பொழுதில் எலாவின் முகம் வெளுத்து விட்டது: "சீக்கிரம் கதவைத் திறடா" என்றாள்.

கதவைத் திறந்ததும் அகிலன், "அந்தத் தாடிக்காரன் எங்கே?" என்று கேட்டான்.

"தோட்டத்திலே போய்த் தேடினால் அகப்படும் அந்தத் தாடி. மீதி மனுஷ்யன் இதோ வந்திருக்கிறேனே! போ! தாடியைப் போய்த் தேடு!" என்றான் அதீன்.

அகிலன் சென்றான். எலா சிலைபோல் சற்றுநேரம் ஒரே நிலையாக அவனைப் பார்த்துக்கொண் டிருந்தாள்.

"அந்து! இதென்ன! இப்படி இளைத்து விட்டாயே!"

"கண்ணுக்கு அழகாயில்லை; அதுதானே?"

"என்ன உனக்கு? நிஜமாகச் சொல்லு."

"எனக்கு என்ன!"

"உன்னை ஏதோ கொடிய வியாதி பிடிக்கிறாற் போல் இருக்கிறதே!"

"ஒவ்வொரு டாக்டரும் ஒவ்வொரு விதமாகச் சொல்கிறான். எதை நம்புவது?"

"உன்னைப் பார்த்தால் சாப்பிடவே இல்லை போல் தோன்றுகிறதே!"

"அது கிடக்கட்டும்; நாழிகையாக்காதே!"

"எதற்காக வந்தாய் நீ, அந்து? உன்னை அவர்கள் பிடிக்கக் காத்துக்கொண் டிருக்கிறார்களே!"

"பாவம், அவர்களை ஏமாற்ற எனக்கு இஷ்டம் இல்லை."

அதீனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, எலா, "இந்த ஆபத்தில் சிக்கிக்கொள்ள நீ ஏனோ வந்தாய்? இப்போது என்ன செய்வது?" என்றாள்.

"ஏன் வந்தேன் என்பதைப் போவதற்கு முன் சொல்லிவிட்டுப் போகிறேன். அதுவரை இதைப் பற்றி நீ ஸ்மரிக்கவே வேண்டாம். கீழே கதவையெல்லாம் நன்றாகச் சாத்திவிட்டு வருகிறேன்."

போய்ச் சிறிது நேரம் கழித்து அவன் திரும்பி மேலே வந்து, "மொட்டை மாடிக்குப் போகலாம் வா. கீழே விளக்குப் 'பல்பு'களையெல்லாம் கழற்றி விட்டேன்; பயமில்லை" என்றான்.

இரண்டு பேரும் மொட்டை மாடியை அடைந்து கதவை மூடிக்கொண்டார்கள். கதவின்மேல் சாய்ந்த வண்ணம் அதீன் உட்கார்ந்தான்; அவன் எதிரே எலா.

"எலா, ஒன்றுமே நேராதது போல் மனசைச் சகஜமாக வைத்துக்கொள். லங்கா காண்டம் ஆரம்பமாகு முன் சுந்தர காண்டத்தில் நாம் இருவரும் இருப்பதாக எண்ணிக்கொள். ஏன் இப்படி 'ஐஸ்' மாதிரி சில்லிட்டிருக்கிறது உன் கை? ஏன் நடுங்குகிறது? வா, சூடேற்றுகிறேன்!"

எலாவின் இரு கைகளையும் அவன் தன் சொக்காயினுள் மார்பினிடையே அழுத்திக் கொண்டான். அப்போது தொலைவில் எங்கோ ஒரு கலியாண வீட்டில் மேளச்சப்தம் கேட்டது.

"பயமாக இருக்கிறதா என்ன? எலி!"

"என்ன பயம்?"

"எல்லாவற்றுக்குந்தான்; அடுத்த நிமிஷம் என்ன நேருமோ என்றுதான்."

"உனக்காகத்தான் பயப்படுகிறேன். வேறு எதற்கும் அல்ல."

"எலீ! நூறு அல்லது ஐம்பது வருஷங்களுக்குப் பிறகு இதே மாதிரி ஒரு சந்தடியற்ற இரவில் நாம் இருப்பதாக நினைத்துக்கொள். நம் தலைமேல் விழக் காத்திருக்கும் பயங்கரத்துக்கு வரவு செலவு இல்லை. பயம், துக்கம், கஷ்டம் எல்லாம் ஒரு பெரிய அபிநயப் புரட்டே! இப்போது இந்தத் துச்சமான விஷயம் விகார முக மூடி பூண்டு காலச் சுழலில் அல்லற்படும் குழந்தைகள் என்று எண்ணி நம்மைப் பார்த்து இளிக்கின்றது. அந்த மறலியின் முக மூடியைக் களைந்து பார்: அது உன்னை எதிர்க்காது. இந்த ஏமாற்றம் நான் பெற விரும்பிய ஒன்றை அதிக மதிப்புள்ள தாக்கிவிட்டது. நான் இழந்த ஒன்றைக் குறித்து எல்லை இல்லாத துயரில் என்னை ஆழ்த்திவிட்டது! எல்லாம் பொய்! வாழ்க்கையே கபடம் நிரம்பியது! அது உண்மையின் எழுத்துப்போல் கள்ளத்தனமாக வரைகிறது. எமன் அதைக் கண்டு நகைக்கிறான். அதன் பத்திரம் அவனிடம் செல்லாமல் போய்விடுகிறது. அந்தச் சிரிப்பு, கொடுமை யின் சிரிப்பன்று; கேலிச் சிரிப்பன்று; சிவனுடையது போல் அழகும் அமைதியும் கொண்ட முறுவல்; மோகாந்த காரத்தின் முடிவில் காணும் நகை! எலீ, இரவில் தனிமை யாக உட்கார்ந்து எப்போதாவது நீ மரணத்தின் மூலம் விடுதலை பெறுவதைக் குறித்து யோசித்தது உண்டா? அதுவே நாம் செய்த பாவத்தையெல்லாம் பொறுத் தருளும்."

"உன்னைப் போல எதையும் பரந்த நோக்கத்துடன் பார்க்கும் சக்தி எனக்கு இல்லை. ஆனால் உன் வார்த்தை யைக் கேட்கக் கேட்க என் மனத்தில் உத்வேகம் மூள்கிறது. நீ சொல்வதைப் போல் இறப்பதில் சிரமமே இல்லை என்று படுகிறது எனக்கு. அதுவே விடுதலைக்குச் சுலபமான வழி."

"பயங்கொள்ளி! ஓடி ஒளிந்துகொள்ள வழியென்று எண்ணுகிறாய் மரணத்தை! எல்லாவற்றையும் விட

மரணமே திண்ணமானது. வாழ்க்கையின் ஓட்டமெல்லாம் கடைசியாக வந்தடையும் மகா சமுத்திரம் அது. மெய், பொய், நன்மை, தீமை எல்லாம் அதனுள்ளே ஒன்றாகக் குழம்பி விடுகின்றன. அத்தகைய மரணமே இன்றிரவு, இப்போதே, நம் இருவரையும் தன் அகன்ற கரத்தினுள் அணைக்க வருகிறது. [1]இப்ஸெனின் வாக்கியம் ஒன்று என் கவனத்துக்கு வருகிறது:

> [2]Upwards,
> Towards the peaks,
> Towards the stars,
> Towards the vast silence"

ஏலா அதீனுடைய கையைத் தன் மடியில் வைத்துக் கொண்டு மௌனமாக வீற்றிருந்தாள். திடீரென அதீன் சிரித்தான்.

"பின்னால், மரணத்தின் இருண்ட திரை மெல்ல விழுந்துகொண் டிருக்கிறது. அதன் முன் நாம் இருவரும் ஒரு நாடகத்தின் கடைசி அங்கத்தில் தோன்றி மறைகி றோம். அதன் காட்சி ஒன்றை இன்று உன்னுள்ளே ஒரு தரம் பார்த்துக்கொள்: இதே மாடியில் மூன்று வருஷங்களுக்கு முன் என் பிறந்த நாளை நீ கொண்டாட வில்லையா?"

"கவனம் இருக்கிறது."

"உன் பக்தர்களான அந்தச் சிறுவர்கள் அப்போது வந்திருந்தார்களே! ஒன்றும் தடபுடலான சாப்பாடு

---

1 பிரபல நார்வீஜியக் கவி.

2 "மேலே,

மலை முடிக்கும் மேலே,
தாரா கணங்களுக்கும் மேலே,
பரந்த மௌனத்திற்கும் மேலே."

இல்லை. சுண்டலும் அவல்பொரி கொள்ளுந்தான். வேகவைத்த முட்டைகூட இருந்ததாக எனக்கு ஞாபகம். நாங்களெல்லாரும் 'உனக்கு, எனக்கு என்று கத்திக் கொண்டே தின்றோம். அப்போது திடீரென்று மதிலால் எழுந்து, கையையும் காலையும் ஆட்டி, 'இன்று, இந்த நவ யுகத்தில் அதீன் பாபுவின் புதிய பிறந்த நாளே' என்று ஆரம் பித்தான். நான் குதித்தெழுந்து அவன் வாயைப் பொத்தி, 'இனிப் பேசினாயோ இங்கேயே சமாப்தி பண்ணிவிடுவேன்' என்றேன். அப்போது வடு குறுக்கிட்டு, 'வேண்டாம், வேண்டாம்! அதீன்பாபு, முளையிலேயே நசுக்கி விடுகிறீர் களே!' என்றான். இப்படி 'நவயுகம், மறுமலர்ச்சி, மரண வாயில் போன்ற பதங்களைக் கேட்டாலே எனக்குப் பிடிக்கிற தில்லை. பாவம், அந்தப் பையன்கள் என் மனசிலும் அந்தச் சாயத்தை ஏற்றப் பார்த்தார்கள். ஆனால் அது ஏறவில்லை."

"அந்து, நான் மூடம். உன்னை அந்தப் படையில் ஒன்றாகச் சேர்க்கப் பார்த்தது மடத்தனந்தான்."

"என்னைப்பற்றி அவர்களிடத்தில் எல்லாம் புகழ்ந்து கூறி அக்காவைப்போல் பெருந்தன்மையாக நடந்துகொண் டாயே! என்னைச் சீர்திருத்துவதற்காகச் சற்றுப் பொறுமை மூட்டவேண்டும் என்பதுதானே உன் எண்ணம்? அன்பு, ஆதரவு, க்ஷேமாலாபம், நல்லுபதேசங்கள், காரணம் இன்றி வரும் ஆர்வம் போன்ற சரக்குகளைப் பல வர்ணங்களில் அவர்கள் கண்முன் காட்டி மயக்கினாய்! 'நந்தகுமாரா' உன் கண்ணும் மூஞ்சியும் ஏன் சிவந்திருக்கின்றன?' என்று நீ கருணையுடன் நந்தனை விசாரித்தது இன்னும் என் காதில் ஒலிக்கிறது. பாவம், அவன தயங்கிக்கொண்டே, 'தலைவலி' என்றதுமே ஈரத் துண்டைக் கொண்டுவந்து அவன் நெற்றியில் வைத்தாய். நான் இதையெல்லாம் பார்த்து மகிழ்வேன். பாரத தேசத்தின் மேலுள்ள பக்தி அல்லவா உன்னை அவர்கள் மீது ஆதரவு காட்டத் தூண்டி யது? சுதேசத்தின் பொருட்டு உண்மையான சகோதர வாஞ்சை அல்லவா இது!"

"அதோடு நிறுத்திவிடு; அந்து; நிறுத்தி விடு!"

"அப்போது உன்னிடத்தில் அநாவசிய ஆடம்பரங்களெல்லாம் இருந்தன. சிரிப்புக்கு இடமான சொங்கெல்லாம் பண்ணிக்கொள்வாய்! இல்லை என்று சொல்ல முடியுமா?"

"ஆமாம்; இருந்தது, இருந்தது! நூறு தடவை வேண்டுமானாலும் சொல்கிறேன். நீதான் வந்து அதை ஒழித்துவிட்டாய். இன்றைக்கு ஏன் இப்படிக் குத்திக் காட்ட வேண்டும்?"

"எந்த மனஸ்தாபத்தினால் சொல்கிறேன், தெரியுமா! பிழைக்கத் தெரியவில்லை என்று சொன்னதற்காக அன்று நீ என்னிடம் மன்னிப்புக் கோரினாய்! வாழ்க்கைப் பாதையிலிருந்து வழுவி வந்துவிட்டேன் நான். அந்தமாதிரி நாசத்திற்குப் பதிலாக நான் கோரின ஒன்று நிறைவேறவில்லை. என் இயற்கையையே நான் பாழாக்கிக் கொண்டேன். குருட்டு நம்பிக்கையில் பற்றுடைய நீ உண்மையை அடிப்படையாகக் கொள்ளாத ஒரு பிரதிக்ஞையை இன்னும் மீறுகிறுக்கிறாயே! நீ மன்னிப்புக் கேட்டுத் தான் என்ன! இவ்வளவு தூரத்துக்கு எப்படி வந்தது என்று நீ எண்ணுவதும் எனக்குத் தெரியும்."

"ஆ! அந்து! எனக்கு இன்னும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது! அத்தகைய சக்திகூடவா எனக்கு இருந்தது!"

"உனக்கு எப்படித் தெரியும்? அது உன்னுடைய சக்தி அல்ல, மகாமாயையின் சக்தி! உன் குரல் என்ன அபூர்வமாய்த் தொனிக்கிறது! என் மனமாகிய ஆகாயத்தில் இசையின் சுடரை எழுப்புகிறது! உன் கையும் இந்த விரல்களும் மெய் பொய் இரண்டையும் மறைத்துக்கொள்ளும் மாயாசக்தி வாய்ந்தவை. சிதைந்த என் வாழ்க்கையில் எவ்வளவோ வெறுப்பும் அவமானமும் ஏற்பட்டிருக்கின்றன. எந்த மோக வசத்தால் நான் இன்னும் அவைகளைச் சகித்துக்

கொண்டிருக்கிறேனே? இத்தகைய வீழ்ச்சியைச் சரித்தி ரத்தில் படித்திருக்கிறேன். ஆனால் என்னைப் போன்ற அறிவு படைத்தவனுக்குக் கூட இப்படி நேரும் என்று நான் எண்ணவே இல்லை. இந்த வலையை அறுத்தெறியும் சமயம் வந்துவிட்டது. உன் காதுக்கு இனிமையாக இராது, நான் இப்போது சொல்லப் போகும் சமாசாரம்; ஆனாலும் அது உண்மையாக நடந்ததுதான்."

"எதுவாய் இருந்தாலும் சொல்: என்மேல் கருணையே காட்டாதே! நான் கொடியவள்; நான் ஜடம்; நான் முட்டாள். உன்னை அறிந்துகொள்ளும் சக்தி எனக்கு எப்போதுமே இல்லை. இணையற்ற பாக்கியம் என்னைத் தேடிவந்தது; நான் தகுதியற்றவள்; அதற்குரிய மதிப்பைத் தரவில்லை நான். அந்த அதிருஷ்டம் என் கையைவிட்டு நழுவிப் போய்விட்டது. என்றென்றுமே திரும்பி வராது. இதைவிடத் தண்டனை ஒன்று உண்டானால் அதை எனக்குக் கொடு."

"தண்டனையெல்லாம் கிடக்கட்டும். உன்னை மன்னித்தே விடுகிறேன்; மரணத்தைப்போல் உன் தவறு களைப் பொறுத்துக் கொள்கிறேன். இங்கே வந்தது அதற் காகவே."

"அதற்காகவா?"

"அதற்கென்றேதான்."

"இப்படி வருவானேன், இந்தத் தீயில் விழ? தெரியும் தெரியும், உயிர்வாழ உனக்கு இஷ்டமில்லை. அப்படி யானால் இரண்டொரு தினமாவது எனக்கென்றே வாழ்ந்திடு நீ. உனக்குத் தொண்டு புரியச் சற்று அவகாசம் கொடு. உன் காலில் விழுகிறேன்."

"என்ன தொண்டு அது! இந்த ஓட்டை வாழ்விலா அமிர்தம் சொரியப்போகிறாய்? எனக்கு எவ்வளவு

ஆத்திரம் உண்டு என்று உனக்குத் தெரியுமா? சத்யம் தவறிய ஒரு மனிதனுக்குச் சுசுருஷை செய்து என்ன ஆகவேண்டும்?"

"நீ சத்யத்தைக் கைவிடவில்லை, அந்து. அது அழியாமல் உன் இருதயத்தில் ஒளிர்கிறது."

"அதை இழந்து விட்டேன்! இழந்து விட்டேன்!"

"சொல்லாதே! சொல்லாதே அந்தமாதிரி!"

"நான் எப்பேர்ப்பட்டவன் என்று தெரிந்தால் நீ நடுங்கிப் போவாயே!"

"அந்து, வீணாக உன்னையே நீ நிந்தித்துக் கொள்கிறாய்! எந்தப் பலனையும் எதிர்பாராமல் நீ செய்த காரியத்தில் களங்கம் இருந்தாலும் அது ஒருபோதும் உன் சுபாவத்தைக் கறைப்படுத்தாது."

"என் இயற்கையையே நான் கொன்றுவிட்டேன்! எல்லாக் கொலையையும்விட அதுவே மகா பாபமாகும். தீமையை வேரோடு என்னால் நசுக்க முடியவில்லை; ஆனால் என்னையே நான் அடியோடு நாசமாக்கிக் கொண்டேன். அந்தப் பாபமே நீ அருகில் இருந்தும் உன்னை அடைய முடியாமல் நிற்கிறேன். பாணிக்கிரகணமா?—இந்தக் கையினா? உம்......இதெல்லாம் எதற்கு? இந்தக் கறையெல்லாம் இதோ சீக்கிரத்தில் இருண்ட வைதரிணி* ஆற்றில் மறைந்துவிடப் போகிறது. அதன் எல்லையில்தான் வந்து நிற்கிறேன். இனிமேல் மனசுக்குச் சந்தோஷமாக ஏதாவது பேசிக்கொண்டிருக்கலாம். அன்று நடந்த பிறந்த நாள் கொண்டாட்டத்தைப்பற்றி மீதியும் சொல்லி முடித்துவிடுகிறேன். என்ன, எலி?"

---

* நரக ஆறு.

"அந்து, என் மனம் அதில் ஊன்றவில்லை."

"நம் இருவர் வாழ்விலும் என்றும் ஞாபகத்தில் இருக்கக் கூடிய விஷயம் இரண்டொன்று, உல்லாஸமான அந்த நாட்களில்தான் நடந்தன. மற்றத் தினங்கள் கவனம் இருந்தால் என்ன, இராவிட்டால்தான் என்ன...?"

"சரி. சொல்லு, அந்து."

"பிறந்த நாளன்று எல்லோரும் சாப்பிட்டாயிற்று. "பலாசி யுத்த வர்ணனை"யை ஸ்வரத்துடன் சொல்ல நீரத னுக்குத் திடீரென்று ஆசை கிளம்பிற்று. †கிரீச் கோஷின் பாணியில் கையை ஆட்டி,

‡'—கோதா ஜாஓ பிரே சாஓ ஸஹஸ்ர கிரண,
பாரேக பிரியா சாஓ, ஓகோ தினமணி!'—

என்று ஒப்பித்தான். நீரதன் நல்லவன்; மிகவும் சகஜமான மனுஷ்யன். அவன் ஞாபகசக்தி சமயத்தில் அவனைக் காலை வாரி விட்டுவிடும். சபை கலையாதா என்று என் மனம் திணறும்போது அவர்கள் பவேசனைப் பாடச் சொல்லித் தூண்டினார்கள். 'ஹார்மோனிய சுருதி இல்லாமல் எனக்குக் குரல் எழும்பாது' என்றான் அவன். நல்ல காலம் உன்னி டம் அந்தச் சனியன் இராமல் இருந்ததே! அந்தச் சங்கடத் திலிருந்து மீண்டேன். எல்லாம் முடிந்தது என்று நான் சந்தோஷப்படும் சமயத்தில் ஸது, 'மனுஷ்யன்' பிறந்த நாள் நக்ஷத்திரத்திலே வருமா?' திதியிலே வருமா?' என்று ஒரு தர்க்கத்தைக் கிளப்பி விட்டான். 'நிறுத்து' என்று எவ் வளவோ சொல்லியும் அவன் நிறுத்தவில்லை; தேசாபிமானத் தின் வாடையும் கலந்தது. அதனுடன் உரத்துப் பேச

---

*நவீனசந்திர ஸேன் எழுதிய நாடகம்.

†பெரிய நாடக ஆசிரியர்.

‡போவதும் எங்கே? திரும்பியே நீ பார்! ஆயிரங் கதிரோனே! பாராய் ஒருதரம் திரும்பிப் பாராய், பகலவனே; பாராய்!

ஆரம்பித்து விட்டார்கள். மனஸ்தாபம் மூண்டது. உன் மேல் எனக்குக் கோபமாக வந்தது. என் பிறந்த நாளைக் கொண்டாடினது வெறும் சாக்கு; தேச சேவையின் பொருட்டுத் தோழர்களையெல்லாம் ஒன்று கூட்டுவதுதானே உன் நோக்கம்?"

"எது லக்ஷ்யம் எது சாக்கு என்று வெளியிலிருந்து பார்த்தால் தெரிந்துவிடுமா? அந்து! என்னைத் தண்டித்துவிடு, நீ! ஆனால் அநியாயமான தண்டனைக்கு என்னை உட்படுத் தாதே! உனக்குக் கவனம் இல்லையா? அந்தப் பிறந்த நாளின் போதுதானே, இந்த அதீந்திரயாபுவை நான் அந்து என்று ஆசைப் பெயரிட்டு அழைத்தேன்? அது அற்பமான விஷயமா? 'அந்து' என்று உனக்குப் பெயர் வந்த காரணத் தையுந்தான் நீ சொல்லவேண்டும்."

"லகியே! காது கொடுத்துக் கேள் : எனக்கு நாலு அல்லது ஐந்து வயசு இருக்கும். அப்போது புத்தி தெரி யாத பையன்; பேசவும் எனக்குத் தெரியாது. என் கண் களில் அசட்டுத்தனம் கூத்தாடுமாம்; சொல்வார்கள். பெரியப்பா மேற்கிலிருந்து வந்து என்னைத்தான் முதலில் பார்த்தார். என்னை மடியில் எடுத்து வைத்துக்கொண்டு 'இந்த வாலகில்யனுக்கு யார் அதீந்திரன் என்று பெயர் வைத்தது? இது அதிசயோக்தி. அநதீந்திரன் என்று பெயர் வையுங்கள்' என்றார். அந்த 'அநதி' என்ற பெயரே செல்லமாகக் கூப்பிடும்போது 'அந்து' என்று மாறியது. நீயும் அப்படியே 'அதி' என்பதை 'அநதி' ஆக்கி அந்துவாக மாற்றிவிட்டாய். இப்படி என் பெயரை இழந்து நிற்கிறேன், முழு இஷ்டத்துடன்."

திடீரென அதீன் வாரிப்போட்டு எழுந்து எதையோ கூர்ந்து கவனித்தான். "யாரோ வருகிற சப்தம் கேட்க வில்லை?" என்றான்.

"அகில்!" என்று குரல் கொடுத்தாள் எலா.

"அக்கா!" என்று பதில் வந்தது.

மொட்டைமாடிக்கு வரும் கதவைத் திறந்து, "என்ன?" என்றாள் எலா.

அதில், "சாப்பாடு" என்றான்.

வீட்டில் சமைத்துக்கொள்ளச் சௌகரியங்கள் இராததால் சமீபத்திலே இருக்கும் ஒரு ஹோட்டலிலிருந்து வழக்கம்போல் சாப்பாடு வந்துவிடும்.

எலா, "அந்து, வா, சாப்பிடலாம்!" என்றாள்.

"என்னை வற்புறுத்தாதே; மனிதன் உண்ணாமல் இறக்கச் சில தினங்கள் ஆகும். அப்படி இல்லாவிட்டால் பாரத நாடு இத்தனை நாள் தாக்குப் பிடித்திருக்குமா? தம்பி அதில்! நீ மனசில் வேறு விதமாக எண்ணிக்கொள்ளாதே! என் பங்கையும் சாப்பிடு. 'பலாயனேன ஸமாபயேத்!' (ஓடி விடுவதோடு இங்கே உன் வேலை தீர்ந்தது). இந்த இடத்தில் நிற்கக்கூடாது."

அகிலன் அங்கே நிற்கவில்லை. இருவரும் தரையில் உட்கார்ந்தார்கள். மீண்டும் அதீன் பேசலானான்:

'அந்தப் பிறந்த நாள் கொண்டாட்டம் ஓய்கிற வழியாகக் காணவில்லை. ஒருவராவது எழுந்தால்தானே? நான் அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்து நேரமாவதைக் குறித்துச் சஞ்சலப்பட்டுக்கொண் டிருந்தேன். இது எனக்குச் சகிக்கவில்லை. கடைசியில் உன்னைப் பார்த்து நான், 'நீ பொழுதோடு போய்ப் படுத்துக்கொள்ள வேண் டாமா? இப்போதுதான் 'இன்ப்ளூயன்லா'விலிருந்து எழுந் தாய். உடம்பு கெட்டுவிடப் போகிறதே!' என்றேன். அப்பொழுதுதான், 'மணி என்ன ஆயிற்று?' என்று கேள்வி பிறந்தது. 'ராத்திரி மணி பத்தரை' என்றேன். சபை கலைவதற்கு அறிகுறியாகச் சோம்பல் முறிப்பதும் கொட் டாவி விடுவதும் தெரிந்தன. 'அதீன் பாபு! நீங்களும்

ளேம்புவதுதானே? ஒன்ருகப் போகலாம்' என்ருன் வடு. 'எங்கே, அப்பா?'[1] என்றேன். 'தோட்டிகள் இருக்கும் இடத்துக்குத்தான். அங்கேபோய், அவர்கள் கள் குடிப் பதைத் தடுக்க வேண்டும்' என்ருன். இதைக் கேட்டதும் என் உடம்பு முழுவதும் பற்றிக்கொண்டு வந்தது. 'குடியை நிறுத்தி விடுங்கள்! அதற்குப் பதில் என்ன தரப் போகிறீர்கள் அவர்களுக்கு?'. என்றேன். அந்த விஷயத்தைப்பற்றி அவ்வளவு காரமாக நான் பேசியிருக்கவே வேண்டியதில்லை! அதன் பலன் வெளியே போகப் புறப்பட்டவர்களெல்லாரும் நின்றுவிட்டார்கள். 'பின்னே என்னதான் செய்யச் சொல் கிறீர்கள்?' என்ருன் வடு. நான் உரத்த குரலில். 'ஒன்றும் செய்யச் சொல்லவில்லே' என்றேன். வரவர உக்கிரமாகிக் கொண்டு வந்தது பேச்சு. உன்னே அரைக்கண்ணுல் பார்த்துக்கொண்டே பெரிய குரல் எடுத்து, 'ஆனல் நான் வருகிறேன்' என்றேன். உன் அறையை விட்டு வெளியே செல்லக் கால் எழவில்லே. திடீரென்று என்னவோ ஒன்று எனக்குத் தோன்றியது. என ஜேபியைத் தடவிப் பார்த் தேன். பெளண்டன் பேனுவை விட்டு விட்டதாகத் தோன்றியது. 'நான் தேடித் தருகிறேன்' என்று வடு மாடிக்குப் போனுன். பின்னுலேயே நானும் ஓடினேன். சற்று இங்குமங்கும் தேடி அலேவதுபோல் பார்த்துவிட்டு வடு கோணல் சிரிப்புடன், 'உங்கள் ஜேபியிலேயே இருக் கிறதோ என்னவோ?' என்ருன். என் பெளண்டன் பேனு என் ஜேபியிலேயே அகப்பட்டு விடுமென்று எனக்குத் தெரியாமல் இல்லே. 'எலா அக்காவுடன் நான் முக்கிய மாகப் பேசவேண்டும்' என்று வெளிப்படையாகச் சொல்ல வேண்டியதாயிற்று. 'வடு' ஆனல் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்' என்ருன்; 'எனக்காகக் காத்திருப்பா னேன்? நீ போகலாம்' என்றேன். வடு விஷமச் சிரிப்புத் தோன்ற, 'ஏன் இப்படி எரிந்து விழுகிறீர்கள், அதீன் பாபு? இதோ போய் விடுகிறேன்' என்ருன்."

மறுபடியும் காலடிச் சப்தம் கேட்கவே, அதீன் திடுக் குற்று நின்ருன். அகிலன் மாடிக்கு வந்தான்; "அதீன்

பாபுவிடம் கொடுக்கச் சொல்லி யாரோ ஒருவர் இந்தச் சீட்டை என்னிடம் கொடுத்தார். அவரை வெளியிலே நிற்க வைத்துவிட்டு வந்திருக்கிறேன்" என்றான்.

எலாவின் இருதயத்தில் திக் என்றது.

"யார் வந்து விட்டார்கள்?' என்றாள்.

அதீன்: அவரை உள்ளே வரச் சொல்வதுதானே?

அகில் உறுதியுடன், "உள்ளே விட முடியாது" என்றான்.

அதீன்: பயம் என்ன? அந்தப் பாபுவை உனக்குத் தெரியுமோ இல்லையோ? அவரை எத்தனையோ தரம் பார்த்திருப்பாயே?

அகில்: எனக்குத் தெரியாது!

அதீன்: மிகவும் தெரிந்தவர். நான் சொல்கிறேன்; பயப்படாதே! நான் இருக்கிறேன்.

எலா: அகில்! நீ போடா, அப்பா! வீணாகப் பயந்து போகாதே!

அகிலன் போய்விட்டான். எலா கேட்டாள்;

"யார், வடுவா வந்திருக்கிறான்?"

"வடுவல்ல."

"பின்னே யார் சொல்லேன்? எனக்கு என்னவோ திகிலாக இருக்கிறது."

"அது இருக்கட்டும். நான் சொல்லவேண்டிய மீதியையும் சொல்லி முடித்து விடுகிறேன்."

"அந்து, என் மனசு அதன்மேல் செல்லவில்லை."

"ஏலா, என் கதையை நான் முடித்து விடுகிறேன். நாழிகை ஆகாது—நீ மாடிக்கு வந்தாயா? நில சம்பங்கியின் வாசனை 'கம்' என்று வீசியது. அந்தப் புஷ்பச் செண்டை எல்லோரும் போன பிற்பாடு என் கையில் கொடுக்க வேண்டுமென்று நீ மறைத்து வைத்திருந்தாய். நாணிக் கண் புதைக்கும் இம்மலரின் மூலம் அந்த வாழ்க்கையில் முதல் முதல் இன்பம் கண்டான். அதற்கு அப்புறம் அதீந்திரநாதனுடைய அபார புத்தியெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக மறதியில் மூழ்கியது. முதல் முதலாக அன்று தான் நீ என்னைக் கட்டி அணைத்துக்கொண்டாய்! 'இந்தா! உன் பிறந்த நாளுக்குப் பரிசு' என்று முதல் முத்தம் தந்தாய். இன்று உன் கடைசி முத்தத்தைக் கோரி வந்திருக்கிறேன்."

மறுபடியும் அகிலன் அங்கே தோன்றி, "அந்தப் பாபு. கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வருவார் போல் இருக்கிறது கேட்டால், 'அவசரமான அலுவல்' என்கிறார்" என்றான்.

"ஏன் பயப்படுகிறாய்? அகில்! அவன் கதவை உடைப்பதற்கு முன்னே அவனை நான் 'தாஜா' பண்ணிவிடுவேன். பாபு அங்கேயே நிற்கட்டும். நீ இந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடி. ஏலாவைப் பார்த்துக்கொள்ள நான் இருக்கிறேன்!" என்றான் அதீன்.

ஏலா அகிலனைத் தன் அருகில் இழுத்து அவன் நெற்றியில் முத்தம் கொடுத்து, "என் கண்ணே! மணியே! நீ போய்விடடா! உனக்காக அதோ நோட்டு முடிந்து வைத்திருக்கிறேன், தலைப்பில். என் ஆசீர்வாதம் உனக்கு. என்மேல் ஆணையாக நீ போய்விடவேண்டும். தயங்கிக் கொண்டிராதே!" என்றாள்.

"அகில், நான் ஒன்று சொல்கிறேன்: அதைக் கவனமாகக் கேட்டுக்கொள். யாராவது உன்னை விசாரித்தால் நீ

சரியான பதிலே சொல்; இன்று இரவு பதினொரு மணிக்கு நானே உன்னை இந்த வீட்டைவிட்டு வெளியே துரத்தி விட்டதாகச் சொல்லு, போ! நான் சொன்னதை நடத்திக் காட்டப் போகிறேன்—போ வெளியே!" என்றான் அதீன்.

ஏலா இன்னும் ஒரு தரம் அகிலனை அருகில் அழைத்து, "எனக்காக நீ பயப்படாதே; கண்ணே, இதோ அந்து அண்ணா இருக்கிறார். ஒரு பயமும் இல்லை" என்றாள்.

அகிலனை நெட்டித் தள்ளிக்கொண்டு அதீன் போகும் போது, "நானும் கூட வரட்டுமா, அந்து?" என்றாள் ஏலா.

கட்டளையிடும் தோரணையில் அதீன், "நீ போக வேண்டியதில்லை" என்று கத்திக்கொண்டே போனான்.

கைப்பிடிச் சுவரின்மேல் மார்பை ஊன்றிக்கொண்டு ஏலா நின்று கவனித்தாள். அவளை மீறிப் பொங்கிப் பொங்கி அழுகை கிளம்பியது. அகிலன் அவளைவிட்டு என் றென்றுமே பிரிந்து போனதாகவே தோன்றியது.

அதீன் திரும்பி வந்தான். ஏலா, "என்ன நடந்தது, அந்து?" என்றாள்.

"அகிலன் போய்விட்டான். உட்புறம் தாழ்ப்பாளை அழுத்தி மூடிக்கொண்டு வந்து விட்டேன்."

"அந்த ஆள்?"

"அவனையும் துரத்திவிட்டேன். காரியத்தைக் கவனிக் காமல் நான் என்னவோ உள்ளே கதையளந்து கொண் டிருந்தேன் என்று எண்ணிக்கொண் டிருந்தான், மகன்! புது விதமான அராபிக் கதை என்று நினைத்தானுக்கும்!—அராபிக் கதைதான்! எல்லாம் கதைதான்! பயங்கரக் கதைகள்!—பயமாய் இருக்கிறதா உனக்கு? ஏலா! என்னைப் பார்த்தால் உனக்கு நடுக்கமாய் இல்லை?"

"உன்னிடத்திலா பயம்? என்ன, நீ சொல்வது?"

"நான் எதைத்தான் செய்ய மாட்டேன்? வீழ்ச்சியின் கீழ்த்தசைக்கு வந்துவிட்டேன். அன்று என் கோஷ்டியார் திக்கற்ற ஒரு விதவையின் பொருளையெல்லாம் கவர்ந்து வந்துவிட்டார்கள். அந்தக் கிழவி மன்மதனுக்குத் தெரிந்தவள்; அவன் ஊர். எங்களுக்கு வழிகாட்டினவனும் செய்தி எட்டவிட்டவனும் அவன்தான். மாறு வேஷத்திலும் அந்த அபலை அவனை அடையாளம் புரிந்துகொண்டு, 'மனு! அப்பாடா! நீ கூடவா இந்தக் காரியத்தைச் செய்யத் துணிந்தாய்?' என்றாள். அப்புறம் அந்தக் கிழவியை உயிருடன் வைக்கவில்லை. தேச உத்தாரணத்துக்கு இந்த மாதிரி வழிகளில் திரட்டிய பணம், வந்தவிதமே போய்ச் சேரவேண்டிய இடத்தில் சேர்ந்துவிட்டது! அன்றோடு என் பிரதிக்ஞையும் முறிந்து போயிற்று. இத்தனை நாளுக்குப் பிறகு 'திருடன்' என்ற கெட்ட பெயர் எனக்கு லபித்தது. திருட்டுச் சொத்தில் கையை வைத்தேன்; பலனை இதோ அநுபவிக்கிறேன். அந்தத் 'திருட்டுப் பயல் அதீனை' வடு காட்டிக்கொடுத்தான். தகுந்த ருஜு இல்லாததால் தண்டனையே அடையமாட்டேனோ அல்லது லேசான தண்டனை கிட்டுமோ என்று, அவன் போலீஸ் ஸூபரின்டெண்டெண்ட் சார்பாக அந்த வழக்கை இங்கிலீஷ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வராமலேயே பங்காளியான ஜயந்த் ஹாஜ்ராவின் ஸெஷன்ஸ் கோர்ட்டுக்கு மாற்றுவதற்காகக் கமிஷனர் உத்தரவைப் பெறவேண்டுமென்று சாக்குச் சொல்லிச் சூழ்ச்சி செய்திருக்கிறான். நாளைக்கு நான் அகப்பட்டு விடுவேன் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும்; என்னைப் பார்த்து நீ பயப்படவேண்டியது தானே? என் ஆத்மா அழிந்துவிட்டது; அதன் இருண்ட பேயுருவத்தைப் பார்த்து நானே மருண்டு நிற்கிறேன்:— இதோ, உன் அறையில் யாருமே இல்லை."

"நீ இருக்கிறாயே!"

"என் கையிலிருந்து உன்னை யாரால் காப்பாற்ற முடியும்?"

"காப்பாற்றாமல் போகட்டுமே! நான் உயிர் வாழ விரும்பினால்தானே?"

"உன்னை ஒரு சமயம் சுற்றி வளைத்துக்கொண் டிருந்த அந்தப் பிள்ளைகள்—அவர்கள் நெற்றியில் நீ ஒவ்வொரு வருஷமும் மங்கள திலகம்* இடுகிறாயோ அதே ஆசாமிகள் என்ன பேசிக்கொண்டார்கள் தெரியுமா?—உன்னை உயிருடன் வைப்பது நல்லதல்ல என்றுதான்."

"அவர்களை விடவா நான் தவறு செய்து விட்டேன்?"

"உனக்கு எவ்வளவோ ரகசியங்கள் தெரியும்; இதில் கலந்தவர்கள் பெயர் விலாசமெல்லாம் தெரியும். உன்னைச் சித்திரவதை செய்து கேட்டால் எல்லாவற்றையும் வெளிப்படுத்தி விடுவாய்"

"ஒரு போதும் மாட்டேன்!"

"இன்றைக்கு வந்திருந்த ஆள் இத்தமாதிரி ஓர் எண்ணத்தோடு வரவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும்? அரசாங்க அதிகாரம் எவ்வளவு கடுமையானது என்று உனக்குத் தெரியுமா?"

எலாவுக்குத் திக் என்றது.

"நிஜமாகவா, அந்து? நிஜமாகவா?"

"ஒரு சமாசாரம் எங்களுக்குத் தெரியும்."

"என்னவோ?"

"இன்று விடியற்பொழுதில் போலீஸார் உன்னைப் பிடித்துக்கொள்ள வரப்போகிறார்கள்."

---

*பாயி போண்டா: சகோதரர்க்குப் பொட்டு இடும் ஒரு நோன்பு.

"ஒரு நாள் போலீஸார் கையில் அகப்பட்டுத்தானே தீரவேண்டும்! இது தெரிந்த விஷயந்தானே?"

"எப்படி உனக்குத் தெரியும்?"

"நேற்று வடு எனக்குப் போட்ட கடிதத்தில், 'போலீஸார் உன்னைப் பிடிக்க வரப்போகிறார்கள்' என்று எழுதியிருந்தான். என்னைக் காப்பாற்றத் தன்னால் முடியும் என்றும் எழுதியிருந்தான்!"

"எந்த வழியில்?"

"நான் அவனைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதாய் இருந்தால் எனக்காக ஜாமீன் நின்று மீட்பதாகச் சொல்லுகிறான்."

அதீனின் முகத்தில் இருள் படர்ந்தது.
"நீ அதற்கு என்ன பதில் எழுதினாய்?"
"அந்தக் காகிதத்தின்மேல், 'பேபே!' என்று எழுதினேனே தவிர வேறு ஒன்றும் இல்லை."

"அந்த வடுவே நாளைக்குப் போலீஸாரைக் கூட அழைத்துவரப் போவதாகச் சமாசாரம் வந்தது. உன் சம்மதத்தைப் பெற்றதும் இந்தப் புலியை ஒருவிதமாகத் தீர்த்துவிட்டு அந்த முதலை உனக்கு நன்மையைச் செய்வது போல் சேற்றில் கொண்டு ஆழ்த்திவிடப் போகிறது! பாவம், ரொம்ப இளகின மனசு அவனுக்கு!"

ஏலா அதீனுடைய பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "அந்து, உன் கையாலேயே கொன்று விடு. அதைவிடச் சௌபாக்யம் வேறொன்றும் இல்லை" என்றதும் தலையைவிட்டு எழுந்து அதீனைப் பல தடவை முத்தமிட்டு, "கொன்று விடு என்னை! கொன்று விடு!" என்று ரவிக்கையைப் 'பர்' என்று கிழித்து மார்பைக் காட்டினாள். அதீன் கற்சிலை போல் கடினமான உறுதியுடன் நின்றான்.

"ஏன் யோசனை பண்ணுகிறாய்? அந்து, நான் உனக்கே உரியவள். முழுவதும் உனக்கே சொந்தம். மரணத்திலும் உன்னை விட்டுப் பிரியாதவள். என்னை ஏற்றுக்கொள். அவனுடைய அசங்கியமான கை என் உடம்பைத் தீண்ட வேண்டாம். என் உடலும் உன்னுடையதே!"

அதீன் மிகவும் கடினமான குரலில், "போ! நான் சொல்கிறேன். போய்ப் படுத்துக்கொள்" என்றான்.

அதீனை மார்போடு இறுக்கிக் கொண்டவளாக எலா, "அந்து, என் பிரிய அந்து! என் ராஜா! என் தேவா! உன் மேல் எனக்குள்ள காதல் இவ்வளவு அவ்வளவன்று. இது வரை அதை நான் அறியாமல் இருந்தேனே! அந்த உயர்ந்த அன்பின்மேல் ஆணை! கொன்றுவிடு! கொன்றுவிடு என்னை!" என்றாள்.

அதீன் எலாவின் கையை அழுத்திக்கொண்டு அவளைப் படுக்கையறைக்கு இட்டுச் சென்றான்.

"படுத்துக்கொள்! படுத்துக்கொள்! நன்றாகத் தூங்கு."

"எனக்குத் தூக்கம் வராது."

"தூங்கப் பண்ணும் மருந்து என் கையில் இருக்கிறது."

"இதற்கு அவசியமே இல்லை, அந்து. நான் நினை வோடு இருக்கும் இந்தக் கடைசி நிமிஷமே என்னை ஆட்கொள். 'குளோரோபாரம்' கொண்டு வந்திருக்கிறாயா? அதை விட்டெறி, நான் கோழை அல்ல. விழித்துக் கொண் டிருக்கும்போதே உன் மடியில உயிர் நீங்கும்படி செய். கடைசி முத்தம் இன்னும் கொடுத்தாகவில்லையே! அந்து! அந்து!"

தூரத்திலிருந்து விளையின் ஒலி வந்தது.

முற்றும்

PRINTED AT THE MADRAS LAW JOURNAL BH. PRESS. TDR.

எங்கள் புதிய வெளியீடுகள்

வெண்முகில் - வி. ஸ. காண்டேகர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ.

காண்டேகரின் நாவல்களுக்குள்ளே கதை ஓட்டம் மிகுந்தது இது. சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைப் படம் பிடித்து, குறைகளை நீக்கும் வகையைத் தெளிவாகக் கூறுகிறது. பாத்திர சித்திரங்களும் அற்புதமாக அமைந்திருக்கின்றன. 3 8

மணல் வீடு - 'அநுத்தமா'

விநோதா இளம் விதவை; அவள் அநாதாசிரம வேலையில் ஈடுபடுகிறாள். டாக்டரான அவள் மைத்துனன் அவளிடம் நெருங்கிப் பழகுகிறான். அந்தத் தூய அன்பு, சந்தேகத்தை எழுப்புகிறது. டாக்டரின் காதலியே சந்தேகிக்கிறாள். கல்யாணம் தடைப்படுகிறது. தூய அன்பையும் இளம் விதவைகளின் வாழ்க்கையையும் வைத்துப் புனைந்த ஆயிரம் ரூபாய்ப் பரிசுக் கதை. 3 0

நல்ல பிசாசு - ஆனை ஸா. குஞ்சிதபாதம்

வாழ்க்கையில் நாம் தினசரி காணும் மனிதர்களின் குண சித்திரங்களையும் நாம் காணாத அமானுஷ்ய கதாபாத்திரங்களையும் வைத்து எழுதிய கதைகள். 2 8

குங்குமச் சிமிழ் - ஆர்வி

இன்பமான சுவையும் தெளிவும் நிறைந்த நடையில் எண்ணச் சுழலையும் வாழ்க்கைப் பிரச்னைகளையும் குழைத்துத் தீட்டிய வர்ணச் சித்திரங்கள் போன்ற மணி மணியான கதைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை; ஒவ்வொரு ருசி. 2 0

கலைமகள் காரியாலயம், சென்னை - 4.